
2017 ஜூன் 12
திங்கள்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 17 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 088

NAVAMANI DAILY
நவமணி දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்


QD / 154 / NEWS / 2017



ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 17 - ஜூன் 12, திங்கள்

## ரமழான்
தொழுகை நேரங்கள்

| ஸஹ்ர் முடிவு | சுபஹ் | சூ.உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|---|---|
| 04:17 | 04:31 | 05:55 | 12:11 | 03:39 | 06:26 | 07:43 |



புரியாத புதிர் 04

தலையில் பந்து தாக்கி திசரவுக்கு உபாதை 12

# ஜனாதிபதி இன்று யாழ். விஜயம்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு, இன்று நடைபெற உள்ள அபிவிருத்தி குழு கூட்டத்தில், கலந்து கொள்ள உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கூட்டம் இன்று பிற்பகல் யாழ். செயலகத்தில் நடைபெற உள்ளது. இதன்போது, மாவட்டத்தில் அபிவிருத்தி மற்றும் மீளாய்வுகள் தொடர்பில் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதம் கமைய

11 »»»»

# விசாரணைக்கு முன்பே தீர்ப்பு கூறும் பொலிஸார்

## அமைச்சர் றிஷாத் காட்டம்



சொல்லொன்று செயல் வேறாக தமிழர்களும் முஸ்லிம்களும் நடந்துகொண்டால் அவர்களுக்கிடையிலான உறவுகள் ஒரு போதும் தழைத்

11 »»»»

# ஞானசார தேரரை கண்டுபிடிக்க முடியவில்லை
# கைவிரிக்கும் பொலிஸ்



■ அ.அருண் பிரசாந்த்

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரர் மறைந்துள்ள இடத்தை இன்னும் தங்களால் கண்டுபிடித்துக் கொள்ளமுடியாதுள்ளது என்று பொலிஸ் பேச்சாளரான பிரியந்த ஜயகொடி தெரிவித்தார். அத்தோடு, நாட்டில் இன,மத ரீதியாக குழப்பத்தை

11 »»»»

# ஞானசாரர் மீதான வழக்கு இன்று



ஹோமாகம நீதிமன்றத்தினை அவமதித்த வழக்கு தொடர்பாக கலகொட அத்தே ஞானசார மீது போடப்பட்டுள்ள

11 »»»»

# வீதி ஒரு மருங்கு முறை இன்று முதல் அமுல்

கொழும்பு நகரின் வீதிகள் மற்றும் கொழும்பிற்கு நுழையும் வீதிகளில் இன்று முதல் வீதி ஒரு மருங்கு முறையை கடுமையாக அமுல்படுத்தவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி காவற்துறைமா அதிபர், பிரியந்த ஜயகொடி இதனைக்கு குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் போக்குவரத்து பிரிவு மற்றும் நகர்ப்புற போக்குவரத்து பிரிவும் இணைந்து இந்த வீதி ஒரு மருங்கு முறையை

11 »»»»

# எரிக்கப்பட்ட முஸ்லிம் சொத்துகளுக்கு உடன் இழப்பீடு வழங்கவும்

## நாமல் ராஜபக்ஷ அரசுக்கு வேண்டுகோள்



தொடர்ச்சியாக தீ வைத்து எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் முஸ்லிம் வர்த்தக நிலையங்களை இவ்வரசு பொறுப்பேற்று சீர் செய்து வழங்குவதுடன் அவர்களுக்கான இழப்பீடுகளையும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது ஊடக பிரிவு வெளிவிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது..

ஒவ்வொரு நாளும் குறைந்தது முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான ஒரு வர்த்தக நிலையமாவது தீ வைத்து எரிக்கப்படுகின்றது. இதனை முஸ்லிம்கள் பெரிய விடயமாக

11 »»»»

# ஞானசார தேரர் சட்ட விரோதமாக நாட்டைவிட்டு தப்பியோட்டம்?

பொலிஸ் பேச்சாளர் சந்தேகம்

■ அ.அருண் பிரசாந்த்

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தேடப்பட்டுவரும் சந்தேகநபரான பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நாட்டை விட்டு சட்டபூர்வமாக வெளியேறியிருக்க வாய்ப்பில்லை என்று குறிப்பிட்ட பொலிஸ் பேச்சாளரான பிரியந்த ஜயகொடி, சட்டவிரோதமான முறையில் அவர் தப்பிச்சென்றிருக்கலாம் எனும் சந்தேகத்தையும் மறைமுகமாக நேற்றைய தினம் வெளியிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த இவரிடம், ஞானசார தொடர்பில்


11 »»»»





வளைகுடா நாடுகளுக்கிடையே ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்ட கட்டாருக்கு ஆதரவு தெரிவித்து துருக்கியிலும் பலஸ்தீனிலும் அமைதி ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. துருக்கி மற்றும் பலஸ்தீனின் காஸா பகுதியில் கட்டாருக்கு ஆதரவு தெரிவித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணிகளின் படங்களைக் காணலாம்.

# கொழும்பு - திருமலை பஸ்மீது கலேவலையில் தாக்குதல்




■ ஏ.ஆர்.எம்.றிபாஸ்

இலங்கை போக்குவரத்து சபையின் கிண்ணியா பஸ் நிலையத்துக்கு சொந்தமான பஸ் மீது இனந் தெரியாத நபரினால் கல் வீச்சு நேற்று இரவு 10.00 மணியளவில் கொழும்பிலிருந்து கிண்ணியா நோக்கி புரப்பட்டு வந்த கிண்ணியா கொழும்பு

11 »»»»

# தற்போதைய இன,மத செயற்பாடுகளுக்கும் பொதுபலசேனாவிற்கும் தொடர்பில்லை

## இப்படி கூறுகிறார் டிலந்த விதானகே

■ அ.அருண் பிரசாந்த்

நாட்டில் தற்போது இடம்பெறும் இன, மத துவேஷ செயற்பாடுகளை பொதுபல சேனா அமைப்பினர் தான் மேற்கொண்டனர் என்று சமூகத்தில் வேண்டுமென்றே தவறான தகவல்கள் பரப்பிவிடப்பட்டுள்ளன. ஆனால், இதற்கும் எமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று பொது பல சேனா அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான டிலந்த விதானகே நேற்று மறுப்புத் தெரிவித்தார். அதே நேரம்,

11 »»»»

# துருக்கி, ஈரானிலிருந்து கட்டாருக்கு உணவு

கட்டார் எதிர்நோக்கியுள்ள நெருக்கடியைத் தொடர்ந்து துருக்கி மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் உணவுப் பொருட்களைத் தாங்கிய விமானங்களை அனுப்பிவைத்துள்ளன.

கட்டார் நெருக்கடி ஏற்பட்டு 22 மணி நேரங்களில் துருக்கியும் ஈரானும் 90 தொன் உணவுப் பொருட்களைச் சுமந்த ஐந்து விமானங்களைக் கட்டாருக்கு நேற்று அனுப்பிவைத்துள்ளன. மேலும் மூன்று

11 »»»»

# நுகேகொடையில் கைதான நபருக்கும் பொதுபலசேனாவிற்கும் தொடர்பா?
## பொலிஸார் தீவிர விசாரணை
## புரவசிபலயவுக்கு பூஜித தெரிவிப்பு

நுகேகொடை, மகரகம முஸ்லிம் வர்த்தக நிலையங்களுக்கு தீ வைத்த நபருக்கும் பொதுபல சேனா அமைப்புக்கும் தொடர்பு இருக்கின்றதா? என்பதை தொலைபேசி அழைப்புகளினூடாக ஆராய்ந்து, விசாரணைகளை முறையாக முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் கூறியதாக புரவெசி பலய

11 »»»»

# சமூக பிரச்சினைக்காக ஒன்றுபட்டு உழைக்கும் காலம் கனிந்துவிட்டது

## சம்மாந்துறையில் அமைச்சர் றிஷாத்





(ஏ.எல்.எம். சலீம்)

முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள சோதனைகளையும் நெருக்கடிகளையும் தீர்த்துக் கொள்ளும் வகையில் முஸ்லிம் சமூகத்தை சார்ந்த அனைத்து இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் சமூகம் சார்ந்த அமைப்புகளும் ஒன்றுபட்டு உழைக்கும் காலம் கனிந்துள்ளதாக அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

சம்மாந்துறையில் கடந்த சனிக்கிழமை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர் மேலும் கூறியதாவது,

முஸ்லிம் சமூகம் ஆபத்தான சூழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. கடந்த அரசின் காலத்தைப் போன்று அல்லது அதைவிட மோசமாக முஸ்லிம் சமூகம் இப்போது பாதிக்கப்பட்டு வருகின்றது. தினமும் முஸ்லிம்களின் பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கிலான செயற்பாடுகள் நடந்த வண்ணமே உள்ளன.

இந்த அரசாங்கத்தின் பங்காளிக்கட்சி ஒன்றின் தலைவன் என்ற வகையிலும் இந்த ஆட்சியை கொண்டுவருவதில் முழுமூச்சாக பங்களித்தவன் என்ற வகையிலும் அரசுத் தலைமைகளுக்கு இந்த விடயங்களை இடித்துரைத்துள்ளேன். ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் முஸ்லிம் சமூகத்தின் வேதனைகளையும் பாதிப்புகளையும் தனித்தனியாகவும் கூட்டாகவும் எடுத்துரைத்துள்ளோம். இவற்றை முடிவுக்கு கொண்டு வருமாறு வலியுறுத்தியுள்ளோம். எனினும் நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக தெரியவில்லை. தொடர்ந்தும் எங்களை சீண்டும் வகையில் இனவாதிகள் தமது மிலேச்சத்தனமான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விடயத்தில் முஸ்லிம் அரசியல் வாதிகள், முஸ்லிம் இயக்கங்கள், சமூகம் சார்ந்த நிறுவனங்கள் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் அனைவரும் கட்சி, அரசியல் மற்றும் கொள்கை வேறுபாடுகள் ஆகியவற்றுக்கப்பால் ஒருமித்த குரலுடனும் ஒருமித்த கருத்துடனும் ஒன்றுபட்டுள்ளனர்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா எங்கள் முயற்சிக்கு பக்க பலமாக நிற்கின்றது. ஜம்மியாவின் வழிகாட்டலில் அவர்கள் எந்த முடிவை மேற்கொண்டாலும் நான் தலைமை பொறுப்பை ஏற்றுள்ள மக்கள் காங்கிரஸ் அதற்கு கட்டுப்படும். முஸ்லிம் சமூகத்திற்காக, அந்த சமூகத்தின் நன்மைக்காக எந்த தியாகத்தை யும் நாங்கள் செய்வதற்கு தயாராக உள்ளோம்.நமது நாட்டில் இனவாதிகளின் இந்த கொடூர செயற்பாடுகள் இப்படி இருக்க சியோனிச வாதிகள் அரபு நாடுகளுக்குள் ஊடுருவி அந்த நாடுகளின் பலத்தை தகர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது முஸ்லிம் சமூகத்திற்கு கவலை தந்துள்ளது. அரபு நாடுகள் மீண்டும் ஒற்றுமைப்பட வேண்டும் என நாம் பிரார்த்திப்போம். அதே போல நமது பிரச்சினைகள் தீரவேண்டும் என இந்த புனித றமழானில் பிரார்த்தனைகளில் ஈடுபடுவோம்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.இந்த நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தரும் மக்கள் காங்கிரசின் பிரதி தவிசாளருமான கலாநிதி இஸ்மாயிலும் உரையாற்றினார்.

## சொத்து இழப்பு படிவங்கள் சிங்கள மொழியில் விநியோகம்

### இரத்தினபுரி மக்கள் அசௌகரியம்

(இரத்தினபுரி எம்.எல்.எஸ்.முஹம்மத்)

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் சொத்து இழப்புக்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் தனியான பிரிவின் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

எனினும் இது தொடர்பாக பொலிஸார் மூலம் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள குறித்த விண்ணப்பப்படிவம் சிங்கள மொழியில் மாத்திரமே வெளியிடப்பட்டுள்ளன.

குறிப்பாக இம்முறை ஏற்பட்ட அனர்த்தத்தில் சிங்கள மக்கள் மாத்திரமின்றி தமிழ் பேசும் மக்கள் பலரும் பாதிக்கப்பட்டனர். ஆனால் சிங்கள மொழியில் மாத்திரம் விண்ணப்பம் உள்ளதால் அதனை உரிய முறையில் நிரப்பிக் கொடுப்பதில் சிங்கள மொழி தெரியாத மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இலங்கையில் தமிழ் மொழியும் அரச கரும மொழிகளுள் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் மேற்படி விடயத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு இடம்பெற்றுள்ள அநீதி தொடர்பில் தமிழ் முஸ்லிம் சமூகத் தலைமைகள் தொடர்ந்தும் அவதானம் செலுத்த மறுப்பது தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அனர்த்த பாதிப்புக்கள் தொடர்பான தகவல் சேகரிப்புப் பணியில் தமிழ் பேசும் அதிகாரிகளையும் இணைத்துக் கொள்ளுமாறும் பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## உலமாக்களின் இப்தார் நிகழ்வு




( மினுவாங்கொடை நிருபர் )

மேல் மாகாண சபை உறுப்பினரும், கொழும்பு மாவட்ட ஐ. தே. க. அமைப்பாளருமான பைரூஸ் ஹாஜியின் கொழும்பு, தெமட்டகொடை இல்லத்தில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இப்தார் நோன்பு துறக்கும் நிகழ்வில், கொழும்பு சம்மாங்கோட்டுப் பள்ளிவாசல் பேஷ் இமாம் அஷ்ஷெய்க் காழி அலாவுதீன் பயான் மற்றும் துஆப் பிரார்த்தனை நிகழ்த்தினார். கொழும்பு உம்மு ஸாவியா, கொழும்பு சம்மாங்கோடு மற்றும் கொழும்பு பெரிய பள்ளிவாசல்களைச் சேர்ந்த உலமாக்கள் உள்ளிட்ட பெருந்திரளான உலமாக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். மௌலவிகளான அப்துல் ஹமீத் பஹ்ஜி, எம்.ஜே.எம். இஜ்லான், எம். இம்தியாஸ் ஆகியோரும் இப்தார் மஜ்லிஸுக்கு பிரசன்னமாகியிருந்தனர்.

## பதுளை ஊவா கல்லூரியில் முதன் முறையாக இப்தார் நிகழ்வு

(பதுளை மேலதிக நிருபர் வாஹிட் குத்தூஸ்)

பதுளை ஊவா கல்லூரியில் முதல் முறையாக விசேட இப்தார் நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஊவா முஸ்லிம் மஜ்லிஸ் பொறுப்பாசிரியை நஸ்லினா தாஜுதீன் பாயிஸ் ஆசிரியை தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ் இப்தாருக்கு ஊவா முஸ்லிம் பெற்றார் சங்கம் அனுசரணை வழங்கியிருந்தது.

ஊவா அதிபர் டி.கே.எம். ஜயதிஸ்ஸ தலைமையில் இடம்பெற்ற இவ் இப்தாரில் ஜட்ஜஸ்ஹில் (நீதிபதிமலை) அஷ்ஷேக் றினாஸ் மௌலவி பிரசங்கத்தை நிகழ்த்தியதுடன், துஆப்பிரார்த்தனையும் புரிந்தார்.

பெற்றோர் மாணவர் சார்பில் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான பெட்டகமும், மற்றும் பெற்றார் அனுஸா, புதல்வி ஷிஹானி சார்பில் மின் விசிறியையும் அதிபரிடம் அன்பளித்தனர்.

நஸ்லினா பாயிஸ் ஆசிரியை ஏற்கனவே ஒருநாள் வழிகாட்டல் முகாம், இரத்ததான நிகழ்வுகளையும் முஸ்லிம் மஜ்லிஸால் சிறப்புற நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. நஸ்லினா ஆசிரியை நிகழ்ச்சியை நெறிப்படுத்திய பெற்றார் பஸ்மி நன்றியுரை நவின்றனர்.

பதுளை பைத்துஸ் ஸக்காத் அமைப்பால் 5 ஸக்காத் பெறுநர்களுக்கு சகல வசதிகளுடனான பெறுமதிமிக்க 5 வீடுகளை கையளிக்கும் நிகழ்வு அன்றைய தினம் ளுஹர் தொழுகைக்குப் பின்பு 2 ஆம் கட்டை மொஹிதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.

பைத்துஸ் ஸக்காத் தலைவரும், பதுளை ஒக்ஸ்போர்ட் சர்வதேச பாடசாலையின் முகாமைத்துவப் பணிப்பாளருமான அஷ்ஷெய்க் ரிஸான் ஸெய்ன் (நளீமி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு மாணவர் தஸ்லீம் (ஹாஷிமி) ஹாபிஸின் கிராஅத்தோடுஆரம்பமானது. நிகழ்வில் அமைப்பின் உபதலைவரும், பதுளை மாவட்ட உலமா சபையின் பொருளாளருமான அஷ்ஷேக் ரூஃபில் (இஹ்ஸானி) பிரசங்கத்தை நிகழ்த்தினார். மொஹிதீன் பேஷ் இமாம் அஷ்ஷேக் இம்தியாஸ் துஆப் பிரார்த்தனை புரிந்தார். ஏற்கனவே இதே பிரதேசத்தின் ஐவருக்கு 5 வீடுகள் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் உலமாக்கள், பள்ளிவாசல்கள் நிர்வாகிகள், அமைப்பின் உறுப்பினர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## நுரைச்சோலையில் விளையாட்டுப்போட்டி

(அபுஹனிபா நிஸ்மின்)

நோன்புப் பெருநாளை முன்னிட்டு ஐக்கிய வர்த்தக சங்கத்தின் தலைவரும், கல்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் தலைவருமான எம்.எச்.எம்.மின்ஹாஜ் ஏற்பாட்டில் எதிர்வரும் 30ஆம் திகதி மாலை 3மணிக்கு நுரைச்சோலை கடற்கரை விளையாட்டு மைதானத்தில் மாபெரும் விளையாட்டு போட்டிகள் இடம்பெற உள்ளன.

இன் நிகழ்வில் சைக்கிள் ஓட்டம், மாட்டுவண்டி ஓட்டம்,மோட்டார் சைக்கில் போட்டி, சிறுவர்களுக்கான விசித்திரமான கலை நிகழ்ச்சிகள் இன்னும் பல நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன. எனவே அனைவரையும் வருகைதருமாறு ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

# சப்ரகமுவ அனர்த்தத்தால் 26,000 மாணவர்கள் பாதிப்பு

## திறைசேரியிலிருந்து 530 மில்லியன்களை கேட்கிறது மாகாணசபை

(ஏ.ஏ.எம்.பாயிஸ் - எம்.எல். எஸ்.மொஹம்மத்)

அண்மைய மழை வெள்ள மண்சரிவு அனர்த்தங்களால் இரத்தினபுரி கேகாலை மாவட்டங்களில் 26 ஆயிரம் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பெருமளவு கட்டிடங்கள் பௌதீக வளங்கள் பெறுமதிமிக்க உபகரணத் தொகுதிகள் உட்பட தளபாடங்கள் பெருமளவு சேதத்துக்குள்ளாகியுள்ளன.

மேற்படி பாதிப்புக்களை நிவர்த்தி செய்து இப்பாடசாலைகளினதும் மாணவர்களினதும் நிலைமைகளை வழமைக்கு கொண்டு வர 530 மில்லியன் ரூபாய்கள் தேவையென சப்ரகமுவ மாகாண கல்வியமைச்சு மாகாண கல்வித்திணைக்களம் ஆகியன மேற்கொண்ட கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீடுகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இதற்கிணங்க மேற்படி கட்டமைப்பை மீளமைப்பதற்கு தேவையான 530 மில்லியன் ரூபாய்களை தந்துதவுமாறு சப்ரகமுவ மாகாண கல்வி தொழிநுட்பத்துறை அமைச்சர் சட்டத்தரணி பானு முனிப்பிரிய அரச திறைசேரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி கேகாலை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான உளவள ஆலோசனை வழிகாட்டல் நிகழ்ச்சிகளை ஆசிரிய ஆலோசகர்கள் வளவாளர்கள் மூலமாக நடத்துதல். வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட மாணவர்களின் கற்றல் தொடர்பான பாடக் குறிப்புகள் ஆவணங்களை நிழற் பிரதி செய்து கொடுத்தல் போன்ற பல்வேறு தேவைகளை இனங்கண்டு செயற்படுத்தி வருகிறது.

அத்துடன் அனர்த்த தினங்களில் பாடசாலைகள் மூடப்பட்டமையால் நிறைவேற்றப்படாத கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை ஈடு செய்வதற்காக சனி, ஞாயிறு தினங்களில் மேலதிக பாடசாலை நாட்களை நடத்தவும் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் நிர்வாகங்களுடன் கலந்துரையாடி அவ்வப்பாடசாலை சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான விதத்தில் இப்பாதிப்புக்களுக்கு தீர்வு காணவும் சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளர் ஜீ.குருப்பு ஆரச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

அத்துடன் இயற்கை அனர்த்த விளைவுகளின் பின் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் அவசர சுத்திகரிப்பு பணிகளில் மாகாண கல்வித் திணைக்களம் ஈடுபட்டதாகவும் அயல் பாடசாலைகளும் சமூக சேவை நிறுவனங்களும் இப்பணிகளில் தமக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கியதாகவும் சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்கள உதவிக்கல்விப் பணிப்பாளர் ஜே.பி.ஜேகப்பிள்ளை தெரிவித்தார்.



இலங்கை சமூக அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் கிண்ணியா துறையடி தக்கியதுள் நூர் பீ ஸாதுல் பஜ்ர் பள்ளிவாசல் ஏற்பாட்டில் நோன்பு திறக்கும் (இப்தார்) நிகழ்வு கடந்த சனிக்கிழமை பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மஹல்லாவாசிகள் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர.

(படம் -கிண்ணியா நிருபர்)



பேருவளை , சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையின் கனிஷ்ட பிரிவு மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் பாடசாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது கனிஷ்ட பிரிவு மாணவத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட செல்வன் யூனுஸ் அஹ்வாத் பாஸிக்கு பாடசாலை அதிபர் எம்.ஆர்.எம். ரிஸ்கி சின்னம் அணிவிப்பதையும் அருகில் பொறுப்பாசிரியரையும் படத்தில் காணலாம்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்ட ஈடாக 888 கோடி ரூபா



வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மாற்றும் சொத்துக்களை இழந்தவர்கட்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கு 888 கோடி ரூபாய் தேவைப்படுவதாக அனர்த்த நிவாரண அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

இந்த நஷ்ட ஈட்டினால் ஒரு சதம் குறைவின்றி சகலருக்கும் வழங்குவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இலங்கை இணைந்திருக்கும் காப்புறுதி நிறுவனத்தின் மூலம் இந்த நஷ்ட ஈடு வழங்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர் 888 கோடி ரூபாவில் 27 கோடி ரூபா பணத்தை குறிப்பிட்ட காப்புறுதி நிறுவனம் விடுவித்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# நாட்டில் நிலவும் வறட்சியால் எட்டு இலட்சம் பேர் பாதிப்பு

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட 11 மாவட்டங்களில் நிலவும் வறட்சி காரணமாக இரண்டு இலட்சத்து 44 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த எட்டு இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக வறட்சி நிலவரம் தொடர்பாக அரசாங்கத்தால் வெளிவிடப்பட்டுள்ள தகவல்களின் படி, வட மாகாணத்தில் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, 54 சதவீதமானவர்கள் வட மாகாணத்திலே பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா உள்ளிட்ட வட மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 931 குடும்பங்களை சேர்ந்த 4 இலட்சத்து 52 ஆயிரத்து 907 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்திலே கூடுதலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களை உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தில் 55 ஆயிரத்து 249 குடும்பங்களை கொண்ட ஒரு இலட்சத்து 94 ஆயிரத்து 251 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை மாவட்டத்திலே கூடுதலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என, பிபிசி செய்திகள் சுட்டிக்காட்டியுள்ளன.

குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களை கொண்ட வட மேல் மாகாணத்தில் 82 ஆயிரத்து 536 குடும்பங்களை சேர்ந்த 2 இலட்சத்து 80 ஆயிரத்து 502 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.வட மத்திய மாகாணம் அனுராதபுர மாவட்டத்திலும் 4 ஆயிரத்து 344 குடும்பங்களை சேர்ந்த 13 ஆயிரத்து 264 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள சில பிரதேசங்களில் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் அந்த இடங்கள் இனம் காணப்பட்டு தண்ணீர் பம்புகள் மூலம் குடிநீர் வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.


# பாராளுமன்றத்தின் வகிபாகம்

ஜனநாயக பங்கேற்றல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஊடாக பொது மக்களின் பாதுகாப்பை வலுவூட்டுவதில் பாராளுமன்றத்தின் வகிபாகம் என்ற தொனிப்பொருளில் அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் விஷேட செயலமர்வொன்று இன்று ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த விஷேட செயலமர்வில் டுனீசியா, கொலம்பியா, நேபாளம், இலங்கை மற்றும் இந்தோசேனியா ஆகிய நாடுகளை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கின்றனர்.

குறித்த நாடுகள் அரசியல் ரீதியான பிரச்சினைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றன. இந்த செயலமர்வில் பங்கேற்பதற்காக சபாநாயகர் கரு ஜெயசூரிய, பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், புத்திக பத்திரன உட்பட்டோர் கடந்த சனிக்கிழமையன்று வொஷிங்டன் புறப்பட்டு சென்றனர்.

# அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பினார் பிரதமர்



வைத்திய பரிசோதனைகளுக்காக கடந்த 27ஆம் திகதி அமெரிக்காவின் நியுயோர்க் நகர்திற்கு சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடு திரும்பினார்.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர்கள், ஒரு சில அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பிரதமரை சந்தித்து கலந்துரையாடி உள்ளனர்.

நியுயோர்க் நகரில் அமைந்துள்ள வைத்தியசாலை ஒன்றில் பல வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்டதாகவும், குறித்த பரிசோதனை அறிக்கைகள் சிறப்பாகவுள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வைத்திய பரிசோதனைகள் நிறைவடைந்ததும்,கடந்த 5ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் ஐக்கிய நாடுகளின் பிரதான செயலாளர் என்தோனியோ குடர்ஸ் மற்றும் பொதுநலவாய நாடுகளின் பொதுசெயலாளர் பெட்ரீசியாவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் மகிழ்ச்சி தெரிவித்திருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரால் மொஹமட் சகாவுல்லா இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். கடற்படை கற்கைநெறியை முடித்துவிட்டு வெளியேறுவோருக்கு நடாத்தும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வருமாறு விடுத்த அழைப்பை ஏற்று அவர் இலங்கை வந்துள்ளதாக கடற்படைப் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கை வந்த பாகிஸ்தான் கடற்படைத் தளபதியை இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரால் ரவிந்திர விஜேகுணவர்தன வரவேற்றார். மொஹமட் சகாவுல்லா இலங்கையில் தங்கியுள்ள காலப்பகுதியில் இலங்கை கடற்படையின் பல்வேறு துறைகளையும் கண்காணிக்கவுள்ளார்.

# ஹெரோயினுடன் பாடசாலை மாணவன் கைது

400 மில்லி கிராம் ஹெரோயினுடன் பாடசாலை மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிபில - மெதகம பிரதேசத்தில் வைத்தே அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் வாகனங்களை சோதனை செய்த போது பொலிஸாரால் நேற்றுமுன்தினம் குறித்த மாணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்படும் போது மோட்டார் சைக்கிளில் அந்த இடத்திற்கு வந்துள்ள நிலையில், பரிசோதனை செய்யும் போது குறித்த மாணவனிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை என்பது தெரியவந்துள்ளது.


தொடர்ந்தும் மேற்கொண்ட சோதனையின் போது அந்த மாணவனின் காற்சட்டை பையில் இருந்து 100 மில்லி கிராம் அளவிலான 4 பைக்கட்டுக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர் மொஹம்மட் பாயிஸ் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக்கடிதத்தை அமைச்சர் றிஷாத் பதியுதீன் அண்மையில் வழங்கி வைத்தார்.2006 ஆம் ஆண்டு கொழும்பு மாநகரசபை தேர்தலில் துஆ கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பாயிஸ் பின்னர் 2009 ஆண்டு மேல்மாகாணசபை தேர்தலில் மீண்டும் துஆ கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதன் பின்னர் 2014 ஆம் ஆண்டு மேல் மாகாணசபை தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

(எம்.எஸ்.எம். முன்தஸிர்)

# இன நல்லிணக்கத்துக்கு முன்மாதிரி ஸகி மௌலானா



மாவனல்லை நகரில் முஸ்லிம்களுக்கெதிராக 2002ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரம் அரனாயக்க பிரதேசத்துக்கு பரவாமைக்கு காலஞ்சென்ற ஸகி மௌலானாவின் பங்களிப்பு முக்கியமானது என அரனாயக்க பிரதேச சபையின் முன்னாள் தலைவர் விஜேசிங்க தெரிவித்தார்.

அரனாயக்க பிரதேச சபை உறுப்பினராக நீண்ட காலம் பணிபுரிந்த எம்.எஸ்.எம்.ஸகி மௌலானாவின் மறைவு குறித்து இரங்கலுரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வில்பொலை ஜும்ஆப் பள்ளிவாசலில் ஜனாஸாத் தொழுகைக்கு முன்னர் மர்ஹூம் மௌலானாவின் மறைவு குறித்து விஜேசிங்க உரையாற்றினார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது.

மௌலானா இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பு செய்தவர். அவர் இன நல்லிணக்கத்துக்கு முன்மாதிரியாக நிகழ்ந்தவர். அவர் பெரும்பான்மை சிங்கள மக்களின் கூடுதலான வாக்குகளால் பிரதேச சபைக்கு தெரிவானவர். மௌலானா அஞ்சல் அதிபராக பணியாற்றியபோது இப்பிரதேச மக்களுக்கு போதிய மொழியாற்றல் இருக்கவில்லை. அவர் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். தந்தியொன்று வந்தாலும் அவரிடம் எடுத்துச் சென்று அதன் விளக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள். மக்களுடன் மிக நெருங்கி செயற்பட்ட மிக நேர்மையான அரசியல்வாதியாகவும் அவர் திகழ்ந்தார்.

வெளிநாடு சென்றிருந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க, அமைச்சர் கபீர் ஹாஸிம் ஆகியோரின் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தார். வெள்ளியன்று காலமான மர்ஹூம் மௌலானாவின் ஜனாஸா நல்லடக்கம் சனியன்று வில்பொலை மையவாடியில் பெருந்திரளானோரது பிரசன்னத்தோடு இடம்பெற்றது.

முன்னாள் அமைச்சர் யூ.எல்.எம். பாரூக் உட்பட முஸ்லிம் முஸ்லிம் மக்களுடன் பெருந்திரளான சிங்கள மக்கள் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

மௌலவி நஸீரும் மௌலானாவின் சேவைகளை பாராட்டி உரையாற்றினார்.

# டெங்கு நோய் தாக்கம்: 5 மாதங்களில் 150 பேர் உயிரிழப்பு

டெங்கு காய்ச்சல் காரணமாக இந்த வருடத்தின் முதல் 5 மாதங்களில் மட்டும் 150 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் உதவி அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் தினங்களில் டெங்கு நுளம்பு குடம்பிகள் அதிகரிக்கலாம் என சங்கத்தின் தலைவர் நஜித் சுமனசேன குறிப்பிட்டுள்ளார்.இதனிடையே, நுளம்புகள் பரவக்கூடிய வகையிலான இடங்களை அழிக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் டெங்கு நோயின் பரவல் அதிகரித்துச் செல்வதே அதற்கான காரணம் என அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இந்த வருடத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 59 ஆயிரத்து 760 பேர், கடந்த 6 மாதத்திற்குள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.இதில் 43 சதவீதம் பேர், மேல் மாகாணத்தை சேர்ந்தவர்கள் என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வருடம் இதுவரை அறியவந்துள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை, வரலாற்றில் பதிவாகியுள்ள அதிகளவான டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜுலை மாதம் முதல் பஸ் கட்டணங்கள் அதிகரிப்பு?



வருடாந்த பஸ் கட்டண திருத்திற்கு அமைவாக எதிர்வரும் ஜுலை மாதத்தில் இருந்து, பஸ் கட்டணம் 6.5 வீதத்தால் அதிகரிக்கப்பட உள்ளதாக போக்குவரத்து துறை பிரதி அமைச்சர் அசோக அபயசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பஸ் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை எனவும், பஸ் சங்கங்கள் தற்போது பஸ் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் கோரிக்கை முன்வைத்துள்ளதாக, அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பிலான தேசிய கொள்கைக்கு இணங்க, ஒவ்வொரு வருடமும் ஜுலை முதலாம் திகதி அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இதற்கமைய அதிகபட்சமாக 6.5 வீதம் கட்டணங்களை அதிகரிக்க முடியும் எனவும் போக்குவரத்து பிரதியமைச்சர் அஷோக அபேசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான விஷேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெற உள்ளது எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

# சிறுவர்களை பயன்படுத்தி யாசகமா? பொலிஸ் நடவடிக்கைகள் ஆரம்பம்

சிறுவர்களைப் பயன்படுத்தி யாசகம் செய்யும் நபர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையினை பொலிஸார் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் மே மாதம் வரை யாசகம் செய்த 18 சிறார்களை பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் ஒப்படைத்துள்ளதாகவும்,இதில் 4 பேர் சிறுவர் சீர்திருத்த நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.ஏனைய 14 சிறுவர்களும் நீதிமன்றின் உத்தரவுக்கமைய அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களைப் பயன்படுத்தி யாசகம் செய்யும் நடவடிக்கை அதிகரித்துள்ளதாகவும், இவர்களை கைதுசெய்வதற்காக சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பிரிவு அலுவலகம் 42 ஊடாக கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் விசேட தேடுதல் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பிலியந்தலை துப்பாக்கி சூடு; மற்றுமொரு சந்தேக நபர் கைது!



பிலியந்தலை துப்பாக்கி சூடு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை, பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.49 வயதுடைய குறித்த சந்தேகநபரை கெகிராவ பஸ் நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபர் நேற்று கெஸ்பேவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்த நபரே இவ்வாறு கைதாகியுள்ளார். மேலும் இவர் ரம்புக்கனை பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குறித்த நபருக்கு எதிராக பலபிடிய மற்றும் ஹோமாகம நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 9ஆம் திகதி போதைப் பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி ஒருவர் மற்றும் சிறுமி ஒருவரும் உயிரிழந்தனர். மேலும், பொலிஸ் அதிகாரிகள் இருவர் உள்ளிட்ட ஐவர் காயமடைந்தனர்.

இந்தநிலையில், முன்னதாக குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 34 மற்றும் 27 வயதான இருவர் அருங்கல்ல - தர்கா நகரில் வைத்து கைதுசெய்யப்பட்டனர்.

NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
12th JUNE 2017 - MONDAY

# அரச பாடசாலைகளுக்கு சமய ஆசிரியர் நியமனம் துரிதப்படுத்தப்படுவது அவசியமேயாகும்

அரசாங்கப் பாடசாலைகளில் சமய பாடங்களைப் போதிப்பதற்கு 5,000 ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நீண்ட காலத்திற்குப் பிறகு கல்வி அமைச்சு இத் தீர்மானத்தை எடுத்துள்ளது. இதனால் அரச பாடசாலைகளில் சமய பாடத்தைப் போதிப்பதற்கு இருந்த பிரதான தடை நீங்கவுள்ளது.

நியமிக்கப்படவுள்ள சமய ஆசிரியர்களில் 670 மௌலவி ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

நாட்டிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளிலும் அதேபோன்று சிங்கள மொழிப் பாடசாலைகளிலும் நீண்ட காலமாக மௌலவி ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாதிருக்கின்றன.

குறிப்பாக சிங்கள மொழி மூலம் முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்கும் சிங்களப் பாடசாலைகள் இஸ்லாம் போதிக்க ஆசிரியர்கள் இல்லாமையால் பெரும் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றன. இதனால் சில பாடசாலைகளில் பௌத்த சமயத்தைப் படிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

'தாம் பதவிக்கு வந்தால் மௌலவி ஆசிரியர் நியமனங்களை வழங்குவோம்' என ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல்களின் போது அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது. ஆட்சியை அமைத்து இரண்டரை வருடங்களின் பின்பே மௌலவி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. காலம் தாழ்த்தியேனும் இத்தீர்மானத்தை எடுத்திருப்பது வரவேற்புக்குரியது.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்திபெற்ற அங்கீகரிக்கப்பட்ட அறபுக் கல்லூரிகளில் மௌலவி சான்றிதழ் பெற்றவர்களுக்கே இதற்கு விண்ணப்பிக்கலாம். அதற்காகப் போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்படவுள்ளது. போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றோருக்கே இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

நீண்டகாலமாக அரபுக் கல்லூரிகளில் படித்து சான்றிதழ் பெற்றோருக்கே போட்டிப் பரீட்சைகளை எதிர்கொள்வதில் சிரமங்கள் இருக்கலாம். எனவே இந்தப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் தயார்படுத்தப்பட வேண்டும்.

முஸ்லிம் கல்வி அமைப்புக்கள் இந்த விடயத்தில் அக்கறை காட்டி இந்த விண்ணப்பதாரிகளை தயார் படுத்த வேண்டும்.

இதேவேளை கல்வி அமைச்சுக்கு இந்த 5000 நியமனங்களை வழங்குவதற்கு பல வாரங்களுக்கு முன்பே அமைச்சரவை அங்கீகாரமளித்தது. இதுவரை விண்ணப்பம் கோருவதற்கு கூட நடவடிக்கை எடுக்கவில்லை. தாமதமின்றி இந்த வெற்றிடங்களை நிரப்புவது அவசியமாகும். இந்த நியமனங்களைச் செய்வதினைத் துரிதப்படுத்த வேண்டும். கல்வி அமைச்சு இதற்கான நடவடிக்கைகளைத் தாமதமின்றி முன்னெடுக்க வேண்டும்.

# புரியாத புதிர்

# அபூஜஹ்லுக்காக அபூதாலிப்களை இழக்காதிருப்போம்

எம்.எம். முஹிடீன் எம்.ஏ. (இஸ்லாஹி)

ஒரு நாளைக்கு ஒரு கடை என்ற அடிப்படையில் முஸ்லிம்களின் வர்த்தகம் குறிவைக்கப்படும் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் முஸ்லிம் சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்பது இந்த நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் வாழும் ஒவ்வொரு முஸ்லிம் குடிமகனினதும் உணர்வாக மாறியுள்ளது.

முஸ்லிம்களுக்கு இவ்வாறு நடைபெறும் போது, முஸ்லிம் அமைச்சர்கள் என்ன செய்கின்றார்கள் என்பது முஸ்லிம்களுக்குள் எழும் முதலாவது கேள்வியாகும். இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு செத்து விட்டதா? என்பது இரண்டாவது கேள்வியாகும். நாம் கொண்டு வந்த அரசியல் மாற்றத்திலும் முஸ்லிம்களுக்கு இந்த நிலையா? என்று கேட்காதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்.

சட்டம் ஒழுங்கு யாவருக்கும் சமனாகும். குற்றம் செய்தவர் யாராக இருந்தாலும், தராதரம் பார்க்காமல் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பது எமது நாட்டு அரசியல் தலைவர்களினதும் பாதுகாப்புப் பிரிவினரதும் மந்திர வார்த்தைகளாகவுள்ளது. விரைவில் பிடிப்போம், கைது செய்வோம் என்பதும் இவர்கள் கூறும் வெற்று ஆறுதல் வார்த்தைகள்.

அனைத்தும் நடந்து முடிந்த பிறகு, குற்றவாளியை சிறைப்படுத்தி, அவருக்காக பல வருடங்கள் வழக்கு விசாரித்து, இறுதியில் பிணையில் அவரை விடுவதனால், இழந்த சொத்துக்கள் மீண்டும் வரப் போவதில்லை. முஸ்லிம்களின் பொருளாதாரத்தை இழக்கு வைத்த இனவாதிகளின் நோக்கம் மட்டும் சிறப்பாக நிறைவேறும் என்பது மட்டும் உண்மையாகும்.

நாட்டில் இனவாத சூழலை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு தேவை சில கபாடி அரசியல்வாதிகளுக்கு இல்லாமல் இல்லை. முஸ்லிம்களை இலக்கு வைக்கும் இனவாதிகளை, இந்த குறுகிய லாபம் தேடும் அரசியல்வாதிகள் இவ்வாறான நாசகார செயலுக்கு பகடைக்காய்களாக பயன்படுத்துகின்றார்கள் என்று சமூகப் பின்னணியுடன் யோசிக்கும் ஒரு முதியவர் சொன்னால் பிழை என்று கூற முடியாது.

இதேவேளை, இந்த இனவாதிகளின் ஆவேச பேச்சுக்களினால் உந்தப்பட்ட சில அப்பாவி மக்கள் இதுபோன்ற நாசகார செயலில் ஈடுபடுகின்றார்கள் குரோதத்தை ஏற்படுத்தி, சிங்கள மக்களுடன் வாழ்வதை விடவும், தமிழ் மக்களுடன் வாழ்வது சிறந்தது என்ற கருத்தை உருவாக்குவதற்கான ஒரு முயற்சியாகவும் இதனைப் பார்க்க வேண்டியுள்ளது.

இந்த மனப்பாங்கின் அடியாக வடக்கு, கிழக்கை ஒன்றிணைப்பதற்கு தேவையான முஸ்லிம்களின் ஆதரவைப் பெறுவதற்கு மூன்றாம் சக்தியொன்று முனைகின்றது எனவும் முன்னாள் அமைச்சர் அதாஉல்லாஹ் தெளிவாக தெரிவித்திருந்த கருத்துக்கள் மறுப்பதற்கில்லை.

எது எவ்வாறு இருப்பினும், இத்தனை நாசகார செயல்களுக்கும் தூண்டுதலை வழங்கும், ஆவேச இனவாதப் பேச்சுக்கள், ஒரு சமூகத்தைப் பற்றிய தவறான கண்ணோட்டத்தை கொடுக்கும் துவேச கருத்துக்கள் என்பன நல்லிணக்கத்தை குழிதோண்டிப் புதைக்கும் நடவடிக்கையாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளன.

சமூகத்தில் இதுபோன்ற இனவாத தூண்டுதல்களை வழங்கும் நபர்கள் தான் இத்தனை குற்றச் மேற்படி ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரிடம் வினவினார்.

அதற்கு அமைச்சர் வழங்கிய பதில் உண்மையில், அமைச்சரின் நடுநிலையான சிந்தனையை புரிந்துகொள்ள ஆதாரமாகவிருந்தது.

'ஞானசார தேரர் அவரது பட்டியலில் குற்றவாளிகளாக குறிப்பிடுகின்றவர்கள் யாரும், இந்த நாட்டிலுள்ள பௌத்த மதகுருக்களுக்கு தரம்குறைந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியவர்கள் அல்லர். இந்த நாட்டிலுள்ள விகாரைகள் மீது தாக்குதல் நடாத்தியவர்கள் அல்லர். இனவாதத்தை தூண்டும் விதமாக ஆவேசப் பேச்சுக்களைப் பேசியவர்கள் அல்லர். ஒரு இனத்தின் மீது மற்ற இனத்தை தூண்டிவிட்டு அவர்களுக்கு சேதம் ஏற்படுத்தியதாக குற்றச்சாட்டுக்குரியவர்கள் அல்லர்.

வட மாகாண முதலமைச்சரும் ஞானசார தேரரின் இனவாத பட்டியலில் இருக்கின்றார். அவர் தனது இனத்துக்கான உரிமைகளைக் கேட்பதற்காக அவரைக் கைது செய்ய முடியாது. இது இவ்வாறிருக்கையில், ஒரு சாராருக்கு எதிராக மாத்திரம் அரசாங்கம் கடுமையாக நடந்து கொள்கின்றது என்ற ஞானசார தேரரின் குற்றச்சாட்டை எவ்வாறு நியாயம் காண முடியும்' என்ற கருத்தில்





உண்மையாகும். இதனை யாரும் மறுக்க முடியாது.

ஒரு சமூகத்திலுள்ள விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் இந்த நல்லிணக்க, சகவாழ்வு நிபந்தனைகளை



என்பது இன்னுமொரு சாராரின் கருத்தாக முன்வைக்கலாம்.

அத்துடன், இந்த நாசகார செயல்கள் நாளுக்கு நாள் இடம்பெறுவதற்கு மற்றுமொரு காரணத்தையும் சிலர் முன்வைக்கின்றனர். ஒரு நகரிலுள்ள போட்டித் தன்மையுள்ள மாற்றுக் கடைகளின் ஆதரவாளர்கள் இந்த இனவாதிகளின் சூழலில் இருந்து கொண்டு, குளிர்காய எடுக்கும் முயற்சியாகவும் இது பார்க்கப்படுகின்றது.

நாட்டில் சிங்கள, முஸ்லிம் முறுகல் நிலைமையை ஏற்படுத்துவதற்கு மூன்றாம் சக்தியொன்று சதி செய்கின்றது என முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் கண்டியில் வைத்து தெரிவித்த கருத்தும் இங்கு நினைவு கூரத்தக்கது.

அஸ்கிரிய பிரிவின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரைச் சந்தித்து விட்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

பள்ளிவாயல்களுக்கு கல் அடிப்பதும், முஸ்லிம்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதும் இதற்கு முன்னரும் நாட்டில் இடம்பெற்றுள்ளன. சிங்கள மக்களையும், முஸ்லிம் மக்களையும் எதிரிகளாக மாற்றி, அவர்களிடையே செயல்களுக்கும் கர்த்தாக்கள் என்பது யாரிடமும் மறைக்க முடியாத உண்மையாகவுள்ளது. நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒரு அமைச்சையே ஏற்படுத்தியுள்ள இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு, பாதகமாக செயற்படுபவர்கள் யார் என்பது பகிரங்க இரகசியமாக காணப்படுகின்றது.

இவ்வாறு இருந்தும் நடவடிக்கை எடுக்க ஏன் தாமதிக்கின்றார்கள் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

பெரும்பான்மை இனத்துக்காக பேசுவது இனவாதமா? என்ற வாதத்தை முன்வைக்கும் இந்த இனவாதிகளுக்கு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன இறுதியாக நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் சிறந்த பதிலொன்றை அளித்திருந்தார்.

ஞானசார தேரரை மாத்திரம் ஏன்? எல்லோரும் குறிவைக்கின்றார்கள். ஞானசார தேரரினாலும் சிலர் குற்றவாளிகளாக காட்டப்படுகின்றனர். அவர்களைப் பற்றி ஏன் அதிகாரத்தில் உள்ள எவரும் கருத்தில் கொள்வதில்லை. அவர்கள் இன்னொரு இனம் என்பதினால் அவர்களுக்கு விசேட சிறப்புக்கள் உள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சர் ராஜித சேனாரத்ன விளக்கமளித்திருந்தார்.

இந்த நாட்டிலுள்ள முஸ்லிம்கள் நிதானமாக செயற்படுகின்றவர்கள் என்பதனை பெரும்பான்மை சமூகத்திலுள்ள ஒரு சில இனவாதிகளுக்கும் நிரூபிக்கும் விதமாக அமைச்சரின் கருத்துக் காணப்பட்டது.

இக்கருத்தைப் பாதுகாப்பதற்கு முஸ்லிம்கள் கடமைப்பட்டுள்ளனர். இன்று நாட்டில் அதிகம் பேசப்படும் செய்திகள் சமூக வலைத்தளங்களிலேயே வெளிவருகின்றன என ஒருசாரார் குறிப்பிடும் கருத்தை மறுப்பதற்கும் இல்லை. பொதுவான இணையத்தளங்கள், முகநூல் பக்கங்கள் என்பவற்றில் அபிப்பிராயம் தெரிவிக்கும் சம்பிரதாயம் திறந்து விடப்பட்டுள்ளது.

இதன்போது, ஆவேசப்படும் படியான கருத்துக்களை முற்றாகத் தவிர்த்து கொள்வது நல்லிணக்க சிந்தனையுடைய ஒவ்வொரு குடிமகனினதும் பொறுப்பாகும். அத்துடன், மதகுருக்கள் தொடர்பில், அவர் சமூகத்தின் பார்வையில் குற்றவாளியாக இருந்தாலும் மரியாதை கொடுப்பதும், அவர் சார்ந்த சமயத்தை மதிப்பதும் நல்லிணக்கத்தினதும் சகவாழ்வினதும் பிரதானமான அம்சங்களாகும்.

அத்துடன், ஒவ்வொரு சமூகத்துக்கும், சமயத்துக்கும் தனித்துவங்கள் உள்ளன. அவற்றை மதிப்பது பல்லினம் வாழும் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரினதும் தார்மீக பொறுப்பாகும். ஏற்றுக் கொள்வது என்பது வேறு, மதிப்பது என்பது வேறு. அனைவருக்கும் அவரவது ஏற்றுள்ள சமயம் முக்கியமானது என்பது ஓர் அடிப்படை மீறுகிறார்கள் என்பதற்காக, அந்த ஒருசிலர் சார்ந்த பெரும் சமூகம் ஒன்று ஏற்றுள்ள சமயத்தையும், அவர்களது தனித்துவங்களையும் பாதிக்கப்பட்டவர்களினால் மீறிவிட முடியாது. இந்த இனவாத விஷமிகளின் எதிர்பார்ப்பும் இவ்வாறு மீறிவிட வேண்டும் என்பதுதான் என்பதை மறந்து விடக் கூடாது.

நாளுக்கு நாள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் முஸ்லிம் சமூகம் அந்த பாதிப்பிலிருந்து மீள்வதற்கான வழிமுறையை அவசரமாக தேடி அடைந்து கொள்ள வேண்டும். அடுத்தவர் வந்து பாதுகாப்பார் என்ற சிந்தனையை விட்டுவிட்டு தனது சொத்தை தான் முடிந்தவரை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க பிரயத்தனம் எடுக்க வேண்டும்.

எல்லாம் முடிந்த பின்னர் வருபவர்களை நம்பியும் பயனில்லை, அவர்களை விட்டால் வழியுமில்லை என்ற ஒரு இக்கட்டான நிலையில் முஸ்லிம் சமூகம் காணப்படுகின்றது.

இன்னும் ஆங்காங்கேயுள்ள முஸ்லிம்களின் பொருளாதார நிலையங்களுக்கும் இனவாத அல்லது இனவாத பெயரிலான தீ பரவாது பாதுகாத்துக் கொள்வதற்கு எமது சமூகத் தலைமைகள் பகீரத பிரயத்தனத்தில் இறங்கிவிட வேண்டும்.

நல்லிணக்கம், சகவாழ்வு என்ற எண்ணக்கருக்களை சரியான முறையில் கடைப்பிடிக்க முஸ்லிம் சமூகம் முன்வரவேண்டும். எமது சமூகத்துக்கு பாதுகாப்பு வழங்க எத்தனையோ அபூதாலிப்கள் இருக்கின்றனர். ஓரிரு அபூஜஹ்ல்களுக்காக எம்முடன் உள்ள அதிகமான அபூதாலிப்களை இழக்கும் படியாக எமது நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளாதிருப்போம்.

# முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் எரிப்புக்கு பின்னால் பாரிய சதி: நல்லாட்சி கண்டும் காணாதது போல் செயற்படுகிறது

## பொறியியலாளர் ஷிப்லி பாறுக்



தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் முஸ்லிம்களுடைய வர்த்தக நிலையங்கள் குறிவைத்து எரியூட்டப்படுகின்ற விடயமானது மிகவும் ஒரு கீழ்த்தரமான செயலாகும். எவ்வாறு இத்தீகள் பரவுகின்றன, இதற்கு பின்னால் ஏதேனும் சதிகள் இருக்கின்றதா என்பதை இந்த அரசாங்கம் வெளிச்சத்திற்கு கொண்டு வராமல் ஏன் மறைக்கின்றது? என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் ஷிப்லி பாறுக் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் தனது ஊடக அறிக்கையிலே தொடர்ந்து குறிப்பிட்டுள்ளதாவது,

கடந்த ஒருசில நாட்களாக தொடர்ச்சியாக ஆங்காங்கே ஒவ்வோர் இடங்களிலும் முஸ்லிம்களுக்கென்று சொந்தமான கடைகள் எரிக்கப்படுகின்றமையானது நிச்சயமாக இதுவொரு திட்டமிடப்பட்ட சதியாகவே இருக்கும் என்பதில் எவ்விதமான சந்தேகமோ மாற்றுக்கருத்தோ கிடையாது.

இந்த விடயத்தில் உடனடியாக அரசாங்கம் தன்னுடைய முழுப்பலத்தினையும் பயன்படுத்தி தன்னுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்ற புலனாய்வுத் துறைக்கு உச்சபட்ச அதிகாரங்களை வழங்கி இச் சதிகளுக்கு பின்னால் இருப்பவர்களை கண்டறிய வேண்டிய ஒரு தேவைப்பாடு இந்த நல்லாட்சி அரசாங்கத்திற்கு இருக்கின்றது என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், இவ்வாறு தொடர்ச்சியாக முஸ்லிம்களுக்குச் சொந்தமான பொருளாதாரங்கள் சூறையாடப்பட்டு எரிக்கப்படுகின்ற சம்பவங்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்த நல்லாட்சி அரசாங்கமானது இவ்வாறு தொடர்ந்து கண் மூடிக்கொண்டு தன்னுடைய ஆட்சியினை நிறுவுவதற்கு பக்கபலமாக மிகப்பெரும் பங்காற்றிய முஸ்லிம் சமூகத்தினுடைய பொருளாதாரங்கள் திட்டமிட்ட முறையில் அழிக்கப்படுகின்றபோது கண்டும் காணாதது போன்று இருப்பதனை நாங்கள் மிக வன்மையாக கண்டிக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இது தொடர்பாக இந்நாட்டினுடைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் இதில் நேரடியாக தலையிட வேண்டும். இதனை உடனடியாக அனைத்து முஸ்லிம் தரப்பினரும் அரசியல்வாதிகளுமாக இணைந்து ஒரு தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டியதொரு தருணத்தில் இருந்து கொண்டிருக்கின்றோம்.

ஆகவே, இவ்விடயத்தில் எதுவிதமான காலதாமதிப்புக்களோ இழுத்தடிப்புக்களோ ஏற்படுத்தாமல் உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு அனைத்து முஸ்லிம் அரசியல்வாதிகள், அதேபோன்று அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் சிவில் அமைப்புக்கள், பொதுச் சிவில் அமைப்புக்கள் என அனைவரும் ஒன்றுபட்டு இந்த நாட்டிலே இனவாத சக்திகள் இவ்வாறான விடயங்களுக்கு பின்னால் இருந்துகொண்டு முஸ்லிம்களை குறிவைத்து அவர்களுடைய பொருளாதாரத்தினை திட்டமிட்டு அழிக்கின்ற இவ்வாறான விடயங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஒற்றுமைப்பட்டு பாடுபடவேண்டிய ஒரு தேவைப்பாடும் அவசியமும் எமக்கு இருக்கின்றது என அவர் தெரிவித்தார்.

எவ்விதமான பாரபட்சமுமில்லாமல் உடனடியாக இதற்கானதொரு தனியான விசாரணை ஆணைக்குழுவினை உருவாக்கி விசேடமாக மூவினத்தினையும் உள்ளடங்கியதான விசேட பொலிஸ் பிரிவினை நிறுவுவதனூடாக இவ்வாறான சம்பவங்களுக்குப் பின்னால் இருக்கின்ற உண்மையினை ஆராய்ந்து அதற்குரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதனூடாக இவ்விடயத்தினை கட்டுப்படுத்த இந்த அரசாங்கம் முன்வர வேண்டும்.

இந்நாட்டினுடைய இறைமையையும் ஒற்றுமையையும் சீர்குலைத்தார்கள் என்ற அடிப்படையில் இச்சதிகளுக்குப் பின்னால் இருக்கின்றவர்களுக்கு அதிகபட்ச தண்டனைகளை வழங்குவதனூடாக முஸ்லிம்களுக்கு இழைக்கப்படுகின்ற இவ்வாறான அநீதிகளை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டிய ஒரு தேவைப்பாடு இந்த அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

வெறுமனே கண்டும் காணாதது போன்று இவ்விடயங்கள் விடப்பட்டுக்கொண்டு செல்லப்படுமாக இருந்தால் இந்த அரசாங்கத்திற்கு எதிராக முஸ்லிம்கள் வீதிகளில் இறங்கி ஜனநாயக ரீதியாக போராடுவதோடு மாத்திரமல்லாது சர்வதேசத்தின் கவனத்தினை ஈர்ப்பதற்கான அனைத்து விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். மற்றவர்களை குறை கூறி நம் ஒற்றுமையை நாமே இல்லாமல் செய்வதை விட்டுவிட்டு தங்களால் முடிந்த ஆக்கபூர்வமான விடயங்களை செய்வது இந்நாட்டு முஸ்லிம் சமூகத்திற்கு பயனுள்ளதாக அமையும்.

எனவே, முடிவுமானவர்கள் ஜனநாயக ரீதியாக எமது எதிர்ப்புக்களையும் இந்நாட்டு முஸ்லிம்களின் பிரச்சினைகளையும் ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்கள் ஆகியோருக்கு கொண்டு செல்ல தம்மாலான பங்களிப்புக்களை செய்ய முன்வருவோம். அது மாத்திரமல்லாமல் முஸ்லிம்களுடைய விடயத்தில் இந்த அரசாங்கம் பொடுபோக்காகவே இருக்கின்றது என்பதனையும் நாங்கள் உணர்ந்து கொள்கின்றோம் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.







புனித ரமழானை முன்னிட்டு விசேட மார்க்கச் சொற்பொழிவும் இப்தார் நிகழ்ச்சியும் நேற்று 9ஆம் திகதி பம்பலபிட்டி கொதலாவல வெனியுவில் உள்ள பெண்கள் ஸாவியாவில் நடைபெற்றது. இத்திஹாத் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத் ஏற்பாட்டிலான நிகழ்வில் மௌலவி கலாநிதி முகம்மத் அஸ்வர் (அல்-அஸ்ஹரி) , தலைவர் அல்ஹாஜ் தலாத் இஸ்மாயில் ஆகியோர் உரையாற்றுவதையும், பங்குபற்றியோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். இத்திஹாத் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத் அமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் பஹ்மி இஸ்மாயில் உட்பட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(படம் பேருவளை பீ.எம். முக்தார்)

## ராஜிதவும் அவரது மகனும் இந்நாட்டின் பெரிய பொய்யர்கள்

### பியல் நிஷாந்த எம்.பி.குற்றச்சாட்டு

இலங்கை அரசியலில் ராஜிதவையும் அவரது மகன் சதுர சேனாரத்னவையும் போன்ற பொய்யர்கள் இருக்க முடியாது எனவும் இவர்கள் இருவரும் பொய்யின் பிறப்பிடம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பியல் நிஷாந்த குறிப்பிட்டுள்ளார்.

பொதுபல சேனாவை நோர்வே உருவாக்கியதாக மஹிந்த அரசாங்கத்தில் கூறியவர் அண்மையில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் என கூறினார்.

இப்போது ஞானசார தேரரை நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் பாதுகாப்பதாக அமைச்சரவை தீர்மானம் அறிவிக்கும் ஊடக மாநாட்டில் கூறியுள்ளார். அது மட்டுமல்லாமல் ஞானசார தேரரை கைது செய்ய நீதிமன்ற பிடியாணை வழங்கப்படாத நிலையில் அது தொடர்பிலும் பொய் கூறியுள்ளது இப்போது அம்பலமாகியுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் டன் பிரியசாத் எனும் வாலிபர் கைதான போது அவர் நில்பலகாயவை சேர்ந்தவர் என கூறி, பின்னர் மூக்குடைந்து கொண்டார். முன்னர் பொதுபல சேனாவை உருவாக்கியது நோர்வே என்றார் பின்னர் கோத்தா என்றார். இப்போது நல்லாட்சி அமைச்சர் பாதுகாப்பதாக கூறுகிறார்.

அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த ஒருவர் இவ்வாறு நடப்பது மிகவும் கவலைக்குரிய விடயம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நாவலப்பிட்டி டன்சைட் தொழிற்சாலை எரிந்து நாசம்

(ஹட்டன் க.கிஷாந்தன்)

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான நாவலப்பிட்டி ஹப்புகஸ்தலாவ பிரதான வீதியில் அமைந்துள்ள டன்சைட் தனியார் தோட்ட தேயிலை தொழிற்சாலையில் ஏற்பட்ட தீயினால் குறித்த தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 9 ஆம் திகதி இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெலம்பொட பிரதேசத்தைச் சேர்ந்த ராஸிக் என்பவர்க்குச் சொந்தமான டன்சைட் எனும் தேயிலை தொழிற்சாலையே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

தீயை அணைக்க நாவலப்பிட்டி பொலிஸாரும், பொது மக்களும் முயற்சித்த போது தீயினால் தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. தீ விபத்துக்கான காரணம் இதுவரை சரியாக கண்டறியப்படவில்லை என்பதுடன், சேத விபரங்களும் சரியாக கண்டறியப்படவில்லை. மின் ஒழுக்கின் காரணமாக இந்த தீ விபத்து இடம்பெற்றிருக்கலாம் என தொழிற்சாலையுடன் சம்பந்தப்பட்ட நபர் ஒருவர் தெரிவித்தார். அன்றைய தினம் விடுமுறை தினம் என்பதால் தொழிற்சாலை மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யானைதாக்கி குடும்பஸ்தர் பலி

(திருகோணமலை அப்துல்சலாம் யாசீம்)

கெப்பித்திக்கொல்லாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலங்குளம் பகுதியில் தேன் எடுக்கச்சென்றவரை யானை தாக்கியதினால் நேற்றுமுன்தினம் ஐந்து பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் கெப்பித்திகொல்லாவ-ஆலங்குளம் பகுதியைச்சேர்ந்த சாஹுல் ஹமீட் தௌபீக் (44வயது) எனவும் தெரியவருகின்றது.

குறித்த நபர் தனது உறவினர்களுடன் காட்டுக்கு தேன் எடுப்பதற்காக சென்ற போது குட்டியுடன் நின்ற பெரிய யானை தாக்கியதாகவும் அதனையடுத்து சடலத்தை காட்டிலிருந்து கொண்டு வந்ததாகவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

மரணம் தொடர்பாக கெப்பித்திகொல்லாவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சடலம் அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ලංකා සතොස
LANKA SATHOSA லங்கா சதொச

தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவர்

கைத்தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சு

### தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவருடன் தொழில் வாய்ப்புக்கள்

லங்கா சதொச வலையமைப்பானது நாடு முழுவதும் 300 ற்கும் மேற்பட்ட கிளைகளுடன் 30 பில்லியன் ரூபா புரள்வை கொண்ட இலங்கையின் பாரிய சில்லறை விற்பனை நிலையமென்ற நாமத்தை கொண்டுள்ளது. நாம் நமது கீழ்காணும் குறிக்கோள்களை அடைய எதிர்பார்த்துள்ளோம்.

- வாழ்க்கை செலவை குறைத்தல்
- நாட்டு மக்களை வியாபாரங்களுடன் சம்பந்தப்படுத்தல்
- சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கான வியாபார கோரலை நாடு முழுவதும் கொண்டு வர வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல்.

மேற்குறிப்பிட்ட நம் இலக்குகளை அடைய எமது வியாபார நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்த எமது கிளைகளை 500 ஆக அதிகரித்து புரள்வை ரூபா.50 பில்லியனாக அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம். எமது அணியில் இணைந்து கொள்ள விற்பனை உதவியாளர்கள், களஞ்சிய உதவியாளர்கள் வெற்றிடங்களுக்காக தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கான தகைமைகள் உங்களுக்கு இருக்குமாயின் உங்களின் தபாலுறையின் இடது பக்க மூலையில் பதவியை குறிப்பிட்டு பதிவுத்தபாலில் விண்ணப்பத்தை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

### பிரதி பொது முகாமையாளர் (பொறியியல்) - ஒப்பந்த அடிப்படையில்

- தொழிற்துறைக்கு ஏற்ற சேவைகளை வழங்குதல், பிழைகளை திருத்துதல் மற்றும் தொழிற்துறைக்கு வழங்கக்கூடிய வேறுபட்ட புதிய சேவைகள் தொடர்பான வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தல்.
- நிறுவனத்தின் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை திருத்துதல் மற்றும் பராமரித்தல்.
- அனைத்து சில்லறை மற்றும் களஞ்சியசாலை அமைப்பு மற்றும் சீர்திருத்த செயற்பாடுகளுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.
- பிரிவின் அனைத்து செயற்பாட்டு மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைகளுக்காக பிரதேச முகாமையாளர்களை ஒன்றுபடுத்தல்.
- CIDA (ICTAD) அடிப்படையில் எதிர்கால கட்டுமான செயற்பாடுகளுக்காக அனைத்து ஒப்பந்த வேலைகளையும் வெளி நிறுவனங்களுக்கு மாற்றுதல்
- அனைத்து சில்லறை மற்றும் களஞ்சியசாலை அமைப்பு மற்றும் சீர்திருத்த செயற்பாடுகளுக்கான ஒழுங்குகளை சரியான முறையில் மேற்கொள்ளும் பொருட்டு அனைத்து திணைக்களங்களின் தலைவர்களை ஒன்றுபடுத்தல்.
- சில்லறை விற்பனை நிலையங்களில் எந்த உபகரண இடர்பாடுகளும் இன்றி செயற்பாடுகள் மேற்கொள்ளலை உறுதிப்படுத்தல் தொடர்பாக குறித்த பிரதிநிதிகளுடன் சேவை உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழ் குறிப்பிடப்பட்ட 1 அல்லது 2 )**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றை பெற்றிருத்தல்.

உடன்

குறித்த துறையில் முதுநிலை பட்டம்

அல்லது

பதவிக்கு உரித்தான துறையில் ஏற்றுக்கொள்ளப்பட் தொழில் முறை நிறுவனத்தில் உறுப்புரிமை கூட்டுத்தாபனம், சட்டரீதியான திணைக்களம் / நிறுவனத்தில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தது 20 வருடங்கள் முகாமைத்துவ மட்டத்தில் முன் அனுபவம் அல்லது அதில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தில் முன் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.

2. பதவிக்கு உரித்தான துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டய நிறுவனத்தில் உறுப்புரிமை

உடன்

கூட்டுத்தாபனம், சட்டரீதியான திணைக்களம் / நிறுவனத்தில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தது 15வருடங்கள் முகாமைத்துவ மட்டத்தில் முன் அனுபவம்

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

பதவிக்கு உரிய குறித்த துறை தொடர்பில் சிரேஷ்ட முகாமையாளர் (HM) பதவியில் குறைந்தது 05 வருட முன் அனுபவம்

**வயது :**

35 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும்.

**ஆற்றல் மிக்க விண்ணப்பதாரர்களுக்கு கீழ் காணும் தகைமைகள் அவசியம்**

- பகுப்பாய்வு, முரண்பாடுகளை தீர்த்தல் மற்றும் தலைமைத்தாங்குதலுடன் கூடிய கணிப்பீடு முறைகள், பரிசீலனைகளை மேற்கொள்ளல், தரவுகளை வகைப்படுத்தி பகுப்பாய்வு செய்தல் மற்றும் உயர் சுய அபிப்ராயம் மிக்கவராய் இருத்தல் வேண்டும்.
- உறுதியான தலைமைத்தாங்கும் பண்பு மற்றும் தொடர்பாடல் திறன்
- தகவல் தொடர்பாடல் தொடர்பிலான சிறந்த திறன்.
- வெவ்வேறு போதனைகளை உடைய குழுக்களுக்கு தலைமைத்தாங்குதல் மற்றும் வழிகாட்டல் தொடர்பான திறமை, மானிட மற்றும் ஏனைய வளங்களைப்பயன்படுத்தல் மற்றும் பயனுள்ள விதத்திலான முகாமைத்துவம் பற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

நீங்கள் இத்தகைமைகளை கொண்டுள்ளீர்களெனின் உங்களுடைய சுயவிபரக்கோவையுடன், உங்கள் சான்றிதழ் பிரதிகளை இந்த விளம்பரம் பிரசுரமாகி 10 நாட்களுக்குள் எமக்கு கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வையுங்கள்.
(விண்ணப்பிக்கும் பதவியினை உறையின் மேல் இடது கை பக்க மூலையில் குறிப்பிட்டு அனுப்பவும்.)

தலைவர்
லங்கா சதொச லிமிட்டட்,
சதொச செயலாளர் காரியாலயம் இல. 27, 05 ஆம் மாடி வோக்ஷோல் வீதி,
கொழும்பு 02

நவமணி


www.facebook.com/NavamaniOfficial

# ரமழானின் அடைவுகள்

★ ஹப்ஸா கஸ்கர்- மொரட்டுவை பல்கலைக்கழகம்

ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும்(அது) விதிக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங்கள் தூய்மையுடையோர் ஆகலாம். (02:183)

ரமழான் மாதத்தை அல்லாஹுத்தஆலா சிறப்பாக்கித் தந்ததற்கான காரணம் அதில் தான் கண்ணியமிக்க, முழு உலகுக்குமே வழிகாட்டியான புனித அல் குர்ஆன் இறக்கியருளப்



பட்டதாகும். எனவே முழு முஸ்லிம் சமுதாயத்திற்கும் மிகவும் முக்கிய சிறப்பான மாதமாக இப்புனித ரமழான் மாதம் இருக்கின்றது.

இலங்கையை பொறுத்தவரை எமது அரசாங்க பாடசாலைகள் கூட இப்புனித மாதத்தையொட்டி முஸ்லிம்களுக்கு விடுமுறை வழங்குகின்றது. அல்ஹம்துலில்லாஹ்!

எனினும், இந்த விடுமுறையை மாணவர்கள் சிறந்த முறையில் பயன்படுத்துகிறார்களா? என்பது கேள்விக்குறியாகும். இந்த சங்கையான மாதத்தில் அல்குர்ஆன் ஓதுதல், அதனை விளங்க முயற்சித்தல், பயிற்சி பெறல், அதன்படி வாழ்வை அமைத்துக்கொள்தல் என்பன பன்மடங்கு நன்மையை பெற்றுத் தரக்கூடிய விடயமாகும்.

இன்றைய இளைஞர், யுவதிகள் இதனை சரியான முறையில் பயன்படுத்த தவறிவிடுகின்றனர். இன்று பெரியவர்கள், சிறியவர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் வீண் கேளிக்கைகளில் ஈடுபடுகின்றனர். வருடத்தில் ஒருமாதம் பழக்கவழக்கங்களையும், பண்பாடுகளையும் சீர்படுத்திக்கொள்ள வரும் வசந்த காலத்தையும் பயன்படுத்தத் தவறிவிடுகின்றனர்.

இப்புனித மாதத்திலும் அல்லாஹ்வின் கடமைகளை நிறைவேற்றுவதில் பொடுபோக்காக இருந்துவிடுகின்றனர். ரமழான் மாதம் என்பதால் வெறுமனே நோன்பு பிடிப்பதாக எண்ணிக்கொண்டு பட்டினியிலும் தாகித்தும் இருக்கின்றனர்.

நோன்பு வேண்டிநிற்கும் நடத்தை மாற்றங்களையோ, பாவமன்னிப்பையோ, அல்லாஹ்வுடனான நெருக்கத்தையோ பெறத் தவறிவிடுகின்றனர். நோன்பு காலத்தை விளையாட்டுக்களுக்கான அல்லது ஓய்வுக்கான காலமாக கழித்துவிடுகின்றனர். பசித்திருப்பதையும் தாகித்திருப்பதையும் தவிர அடைந்துகொள்வது எதுவும் இருக்காது.

நோன்பானது மனித உள்ளங்களை பாவக்கறைகளை போக்கி நன்மைகளை அரவணைத்துக்கொள்ளக்கூடியது. நோன்பு நரகத்தில் இருந்து பாதுகாக்கும் கேடயம் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.எனவே நரகத்தில் இருந்து எங்களை நாங்கள் பாதுகாத்து ரமழான் மாதத்தை மிகவும் சிறப்பான முறையில் பயன்படுத்தி ரய்யான் எனும் வாயிலினூடாக சுவர்க்கம் செல்ல முயற்சிப்போமாக.

# செவிமடுத்தோம், கட்டுப்பட்டோம்

- அஷ்ஷெய்க் பிர்னாஸ் அஷ்ரப்

அல் குர்ஆனின் மூன்றாவது ஜுஸ்உ முஸ்லிம் உம்மா என்ற கருத்தியலை நிதர்ஷனமாக உணர்த்துகின்ற ஒரு நடைமுறையான 'செவிமடுத்தல்' தொடர்பான வசனங்களுடன் நகர்கின்றது.

செலவளித்தல் பற்றிய வசனங்களை அடுத்து இறைவனின் மாட்சிமையையும் அதிகாரத்தையும் விளக்குகின்ற, அல் குர்ஆனின் அதிமேன்மைக்குரிய ஆயத் என்று வர்ணிக்கப்படுகின்ற 'ஆயதுல் குர்ஸி' இடம்பெறுகின்றது. பிறகு ஆயதுல் குர்ஸியில் குறிப்பிடப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்தும் வகையில் மூன்று நடைமுறை நிகழ்வுகள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

நம்ரூதுக்கும் இப்ராஹீம் (அலை) அவர்களும் தொடர்புபடுகின்ற வசனங்கள், உஸைர் என்ற நபருடன் தொடர்பான வசனங்கள், மீண்டும் இப்ராஹீம் (அலை) அவர்களுடன் தொடர்பான வசனங்கள், உயிர்ப்பிப்பதற்கும், மரணிக்க செய்வதற்குமான இறை வல்லமையை உறுதிப்படுத்துவதே இம்மூன்று நிகழ்வுகளதும் பொது அம்சம்.

பிறகு மீண்டும் செலவளித்தலுடன் தொடர்பான வசனங்களுடன் பொருளாதார முறைமை பற்றிய வசனங்களையும் குறிப்பிட்டு விட்டு ஸூறதுல் பகராவிற்கான ஒரு முடிவுரை வழங்கப்படுகின்றது.

இவ்வாறு 'ஆயதுல் குர்ஸி' வாழ்வியல் முறைமை பற்றிய உரையாடலின் இடைநடுவே வருவதன் புலத்தில் உள்ள ஒரு காரணத்தை எமக்கு சொல்ல முடியும். நாம் பின்தொடர்ந்து செல்கின்ற பாதை இறைவனால் வரையப்பட்டது என்பதை மீளவும் உறுதிப்படுத்தி, சோர்வு நிலையிலிருந்து எம்மை மீட்டெடுத்து திடகாத்திரப்படுத்துவதற்காகவே இறைவன் இவ்வாறான ஒழுங்கை கையாண்டிருக்கின்றான்.மனிதன் மறதி மிக்கவன்.எனவே,அவனுக்கு திரும்ப திரும்ப ஞாபகப்படுத்த வேண்டும்.இந்த வகையில் தான் அல்லாஹுதஆலா இந்த வாழ்வியல் முறைமை தன்னால் வரையப்பட்டது என்பதை ஷன்றி நினைவுபடுத்துகின்றான்.நம்பிக்கையுடன் செயற்பட தூண்டுகின்றான்.

ஆயதுல் குர்ஸி மூலம் இறைவனின் அதிகாரம் பற்றி நினைவுபடுத்தியதன் பிறகு, இதற்கு பிறகும் அவனால் வரையப்பட்ட முறைமைக்குள்ளால் தங்களை சிறைப்படுத்திக் கொள்ள முடியாதவர்களை நிர்ப்பந்திக்க வேண்டாம் என்று அழைப்பு விடுக்கப்படுகின்றது. சான்றாதாரங்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டு, முழுமையான சம்மதத்துடன், தாம் விரும்பினால் மாத்திரமே இந்த முறைமைக்குள்ளால் இணைந்து கொள்ள முடியும் என்ற தெரிவு அனைத்து மனிதர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

தொடர்ந்து உலக ஸ்திரத்தன்மைக்கு இன்றியமையாத மனிதர்களுக்கிடையிலான பரஸ்பர உதவி,ஒத்துழைப்பு குறித்து செலவளித்தல் பற்றிய வசனங்கள் மூலம் வலியுறுத்தப்படுவதோடு, வட்டி இன்றிய வியாபார ஒழுங்கு தான் இந்த உம்மத்தை வழிநடாத்த வேண்டும் என்று உம்மத்தின் பொருளாதார முறைமை அடுத்த வசனங்களில் பொதுமைப்படுத்தப்படுகின்றது.

இறுதியாக, கிலாபா பணியை முன்னெடுப்பதில் தோல்வியுற்ற பனூஇஸ்ராயில் சமூகத்தின் கோஷமாக இருந்த 'செவிமடுத்தோம்,மாறுசெய்தோம்' என்பதற்கு மாற்றமாக, 'செவிமடுத்தோம்,கட்டுப்பட்டோம்' என்ற கோஷமே எமது வாழ்வியல் முறைமையின் நிலைப்பாடாக அமைய வேண்டும் என ஸூறா பகரா ஆசிக்கின்றது. மனிதர்களின் இயல்புகளை முழுமையாக கருத்திற்கொண்டு வரையப்பட்ட இந்த வாழ்வியல் முறைமைக்குள்ளால் வாழ்வை முன்னெடுக்கின்ற போது எதிர்ப்பட முடியுமான பலவீனங்கள்,தடைகளுக்கு இறைவனின் மன்னிப்பையும் கருணையையும் வேண்டுமாறும், இந்த முறைமைக்கு தடையாக அமைகின்ற காபிர்களுக்கு எதிராக, முறைமையை பின்பற்றுகின்ற முஸ்லிம்களுக்கு வெற்றியை அளிக்குமாறு பிரார்த்திப்பதற்கும் வழிகாட்டி,ஸூறா பகரா நிறைவுறுகின்றது.




ஆதில் அலி சப்ரி

- அட்டாளைச்சேனை மன்சூர்

# மீண்டுமோர் பத்ர் களம்

ரமழான் வெற்றியின் மாதம்! நினைவுகூரப்படவேண்டிய பத்ர் களம்!! குரைஷிக் காபிர்கள் இஸ்லாத்தையும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களையும் ஒழித்துக்கட்ட சந்தர்ப்பம் பார்த்திருந்த போது ஹிஜ்ரி 2ல் பத்ர் யுத்தம் நிகழ்கிறது. பொறுமையும், ஈமானில் உறுதியும் கொண்ட நபித் தோழர்களுக்கு அல்லாஹ் மாபெரும் வெற்றியைக் கொடுக்கிறான். அன்று இஸ்லாதின் எதிரிகளுக்கு வெற்றி கிடைத்திருக்குமாயின் இஸ்லாம் உலகில் நிலைத்திருந்திருக்காது. இறைவனின் கட்டளை, இப்போர் இஸ்லாமிய வரலாற்றில் மாபெரும் திருப்புமுனையினை ஏற்படுத்தியிருந்ததைப் பார்க்கிறோம்.

வெற்றியின் மாதம், அல்குர்ஆனின் மாதம், புனிதமிகு ரமழான் மாதாகும். அந்த மாதத்தில் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான பகைமை உணர்வுகள், அவர்களது பொருளாதார மையங்கள் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருவதானது இஸ்லாமியனாக, இஸ்லாத்தில் இருப்பதனால்தானா இத்தனை வலிகளும், துன்பங்களும் வந்தடைகின்றனபோலும். துரத்தப்பட்டு, வீடுவாசல்களை இழந்திருந்த ஒருகாலகட்டம், இப்போது வலிந்து வீண் பிரச்சினைகளுக்குள் தலையிடு செய்யுமாறு நிர்ப்பந்திக்கும் வகையில் இவ்வாறான ஈனச்செயல்களை சிலர் நடத்தி வருகின்றனர். இருந்தும் வீண் பிரச்சினைகளுக்கு, வலிந்து இஸ்லாமியன் செல்லமாட்டான் என்பது உறுதியான விடயமாகும்.

தொனியில் உச்சரிக்கப்படுவதை இன்றைய அரசியல்வாகனத்தில் முக்கியமான கதிரைகளைக் கொண்டுள்ளவர்கள் பேசாமடந்தையாக இருப்பதன் மர்மங்களும் தெளிவில்லாத நிலையை முஸ்லிம்கள் மத்தியில் தோற்றுவித்திருக்கிறது.

''பத்ர் போரில் நீங்கள் மிகவும் சக்தி குறைந்தவர்களாக இருந்தபோது, அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிந்தான். ஆகவே நீங்கள் நன்றி செலுத்துவதற்காக அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள். (நபியே!) முஃமின்களிடம் நீர் கூறினீர்: 'உங்கள் ரப்பு (வானிலிருந்து) இறக்கப்பட்ட மூவாயிரம் வானவர்களைக் கொண்டு உங்களுக்கு உதவி செய்வது உங்களுக்குப் போதாதா?' என்று (ஆலஇம்ரான்:123 ,124)

அன்று இவ்வாறான ஒரு சிறப்பு மிக்க சங்கையான ரமழான் மாதத்தில் பதினேழாம் நாள் இறை மறுப்பாளர்களுக்கு எதிராக, உறுதியான ஈமானுடன் அல்லாஹ்வை முன்னிலைப்படுத்திய போராட்டத்தில் மாபெரும் வெற்றியை அடைந்த வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட உலக முஸ்லிம்களின் உம்மா இன்று பித்தலாட்டங்கள், நவீனத்துவம் என்கிற பேரில் ஏற்பட்டிருக்கின்ற உளத்தூய்மையற்ற மனிதர்களின் கெடுதலுக்குள் அகப்பட்டு முஸ்லிம் சமூகம் பிரிந்து போகும் அபாயத்திற்குள் அகப்பட்டுத் துடிக்கின்றது. இந்நிலை முற்றாக ஒழியப்பட வேண்டும். உலகில் எங்கோர் மூலையில் இஸ்லாத்திற்கும், இஸ்லாமியனுக்கும் ஏற்படுகின்ற மதவிரோதமான செயற்பாடுகளை முற்றாக

கள், தாக்குதல்கள் பரவலானமுறையில் முஸ்லிம்கட்கு எதிராக பல்முனைகளிலிருந்தும் தாக்குதல்கள் முழுவீச்சில் இடம்பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இஸ்லாம் மானிட சமூகத்துக்கே தனித்துவத்தான அன்பு, கருணை, தியாகம் ஆகிய உயர்பண்புகளால் கட்டிக் காப்பற்றப்பட்டு வந்திருக்கின்றமை யாவரும் அறிந்ததே. தன்னை அடித்து துன்புறுத்தி இரத்த மோட்டியவர்களை அழிக்க வானவர்கள் நபிகளாரிடம் அனுமதி கேட்க, கருணையின் வெளிப்பாட்டினை வார்த்தைகளால், ''இல்லை வேண்டாம், இவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இவர்களின் சந்ததியினர் இஸ்லாத்தினை ஏற்றுக்கொள்வர் என'' உலகத்திற்கு அன்பின் தேவையை உணர்த்தியவரே நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள்.



விடிந்தால் ஏதோ ஓர் இடத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பொருளாதார நிலையம் தீப்பற்றி எரிகிறது என்கிற செய்தியே வருகின்றது. நாட்டில் ஜனநாயக ஆட்சிமுறையும், சட்டவாக்கத்தின் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் உள்ள மனித உரிமைகள், மதஉரிமைகள் நிலைப்படுத்தப்பட்டிருக்கும் நிலையிலும் இவ்வாறான அடாத்தனங்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்றமை நிலையான சமாதானத்தினை விரும்புகின்ற ஒவ்வொரு மனிதர்களுக்கும் சாவுமணியடிக்கப்படுவதாகவே நினைக்கத் தோன்றுகின்றது.

இஸ்லாம் உறுதியான கொள்கை கோட்பாடுகளின் மீது கட்டியெழுப்பப்பட்ட மார்க்கமாகும். இஸ்லாமிய அகீதா கோட்பாடு என்பது ஈமானுடன் சம்பந்தப்பட்டதாகும். இந்த அகீதாவைச் சிதைத்து சின்னாபின்னமாக்குவதையே இஸ்லாத்தின் எதிரிகள் குறியாகக் கொண்டிருக்கின்றனர்.

நபி(ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னர் சில பொய்யர்கள் தம்மையும் நபி என வாதிட்டனர். அவர்களுக்குப் பின்னாலும் மக்கள் மந்தைக் கூட்டங்களாகச் சென்றனர். இஸ்லாமிய கிலாபத் பல்வேறுபட்ட நெருக்கடிகளைச் சந்தித்தது. இந்த நேரத்தில் இதைப் பற்றி அலட்டிக் கொள்வதா என அபுபக்கர்(ரழி) அவர்கள் சிந்திக்கவில்லை. போலி நபித்துவ வாதத்தை முன்வைத்த பொய்யர்களுக்கெதிராக அவர்கள் போர் தொடுத்தார்கள். இறுதி நபித்துவம் என்ற இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாட்டைப் பாதுகாக்க பல்லாயிரம் நபித்தோழர்கள் உயிர்த்தியாகம் செய்தனர். கொள்கையைப் பாதுகாக்க நம் முன்னோர் கொடுத்த அந்தவிலை இதிலிருந்து உணர்ந்துகொள்ளலாம்.

இவ்வாறு பாதுகாக்கப்பட்டு வந்த மார்க்கத்தை கொச்சைப்படுத்தி, மதவழிபாட்டு நிலையங்கள், முஸ்லிம்களின் வியாபார நிலையங்களைக் குறிவைத்துத் தாக்குவதன் தாகம்தான் என்ன? அண்மைக் காலமாக இனவாதிகள் கடும்

துடைத்தெறிவதற்கு ஒற்றுமை எனும் கயிற்றினை பற்றிப் பிடிக்க வேண்டிய தருணம் வந்திருக்கிறது. அன்று பத்ர் போரில் வெறும் 313 ஸஹாபாக்களுக்கு இறைவன் கொடுத்த வெற்றியை இன்றும் தருவான் என்கிற நம்பிக்கையுடன், ஈமானியப்பார்வையுடன் நமது ஒவ்வொரு செயற்பாடுகளும் காணப்படுதல் முக்கியமாகும்.

''உங்களை இரட்சிக்குமாறு உங்கள் இறைவனின் உதவியை நாடிய போது:(அணி அணியாக உங்களைப்) பின்பற்றி வரக்கூடிய ஓராயிரம் மலக்குகளைக் கொண்டு நிச்சயமாக உங்களுக்கு உதவி புரிவேன் என்று இறைவன் உங்களுக்கு பதிலளித்தான்.(அல் அன்ஃபால்:9)'' குர்ஆன் கூறுகிறது. நபி(ஸல்) அவர்கள் தலைமையில் 313 சஹாபாக்கள் மற்றும் 2 குதிரைகள், 70 ஒட்டகங்களுடன் சென்ற இஸ்லாமியபடையானது, மக்காவிலிருந்து அபூஜஹில் தலைமையில் 1000 வீரர்கள், 100குதிரைகள், 700 ஒட்டகங்களுடன் வந்த காபிர்களின் படையை வீழ்த்தியது. பத்ர் போரின் வெற்றியின் மூலம் மதினாவில் நிறுவப்பட்டிருந்த இஸ்லாமிய அரசு வலுவடைந்ததோடு, இஸ்லாமிய அழைப்பின் எழுச்சிக்கும் அடிகோலியிருந்ததை மறக்கத்தான் முடியுமா?

இன்றைய காலகட்டத்தில் இஸ்லாமிய உலகும் ஏன் நமது நாட்டிலும் நவீன காலனியாதிக்க வாதிகளின் ஆக்கிரமிப்பு


இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கு வருகை தந்த முஸ்லிம் அராபியர்கள் தங்களுடைய நோக்கம் நாட்டைப் பிடிப்பதோ, மக்களை துன்புறுத்துவதோ அல்ல. அழகிய முறையில் பண்புள்ளவர்களாக, உண்மையான விசுவாசத்துடன், ஈமானியத்தின் அடிப்படையில் நடந்து கொண்டமையினால்தான் இன்று இலங்கையில் அனைத்து ஊர்களிலும், ஏன் அனைத்து நகரங்களிலும் தங்களுடைய இருப்பினை தொடர்ந்து வைத்திருப்பதற்கும், அங்கு தமது மார்க்க கடமைகளுக்காக பள்ளிவாசல்களை நிறுவுவதற்கும் அன்றைய கால அரசர்கள் தொடக்கம், சாதாரண மக்கள் வரையிலும் அனுமதியும் வழங்கி வாழவும் வழிசமைத்திருந்தார்கள்.

ஆனால் இன்றுள்ள மக்களில் சிலர் முஸ்லிம்களையும், அவர்களது முதுகெலும்புகளையும் உடைப்பதற்கும், அழிப்பதற்கும் கங்கணம் கட்டியவர்கள் போல உலாவருகின்றனர். இப்போது முஸ்லிம்களின் புனிதமிக்க ரமழான் மாதம். இன்று முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை இல்லாமல் செய்வதற்கு பத்ர் களத்தில் இறைவனிடம் நாயகம்(ஸல்)அவர்கள் கேட்ட துஆக்களை நாமும் கேட்போம்.

இறைவன் உதவிசெய்வான் என்கிற நம்பிக்கையில் நமது மதக்கடமைகளிலும், ஏனைய சமூகங்களோடு இரண்டறக்கலந்து நமது அன்றாட வாழ்வினை ஓட்டிச் செல்வோம். பொறுமையும், தொழுகையும் உண்மையான முஸ்லிமுக்கு சிறந்த பலனைத்தரும் என்கிற நம்பிக்கையுடன் வெற்றிக்கான மாதமாகக் கருதப்படுகின்ற புனித ரமழான் மாதத்தில் இஸ்லாத்தை அழிப்பதற்காக மேற்கொண்ட பத்ர் களத்தில் பெற்ற வெற்றியையும், அதற்கான போராடி சஹீதாக்கப்பட்ட இறைநேசர்களையும் நினைவுகூருவோம்.

அல்லாஹ் எமக்கு உதவுவான் என்கிற நம்பிக்கையில் நமது அன்றாடக் கடமைகளை முன்னெடுப்போம்.

# இளைஞர்கள் வரலாறு படைக்க...



(அண்மையில் உடுநுவர வட்டதெனிய முஹிதீன் பள்ளிவாசல் மண்டபத்தில் அஷ்ஷெய்க் யூஸுப் முப்தி ஆற்றிய உரையின் தொகுப்பு- வட்டதெனிய தாஹூத்)

முஸ்லிம் வாலிபர்களே! முஸ்லிம் சமூகத்துக்காக வரலாறு. முன்னோர்கள் வாலிபத்திலும், வயோதிபத்திலும் வரலாறு படைத்தார்கள்.

முஸ்லிம் சமூகம் நினைவில் நிறுத்தும் காலமெல்லாம் வரலாறு படைத்தவர்களுக்கு அதிகமான நன்மைகளை அல்லாஹ் வழங்கிக்கொண்டே இருக்கிறான். அவ்வாறே அல்லாஹ் வரலாறு படைக்கும் வாலிபர்களுக்கும் அதிகமான நன்மைகளை அளிக்கொடுத்துக்கொண்டே இருக்கிறான் என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்கிறேன்.

முஸ்லிம் வாலிபர்கள் முஸ்லிம் சமூகத்துக்காகவே வரலாறு படைத்தார்கள் என்றமைக்காகவே இவ்வாறான உறுதியை உங்களுக்கு அளிக்கிறேன்.

கடந்துபோயுள்ள ஐந்து சகாப்தங்களை திரும்பிப் பாருங்கள். பேருவளையில் நழீம் ஹாஜியார், மாத்தளையில் மீரான் ஹாஜியார், கம்பளையில் பதியுதீன் மஹ்மூத் ஹாஜியார், பல்யாளையில் மசூத் ஆலிம் ஆகியோரும் முஸ்லிம் சமூகத்துக்காக வரலாறு படைத்துள்ளார்கள்.

இவ்வுத்தமர்கள் நால்வரும் பெருமைக்காகவோ, பெயர் வாங்குவதற்காகவோ வரட்டு கௌரவத்துக்காகவோ, பட்டம் பதவிக்காகவோ வரலாறு படைக்கவில்லை.

முஸ்லிம் சமூகத்துக்கு உலகம் போற்றும் வரலாறுகளை அவ்வுத்தம சீலர்கள் நால்வரும் படைக்கவில்லை. மாறாக, முஸ்லிம் சமூகத்தின் உள்ளத்தில் ஊன்றிப் பதியவைத்துள்ள வரலாறுகளையே படைத்துள்ளார்கள்.

இத்தகைய உத்தமர்கள், அவர்களுக்கு அல்லாஹ் அளித்த அருட்கொடைகளால் முஸ்லிம் சமூகத்துக்கு வரலாறு படைத்துள்ளார்கள்.

முஸ்லிம் வாலிபர்களே! நீங்கள் படைக்கும் வரலாறுகளை உங்கள் குடும்பத்துக்கும் முஸ்லிம் சமூகத்துக்கு என்றும் பயனுள்ளதாக அமைய வேண்டும்.

முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் பொறுப்புதாரிகள். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான பொறுப்புகளில் அல்லாஹ் அமர்த்தியுள்ளான். அவரவர் பொறுப்புகளை முற்றுமுழுதாக நிறைவேற்ற தவறியவர்கள் அல்லாஹ்வின் முன்னிலையில் கண்ணீர் வடித்து, பாவமன்னிப்பு செய்து தப்பித்துக்கொள்ளலாம்.

பிள்ளை வளர்ப்பின் பொறுப்புதாரிகள் பெற்றோர்களே. பிள்ளைகளை பெருமதியான அமானிதமாகவே அல்லாஹ் அளித்துள்ளான். பெற்றோர்கள் பிள்ளைகளை 15 வயதுக்குள் அவர்களின் பொறுப்புக்களை சரிவர நிறைவேற்ற தவறி எப்படியெல்லாம் அழுது பாவமன்னிப்பு கோரினாலும் அல்லாஹ்வின் மன்னிப்பு கிடைக்காது. மாறாக, இம்மை மறுமை இரண்டிலும் பிள்ளை வளர்ப்பில் தவறு செய்யும் பெற்றோருக்கு அல்லாஹ் சோதனைகளை கொடுத்துக்கொண்டே இருப்பான்.

கட்டாய கடமையான பிள்ளை வளர்ப்பில் அசமந்தப்போக்கில் இருந்துவிடாதீர்கள். இவ்வாறான அலட்சியம் காரணமாகவே எத்தனையோ பெற்றோர்கள் என் பிள்ளை கெட்டுப்போய்விட்டான் என்று கவலைப்படுகின்றனர்.

பெற்றோர்களே அவர்களது பிள்ளைகளை கெட்டுப்போக செய்துவிட்டு கண்ணீர் வடிப்பதில் பயனில்லை. அல்லாஹ்வின் தண்டனையில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. எமக்காக துஆச் செய்யும் ஸாலிஹான குழந்தைகளை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

# 44 மாணவர்களை காவுகொண்ட 'இயற்கை அனர்த்தம்'



(பீ.எப்.எம் றிஷாட்)

நாட்டில் கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக ஏற்பட்ட கடும் மழை, மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதில் குறிப்பாக நாட்டின் சப்ரகமுவ, தென்பகுதி மற்றும் மேல் மாகாணங்களில் ஏற்பட்ட இவ் அனர்த்தத்தினால் 211 பேர் இதுவரை உயிரிழந்ததுடன், 7 இலட்சம் மக்கள் தமது சொந்த இடங்களை இழந்து தற்காலிக முகாம்களில் வசித்து வருகின்றனர். ஆனால் இதேபோன்ற அனுபவத்தை கடந்த வருடமும் நாம் சந்தித்தோம். குறிப்பாக 1978 மற்றும் 2003ஆம் ஆண்டுகளில் இலங்கையில் அதிகளவு மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டதுடன், மிகப் பெரிய அழிவுகளையும் இலங்கை சந்தித்திருந்தது.

இதனடிப்படையில் இவ் வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தத்துக்கு பாடசாலை செல்லும் அப்பாவி மாணவர்கள் விதிவிலக்கானவர்கள் அல்ல. கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையின் படி இந்த இயற்கை அனர்த்தத்தினால் இதுவரை 44 மாணவர்கள் உயிரிழந்ததுடன், 8 பேர் மாயமாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பல மாணவர்கள் தமது இருப்பிடங்கள் மற்றும் அனைத்து உடமைகளையும் இழந்து நிர்க்கதியாகி தற்போது தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் வசித்து வருகின்றார்கள். அத்துடன் 144 பாடசாலைகள் முற்றிலும் சேதமடைந்துள்ளதுடன், அதில் 74 பாடசாலைகள் முழுமையாகவும், 70 பாடசாலைகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இதன்படி, இவ் அனர்த்தம் காரணமாக 7,850 மாணவர்கள் நிர்க்கதியாகியுள்ளதுடன், 72 பாடசாலைகள் நிவாரண முகாம்களாக பயன்படுத்தப்பட்டு வருகின்றதாகவும் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு அப்பால் ஆசிரியர்களும், அதிபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்படி 3 மாகாணங்களிலும் 150இற்கு மேற்பட்ட அதிபர் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு மாணவர்களுக்கு இவ் இயற்கை அனர்த்தம் காரணமாக தமது இருப்பிடங்களை இழக்க நேரிட்டதுடன், தமது பாடசாலை உபகரணங்கள் உள்ளிட்டவைகளையும் இழந்துவிட்டார்கள். இதில் குறிப்பாக பாடசாலை சீருடை, சப்பாத்து, பாடப்புத்தகங்கள், புத்தகப் பைகள் மற்றும் கல்விச் சான்றிதழ் என்று பல்வேறு பெறுமதி வாய்ந்த உடமைகளை வெள்ள நீர் அடித்து சென்று விட்டது. இதனையடுத்து கல்வி அமைச்சு குறித்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் சகலவிதமான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன், சேதமடைந்த பாடசாலைகளை மீளவும் கட்டியெழுப்புவதற்காக விசேட வேலைத்திட்டமொன்றையும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட கடும் மழை, மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கினால் 44 பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார். மேலும் அதிகமான பாடசாலை மாணவர்கள் தங்களது உடமைகளையும் பாடப்புத்தகங்களையும் இழந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் கல்வி அமைச்சர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்;

நாட்டில் கடந்த 25ஆம் திகதி முதல் நிலவிய சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளப்பெருக்கின் காரணமாக பாடசாலை மாணவர்கள் தங்களது உடமைகளையும் பாடப்புத்தகங்களையும் இழந்துள்ள நிலையில் அவர்களின் கல்வி செயற்பாடுகள் முற்று முழுவதுமாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இது வரை வெள்ளப் பாதிப்புக்கள் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களினால் 44 பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளதாக கல்வி அமைச்சுக்கு தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த உயிரிழப்பானது அதிகளவு மாத்தறை மாவட்டம் உட்பட சப்ரகமுவ மாகாணத்திலேயே பதிவாகியுள்ளது. இதனிடையே இந்த அனர்த்தம் காரணமாக நாடளாவிய ரீதியில் 144 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் முற்று முழுவதுமாக சேதமடைந்துள்ளன.

இவ்வாறான நிலையில் கல்வி அமைச்சின் கீழ் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பிலான முழுமையான தகவல்களை திரட்டவும் நிவாரண செயற்பாடுகளை துரிதமாக முன்னெடுக்கவும் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நிவாரண குழுவானது பாதிப்புக்கள் தொடர்பிலான முழுமையான தகவல்களை திரட்டி வருகின்றது. அந்தவகையில் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அனைத்துவிதமான பாடப் புத்தகங்கள், புதிய சீருடைகள், சப்பாத்துக்கள் உள்ளடங்கிய 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இலவச நிவாரணப் பொதியொன்றும், இலவசமாக கல்விச் சான்றுதழ்கள், பெருபேறு சான்றுதல் என்பன உரிய முறையில் மாணவர்களுக்கு மீண்டும் பெற்றுதர அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ளம் காரணமாக 25 ஆயிரத்துக்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளை பிரதான நிவாரண மத்திய நிலையங்களாக பயன்படுத்தவும், அதன்மூலமாக மாணவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். அத்துடன், பாதிக்கப்பட்ட மாணவர்கள் வர்ண ஆடையில் பாடசாலைகளுக்கு சமூகமளிக்க முடியும் எனவும், அம்மாணவர்களுக்கு 3 சீருடைப் பொதிகளும், தேவையான சப்பாத்து மற்றும் பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு தேவையான வேறு அத்தியாவசியப் பொருட்களை வியாபாரிகள் மற்றும் தனவந்தர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம். இது வரை பலர் உதவி செய்வதாக உறுதியளித்துள்ளனர். அவற்றையெல்லாம் ஒரு பொதியில் இட்டு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கடந்த வாரம் முதல் வழங்குவதற்கு கல்வி அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில், வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக மூடப்பட்ட பாடசாலைகள் கடந்த திங்கட்கிழமை(05) முதல் மீண்டும் திறக்கப்பட்டது. இதன்படி மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளும் திறக்கப்பட்டதுடன், இடம்பெயர்ந்தவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள 15 பாடசாலைகளும், தென் மாகாணத்தில் உள்ள 10 பாடசாலைகளும், முழுமையாக சேதங்களுக்கு உள்ளாகிய 29 பாடசாலைகளைத் தவிர ஏனைய அனைத்து பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் சேதமாகியுள்ள பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் அருகிலுள்ள மற்றுமொரு பாடசாலையில் நடத்துவதற்கும் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

இதேவேளை, கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையின் படி சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 14 பாடசாலைகளை திறப்பதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டுள்ளதுடன், தென் மாகாணத்தின் காலி, எல்பிட்டி கல்வி வலயத்தில் 12 பாசாலைகளும், மாத்தறை அக்குரஸ்ஸ, தெனியாய கல்வி வலயங்களில் 27 பாடசாலைகளும் கல்வி நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிக்க முடியாதவாறு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆசிரியரும், சமூகமும்



கடந்த வாரத் தொடர்ச்சி......

அனைவருக்கும் கல்வி, கட்டாயக் கல்வி என்ற எண்ணக்கருக்கள் பற்றி எவ்வளவுதான் பேசப்பட்டாலும், கல்வியில் சமவாய்ப்பு, சம நீதி பற்றி வலியுறுத்தப்பட்டாலும், இலவசப் பாடநூல், இலவச சீருடை, புலமைப்பரிசில் என்பன வழங்கப்பட்டாலும் மாணவர்களின் இடைவிலகல் குறைந்ததாகத் தெரியவில்லை. நடத்தைப் பிறழ்வுடைய மாணவர்கள், பாடசாலைக்கல்வி எவ்வித நோக்கமும் இல்லாதது எனக் கருதி பாடசாலையையும் ஆசிரியரையும் வெறுத்து இடைவிலகி விடுகின்றனர். கையில் காசு புரள வேண்டும் என்ற அற்ப ஆசையில் சிறு சிறு தொழில்களில் சேர்ந்தும் விடுகின்றனர். இவ்வாறு இடைவிலகிச் செல்கின்ற மாணவர்களே எதிர்காலத்தில் சமூகத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறி விடுகின்றனர். தீய பழக்கங்களும், தீய எண்ணங்களும் குடி கொள்வதால் சமூக சீர்கேடுகளில் ஈடுபடவும் செய்கின்றனர்.

எனவே கல்வி ரீதியாக இழந்ததை (சமூக,அரசியல்,பொருளாதார காரணங்களுக்காக) ஈடுசெய்ய புதிய கல்விச் சிந்தனைகள் அவசியமாகின்றன. இழப்பீட்டுக் கல்வி அவ்வாறானதொன்றாகும். அதாவது வழமையான பாடசாலைக் கல்வியால் பயன்பெறாதவர்களுக்காக கல்வி வாய்ப்புக்களை வழங்கியும், விரிவு செய்தும் அவர்களது கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக ஒழுங்கு செய்யப்படும் கல்வியே இழப்பீட்டுக் கல்வி எனப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஐரோப்பிய நாடுகள், இஸ்ரேல், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா போன்ற நாடுகளில் இழப்பீட்டுக் கல்வி ஏற்பாடுகள் அல்லது விசேட கல்விச் சேவைகள் வழங்கப்படுகின்றன. அறிவுச் சமூகம் ஒன்று தலைதூக்கும் போது அட்டூழியங்கள், அநியாயங்கள் களையப்படாவிட்டாலும் குறைக்கப்பட வாய்ப்புண்டு.

ஆசிரியர்களின் விழிப்புணர்வும், முன்மாதிரியும் தான் அதற்குப் பெரும் பங்களிப்பை வழங்க முடியும். எனவே சமூகத்தின் தலைமைத்துவம் கற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஒரு கட்டுக்கோப்பான அமைப்பைக் கட்டியெழுப்ப முடியும்.

ஆசிரியர்களின் அறிவு இற்றைப்படுத்தப்படுவதுடன், அவர்களுக்கான மீள் பயிற்சிகளும் வழங்கப்படுவது காலத்தின் தேவையாகும். இன்று தொழில்நுட்ப அறிவைப் பொறுத்தவரையில் மாணவர்கள் ஆசிரியர்களை மிஞ்சி விட்டார்கள். கற்பதற்கு - கற்றல் என்ற எண்ணக்கருவுக்கே கற்ப மாணவன் தானே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தகவல்களைத் தேடித் திரட்டிக் கொள்ளும் வாய்ப்பு அதிகமாகவே காணப்படுகின்றது. மாணவர்களின் அறிவுத் தேவைக் கேற்ப ஆசிரியர்கள் தங்களை இசைவாக்கிக் கொள்ளாத நிலையில், ஆசிரியர்களின் மகத்துவம் குறைந்து செல்கின்றது.

தொற்றா நோய்களின் அதிகரிப்பு, சுற்றாடல் மாசடைதல், இன ஒற்றுமை சீர்குலைவு, போதைப் பொருள் பாவனை, வன்செயல்கள், இயற்கை அனர்த்தங்கள் போன்ற பிரச்சினைகள் நாடளாவிய ரீதியிலும், உலகளாவிய ரீதியிலும் பேசப்பட்டு வருகின்றன. இவற்றுக்கு பாடசாலைக் கல்வித்திட்டத்தினூடாக ஆசிரியரின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை ஆகும். வேலியே பயிரை மேயக்கூடாது என்பது எப்போதும் ஆசிரியர்கள் கருத்திற்கொள்ள வேண்டிய விடயமாகும். பொருத்தப்பாடில்லாதவர்களின் உள்ளீர்ப்பு காரணமாக இவ்வாறு நடைபெறுவதும் உண்டு.

இணையம் வாயிலாக வழங்கப்படுகின்ற கல்வி பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் என்பவற்றின் தேவையைக் குறைக்கின்றது. சர்வதேசப் பாடசாலைகளின் எழுச்சியும் புதிய கலாசாரத்தை உருவாக்கி வருகின்றது. அந்த மாணவர்களை ஆசிரியர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. அத்துடன் வலைத்தளங்கள் இன வேறுபாடுகளையும், பாலியல் உணர்வுகளையும் தூண்டுவதுடன் அரசியல், சமய, கலாசார கருவிகளாக இயங்கிவருவதும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

பத்துப் பன்னிரண்டாண்டுகள் பாடசாலையில் கழிந்து வெளிவரும் மாணவர்களின் ஆளுமைப் பண்புகள், மனப்பாங்குகள், அனுபவங்கள், வளர்ச்சி என்பவற்றில் பல வேறுபாடுகளைக் காணமுடிகின்றது. நகரப் பாடசாலை, கிராமியப் பாடசாலை, அரச பாடசாலை, தனியார் பாடசாலை என்னும் பல்வகையே இந்த வேறுபாடுகளுக்குக் காரணமாகின்றன. தனியார் நிறுவனங்கள் தொழில் வாய்ப்புக்களை வழங்கும்போது ஒரு சில பாடசாலை மாணவர்களையே விரும்பி ஏற்றுக்கொள்கின்றன. பாடத்திட்டம் ஒன்றேயாயினும் மறைகலைத்திட்டம் இந்த வேறுபாட்டை வெளிப்படுத்துகின்றது. எல்லாப் பாடசாலைகளிலும் வெளியீடுகளை ஒரே தரத்தில் அமையச் செய்வதானது அந்தந்தப் பாடசாலை நிர்வாகத்தினதும் ஆசிரியர்களினதும் கடமையும் பொறுப்பும் ஆகும். தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள நினைக்கும் அதிபர்களால் அதனை ஒருபோதும் நிலைநாட்ட முடியாது. இந்த ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தும் இருக்கத்தான் செய்யும்.

தமிழ்மொழிமூலப் பாடசாலைகள், சிங்கள மொழிமூலப் பாடசாலைகள் சர்வதேசப் பாடசாலைகள் என்று பல்வேறுபட்ட பாடசாலைகளிலும் கற்கின்ற மாணவர்களை ஏதாவது ஒருநாளில் ஒன்று திரட்டி விழுமியக் கல்வியை வழங்க முடியுமானால் அதுவே ஆசிரியர்கள் சமூகத்திற்காகச் செய்யும் அரும்பணியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

திருமதி ரவேக்கா மன்சூர் எம்.ஏ.
பிரதி அதிபர்
பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி

## கல்விச் சுரங்கம்

எம்.றிஷாட்

லங்கா சதொச
LANKA SATHOSA லங்கா சதொச
தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவர்
கைத்தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சு

## விலைமனு கோரிக்கை

இலங்கை அரசிற்கு உரித்தான லங்கா சதொச லிமிட்ட் நிறுவனமானது நாட்டின் பாரிய சில்லறை விற்பனை நிலைய வலையமைப்பில் அடங்குவதுடன் நாடுமுழுவதும் 500 கிளைகள் மற்றும் வரையறுக்கப்பட்ட விற்பனை விநியோகஸ்தர்கள் 5,000 ஐ ஸ்தாபிப்பதற்கான வேலைத்திட்டமானது தற்போது நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. லங்கா சதொச லிமிட் இன் வியாபார போக்குவரத்திற்காக குத்தகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொண்டு அந்த வாகனங்கள் பிரிவை மேலும் வலுவூட்டும் முகமாக புதிய வாகனங்கள் (08) ஐ இப்போதைக்கு பெற்றுக்கொண்டு எதிர்காலத்தில் அந்த வாகனங்களின் எண்ணிக்கையை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- நீண்ட கால குத்தகையின் கீழ் வாடகைக்கு விடப்படும் வாகனங்கள் தொடர்பில் வரவேற்கப்பட்ட நிறுவனம் அல்லது துணை நிறுவனத்தின் மூலம் முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.
- 2017.06.12 ஆம் திகதி தொடக்கம் 2017.06.29 ஆம் திகதி வரை மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் மீள்செலுத்தப்படாத ரூபா.2,000/- கட்டணத்தை காசாக வணிக தலைப்புடன் விண்ணப்பத்தினை கொழும்பு 02, வோர்க்ஷோல் வீதி, இல 27 எனும் விலாசத்தில் அமைந்துள்ள சதொச கட்டிடத்தொகுதியில் 5 ஆம் மாடியில் நிதிப்பிரிவில் சமர்ப்பிப்பதன் மூலம் மனு ஒப்பந்தத்திற்கான விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளமுடிவதுடன் எவ்வித மேலதிக கட்டணங்களும் இன்றி மனு விண்ணப்பங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும்.
- முத்திரையிடப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களின் பிரதிகளுடன் தலைவர் காரியாலயத்தில் இடப்பட்டுள்ள பெட்டியில் இடல் அல்லது தலைவர் லங்கா சதொச லிமிட்ட் சதொச இல. 27, 05 ஆம் மாடி வோர்க்ஷோல் வீதி, கொழும்பு 02 எனும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.
- 2017.06.30 பி.ப 14.00 மணித்தியாலத்திற்கு மனு கோரல் நேரம் முடிவடைவதுடன் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
- மேலதிக விபரங்களுக்கு : கணக்காளர் - தொலைபேசி 0771127679
  பொறுப்பதிகாரி - தொலைபேசி 0718781151

தலைவர்
லங்கா சதொச லிமிட்டட்,
சதொச செயலாளர் காரியாலயம் இல. 27, 05 ஆம் மாடி வோர்க்ஷோல் வீதி,
கொழும்பு 02

# சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்தோருக்கு பாகுபாடின்றி தண்டனை வழங்கவும்

## முன்னாள் முதல்வர் நஜீப் ஏ.மஜீத்



(திருமலை எம்.ரீ.எம். பாரிஸ்)

மூதூர் மல்லிகைத் தீவு பெரியவெளி பள்ளிச் சிறார்கள் மீது பாலியல் துஸ்பிரயோகத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு எதிராக பாகுபாடின்றி தகுந்த தண்டனை வழங்கப்படல் வேண்டும் என முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீட் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, குறித்த பாடசாலைக்கு பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற மூன்று சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் நான் மிகுந்த கவலை அடைகின்றேன். இச்செயலை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த ஈனச் செயலை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். சிறுவர்கள் என்பது நமது தேசத்தின் சொத்துகள். அவர்களை பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பு. சிறார்கள் என்பதில் தமிழ், முஸ்லிம், சிங்களம் என்று வேறுபாடு கிடையாது. அனைத்துச் சிறுவர்களும் நமது சொத்துக்களே. இன நல்லுறவும், சகவாழ்வும் கட்டியெழுப்பப்பட்டு சகோதரத்துவத்துடன் வாழும் இப்பிரதேசத்தில் இன ஒற்றுமையை சீர் குலைக்கும் நோக்குடன் இது போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

உண்மையான குற்றவாளிகள் கண்டறியும் காலம் நீடிக்கும் போது தேவையற்ற பிரச்சினைகள் சமூகத்தில் மத்தியில் ஏற்பட வழி வகுக்கும். உண்மையான குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடக்கூடாது. இவர்களை கண்டறிவதற்கு பொதுமக்களும், சிவில் சமூக அமைப்புக்களும் பொலிஸாருக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். உண்மையான குற்றவாளிகளை கண்டறியும் வரை இன முரண்பாட்டை ஏற்படுத்தும். ஆகவே உண்மையான குற்றவாளிகளை கண்டறியும் வரை வீணான குழப்பங்களை சமூகத்தில் ஏற்படுத்தி இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் செயல்களில் ஈடுபட வேண்டாம் என நான் அன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



2016 ஆம் ஆண்டுக்கான உயர்தரப்பரீட்சை எழுத கிடைக்கப்பெற்ற பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி அடிப்படையில் உயிர்முறைமைகள் தொழில் நுட்பப்பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் அதி கூடுதலான மாணவர்களின் 8 மாணவர்கள் சம்மாந்துறை தேசிய பாடசாலையிருந்து தெரிவாகியுள்ளனர். இம்மாணவர்கள் பெயர்கள் பின்வருமாறு. கே.பஸ்மியா,எப். எப்.இப்த்தா, எஸ்.எப். முர்ஸித்தா, ஏ.எல்.உஸ்னா,எம்.என். றிப்றா, எம்.ஏ. அஸ்மியா பானு, எஸ்.எல்.எப். ருஸ்னி ஆகிய மாணவர்களை கல்லூரியின் அதிபர் ஏ.சி.எம். இஸ்மாயில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார். அருகில் உயிர்தொழில்நுட்ப பாட ஆசிரியர் ஏ.எம்.ஏ. கரீம், ஆசிரியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம் எஸ்.எல்.சலீம்)

# முஸ்லிம்கள் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும்: ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் வேண்டுகோள்

அண்மைக் காலமாக சிறுபான்மையின சமூகங்கள் குறிப்பாக முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றன.

பள்ளிவாசல்கள், மத ஸ்தானங்கள் தாக்கப்படுவதுடன் முஸ்லிம்களின் பொருளாதாரத்தை நசுக்கும் வகையில் முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் ஆங்காங்கே தாக்கப்பட்டு வருகின்றன. பெற்றோல் குண்டுகள் வீசப்படுகின்றன. தீயிட்டு எரிக்கப்படுகின்றன.

இவை தொடர்பாக சட்டம் தன் கடமையைச் செய்ய வேண்டுமென முஸ்லிம் மீடியா போரம் வலியுறுத்துகிறது. இது தொடர்பில் போரத்தின் தலைவர் என். எம். அமீன் வெளியிட்டுள்ள அறிக்கையின் மேலும் குறிப்பிடப்படுள்ளதாவது :-

பொலிஸாரும் அரசாங்கமும் அவசரமாக தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். இனக் கலவரத்தை ஏற்படுத்தி நாட்டில் பதற்றத்தை ஏற்படுத்துவதே இத்தகைய தாக்குதல்களை நடத்துவோரின் நோக்கமாகும்.

ரமழான் காலத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் முஸ்லிம்களை சீண்டிப் பார்க்கும் முயற்சியிலும் ஈடுபடலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் நிலைமையை மிகவும் கவனமாக கையாள்வது அவசியம். குறிப்பாக முஸ்லிம் இளைஞர்கள் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். ஆவேசமடைந்து அவர்கள் எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக நாம் இருக்கக் கூடாது.

சட்டமும் நீதியும் வலுவிழந்து இனவாதம் கூர்மைப்படுத்தப்படுகின்ற ஒரு சூழலில் நாம் எம்மைக் காத்துக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். எமது நடவடிக்கைகளால் வேறு பகுதிகளில் வாழும் முஸ்லிம் சகோதரர்கள் பாதிக்கப்படும் நிலையும் ஏற்படலாம் என்பதை எப்போதும் நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

எமது சமூகத்தின் நலனையும் நாட்டின் பொது நலனையும் கருத்திற் கொண்டு நாம் மிக அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டிய தருணத்தில் நாம் இருக்கிறோம். எமது உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவற்றை சட்ட ரீதியாக அணுகுவதற்கே நாம் முயற்சிக்க வேண்டும். அவ்வாறே மாற்றுமத சகோதரர்களின் உரிமைகள் விடயத்திலும் நாம் சங்கடங்களை உருவாக்காது சமயோசிதத்துடன் நடந்து கொள்வதும் எமது பொறுப்பாகும்.

முஸ்லிம் ஊர்களது பொறுப்பாளர்கள் மற்றும் மஸ்ஜித் நிர்வாகிகள் இது குறித்த விழிப்பூட்டலை மக்களுக்கு விடுக்க வேண்டும். அத்துடன் வீதியோரங்களில் நின்று கொண்டிருக்கும் வாலிபர்கள் சமூக நலன் கருதி தங்களை சீர்படுத்திக் கொள்ள வேண்டும்.

சமூக ஊடகங்களில் அநாவசியமான விடயங்களை பகிர்வது, ஏசுவது, திட்டுவது, கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துவது, ஏளனப்படுத்துவது முதலான விடயங்களிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். இத்தகைய விடயங்களில் ஊர் மற்றும்பள்ளிவாசல் தலைமைக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# கரடியனாறு தம்புவத்தையில் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

## நடவடிக்கைகள் துரிதம் -மேல் மாகாண முதலமைச்சர்



(எம்.எஸ்.எம். முன்தஸிர்)

கழிவுப்பொருள் முகாமைத்துவம் உள்ளூராட்சி விடயத்திற்கு உட்படுத்தப்பட்ட விடயமொன்றாகும். இது விடயத்தில் பல்வேறு வாதங்கள் மத்திய அரசின் அமைச்சருக்கும் தனக்கிடையிலேற்பட்டன இது பற்றி நான் அலட்டிக்கொள்ளவில்லை. மேல் மாகாண சபையின் உறுப்பினர்கள் கட்சி பேதங்கள் பாராது இது விடயத்தில் தனக்கு பூரண ஆதரவினை நல்கினர் இவர்களின் நம்பிக்கையின் அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் கரடியான கம்பஹா மாவட்டத்தில் தம்புவத்த கழிவுப்பொருள் முகாமைத்துவத்திட்டத்தை முறையாக முன்னெடுப்பேன் என மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்தார்.

கழிவுப்பொருள் சரியான வழியில் என்ற தொனிப்பொருளின் பிரகாரம் பிலியந்தல கரடியான மற்றும் கம்பஹா தம்புவத்த கழிவுப்பொருள் முகாமைத்துவத்திட்டத்துக்கான உடன்படிக்கை கைச்சாத்திடல் நிகழ்வு முதலமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கரடியான கழிவுப்பொருள் முகாமைத்திட்டம் பெளார்வே ஹோல்டிஸ் நிறுவனமும் கம்பஹா கழிவுப்பொருள் முகாமைத்துவத்திட்டத்திற்கு ஈடிஎஸ் நிறுவனமும் உடன்படிக்கை செய்தன. மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரி சபை தலைவர் ருவினி தர்மசிறி, பணிப்பாளர் தவின் மான்னப்பெரும நிறுவனங்களின் பணிப்பாளர்களான கிறிஸ்தோபர் ராம் கோபர் ஹேமக அல்விஸ் ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். மேல் மாகாண பிரதம செயலாளர் எம்.ஏ.பீ. தயா செனரத் முதலமைச்சின் செயலாளர் சந்திராணி சமரகோன் , மேல் மாகாண அமைச்சர் காமினி திலகசிறி உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# மலையகத்தில் 2000 இடங்களில் மண்சரிவு அபாயம்



(ஏ.ஏ.எம்.பாயிஸ் - எம்.எல். எஸ்.மொஹம்மத்)

அண்மையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களின் பின் நாட்டின் எதிர்காலத்தில் பாரிய இயற்கை அனர்த்தங்கள் அழிவுகள் இடம் பெறுவதை தவிர்க்கும் நோக்கில் கட்டட ஆராய்ச்சிகள் நிறுவனம் மலை நாட்டில் நடத்திய ஆய்வுகளுக்கிணங்க 2000 இடங்கள் மண் சரிவுகள் இடம் பெறும் அவதான நிலையில் இருப்பதாக கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்சரிவுக்கிளை பணிப்பாளர் ஆர்.யூ.எஸ்.பண்டார தெரிவித்தார்.

மேற்படி இனங்காணப்பட்ட 776 இடங்களில் நிலப்பரிசோதனை நடவடிக்கைகளை பூர்த்தி செய்துள்ளதாகவும் இவற்றில் தற்போது இயற்கை அனர்த்தம் நடைபெற்றுள்ள இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளதாகவும் இலங்கை கட்டட ஆராய்ச்சிகள் நிறுவனத்தின் தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பத்தனை நூருல் மொஹிதீன் பள்ளிவாசல் திறப்பு



(ஹட்டன் க.கிஷாந்தன்)

நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட பத்தனை நூருன் மொஹிதீன் ஜிம்மா பள்ளிவாசல் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பள்ளிவாசலின் தலைவர் பசூர் மொஹாமட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தாவலப்பிட்டி ஹாஷ்மி அரபிக் கல்லூரியின் உப அதிபர் மௌலவி நசீர் (ஹாசிமி) கலந்து கொண்டதோடு, அட்டன் டிக்கோயா நகரசபையின் முன்னாள் தலைவர் எம்.ஏ.எஸ்.அபுசாலி, செயலாளர் ஹாரிஸ், பத்தனை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, சர்வமத தலைவர்கள் மற்றும் வர்த்தக பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டதுடன் திறப்பு விழாவின் பின் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வும் நடைபெற்றது.



பிரபல வானொலிக்கலைஞர் மர்ஹூம் மஹ்தூம் ஏ.காதரினால் 1970 இல் அறிமுகப்படுத்தப்பட்ட அரபுப்பாடல்களை அண்மையில் புதல்வர்கள் பாடி இறுவட்டாக வெளியிட்டனர். ''மாஷா அல்லாஹ்'' இறுவட்டின் ஒரு தொகுதியை சமூகப்புரவலர் ஏ.பி. அப்துல் கையூம் கொழும்பு இஹ்சானிய்யா அரபுக்கல்லூரி மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கிய போது மஹ்தூமி கஸீதா குழுவின் தலைவர் கலைக்கமல் ஜமால்தீன் மஹ்தூம் மற்றும் கல்லூரி பணிப்பாளர் அல்ஹாபிழ் எல்.எம். ழமீர் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# அல்-ஆலிம் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(இறக்காமம் நிருபர்)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் அல்-ஆலிம் சான்றிதழ் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவுத் திகதி 2017 ஜூலை மாதம் 10ஆம் திகதியாகும்.

இப்பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் பதிவு செய்யப்பட்ட அரபுக் கல்லூரி அதிபர்களுக்கும், அஹதிய்யாப் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்காக பதிவு செய்யப்பட்ட அரபுக் கல்லூரி மூலமாகவே விண்ணப்பிக்க வேண்டும். அரபுக் கல்லூரி மாணவர்களாக இல்லாதோர் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பினால் அங்கீகரிக்கப்பட்ட அரபுக் கல்லூரி ஒன்றினூடாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும். தனிப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.

அவ்வாறு எவரேனும் தமது விண்ணப்பங்களை அங்கீகரிக்கப்பட்ட அரபுக் கல்லூரியூடாக விண்ணப்பிக்க கோரினால் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப அரபுக் கல்லூரிக்குரிய விண்ணப்பதாரிகளின் விபரப்பட்டியலில் அவர்களது விபரங்களையும் உள்ளடக்கி அனுப்புமாறு அரபுக் கல்லூரி அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். அல்-ஆலிம் பழைய பாடத்திட்ட பரீட்சை இவ்வருடம்(2017) உள்ளடங்கலாக இரண்டு வருடங்கள் மட்டுமே நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து வருகின்ற வருடங்களில் நுஅல்-ஆலிம் முதவஸ்ஸிதா, ஸானவியாப் பரீட்சை (புதிய பாடத்திட்டம்) மட்டுமே நடைபெறும் என இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆரம்ப பரீட்சை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாம் பகுதியில் சமூகக் கல்வி, தமிழ் ஆகிய இரண்டு பாடங்களும் கட்டாயமானதாகும்.

இரண்டாம் பகுதி அரபு மொழி, அரபு இலக்கியம், இஸ்லாம் தீனிய்யா, இஸ்லாமிய வரலாறு ஆகிய நான்கு பாடங்களைக் கொண்டதாகும்.இறுதிப் பரீட்சை அரபு மொழி, அரபு இலக்கியம், இஸ்லாமிய சட்டம், இஸ்லாமிய மதஞானம், இஸ்லாமிய வரலாறு ஆகிய ஐந்து பாடங்களைக் கொண்டதாகும்.

இப்பரீட்சை கொழும்பு, கம்பஹா, குருநாகல், கண்டி, புத்தளம், திருகோணமலை, கிண்ணியா, கல்முனை, மட்டக்களப்பு, மாத்தறை ஆகிய பத்து நகரங்களிலுள்ள பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.சரியாகப் பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை குறித்த திகதிக்கு முன்னதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார கேட்டுள்ளார்.

# சொட்டோகான் கராத்தே தோக்கியார் யொகு காய் அமைப்பின் இப்தார்







(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சொட்டோகான் கராத்தே தோக்கியார் யொகு காய் அமைப்பு ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் நேற்றுமுன் தினம்(10) சனிக்கிழமை கொழும்பு அல் - ஹிக்மா கல்லூரியில் நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் சிஹான் எம்.பீ. ஏ. கடாபி தலைமையில் நடைபெற்ற இந்த இப்தார் நிகழ்வில், இலங்கை பொன்மணச் செம்மல் எம்.எஸ்.தாஜ்மஹான், சத்திய எழுத்தாளர் நாகூர்கனி, எம்.எஸ்.எம். ஸப்ரீஸ், ஹம்சகன், ஆப்கன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். நிகழ்வில் ரமழான் நற்சிந்தனை நிஸ்வான் மௌலவி (இஸ்லாஹி), துஆ மொஹிடீன் மௌலவி, கஸீதா அம்மார் அன்வர், சஹிர் பர்வின் பைஸர் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை செம்பர் ரீ.எம். பாஹிம் வழங்கியதோடு, நிகழ்வை இர்ஷாத் தொகுத்து வழங்கினார். ஓர் அடைவு மட்டத்திலிருந்து அடுத்த அடைவு மட்டத்திற்குச் சென்ற கராத்தே வீரர்களுக்கும் மற்றும் கராத்தேயில் சாதனை நிகழ்த்தியோருக்கும் இதன் போது சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# கல்ஹின்னை கண்ட கண்டி மௌலானா – சமூக சன்மார்க்கப்பணியின் முன்னுதாரணம்

## கலாநிதி மர்ஹூம் மௌலவி ஸலாஹுதீன் (பாரி)



எம்.இஸட். அஹ்மத் முனவ்வர்,
முன்னாள் பணிப்பாளர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
முஸ்லிம் சேவை



இற்றைக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன் 24.07.2013 அவர் மறைந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் கொழும்பு ஜாவத்தை ஜும்ஆப்பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டார். இலங்கை வானொலியோடு 1950களிலிருந்து தமிழ் - முஸ்லிம் நிகழ்ச்சிகளை வழங்கிய அன்னாருக்கு வானொலி வழங்க வேண்டிய முக்கியத்துவத்தையும் வழங்கியது. அப்போது நோன்பு 16. ஜனாஸா நல்லடக்க நிகழ்வுகளை அதே வானொலி முஸ்லிம் சேவை மூலம் அஞ்சல் செய்ததை நினைவு கூரல் சாலப்பொருத்தமாகும். காரணம் கூட்டுத்தாபனத் தலைவருக்கும் ஸலாஹுதீன் மௌலவி மற்றும் சிரேஷ்ட புதல்வர் முஸ்லிம் ஸலாஹுதீனுக்கும் உள்ள நட்பு மாத்திரமல்ல, வானொலி ஒரு கலைஞனுக்குச் செய்ய வேண்டிய இறுதி மரியாதையாக இருக்கட்டும் என்று கூட்டுதாபன முன்னாள் தலைவர் ஹட்சன் சமரசிங்க கூறினார்.

2000 செப்டம்பர் 06ஆம் திகதி மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அகால மரண, ஜனாஸா நல்லடக்க நிகழ்வுகள் நள்ளிரவு வரை அதே ஜாவத்தை ஜும்ஆப்பள்ளிவாசல்களிலிருந்து அஞ்சல் செய்தமை எனது ஒலிபரப்பு வாழ்வின் முதல் பணியாகும்.

எனது ஒலிபரப்பு அனுபவத்தில் மர்ஹூம் எச். ஸலாஹுதீன் மௌலவியுடைய ஜனாஸா நல்லடக்க அஞ்சல் நிகழ்வுகள் அடுத்த முக்கிய பணியாகும்.

ஜனாஸா நல்லடக்க நிகழ்வுகளில் பெருந்தொகையான உலமாக்கள், அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், முஸ்லிம் இயக்கங்களின் பிரமுகர்கள், பள்ளிவாசல் ட்ரஸ்டிமார்கள் என்றும் முஸ்லிம் - முஸ்லிமல்லாத நண்பர்களும் ஸலாஹுதீன் மௌலவியின் கல்ஹின்னை ஊர் மற்றும் கண்டி மாவட்ட மக்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

''மரணித்தவர்களுடைய நல்ல விடயங்களை நினைவுபடுத்துங்கள்; பேசுங்கள் இதன் மூலம் படிப்பினை பெறலாம்'' என்ற நபி மொழிக்கு ஏற்ப கலாநிதி மர்ஹூம் மௌலவி எச். ஸலாஹுதீன் (பாரி)யினுடைய வாழ்வின் சில முன்மாதிரிகளை முன்னுதாரணமாக எழுதக்கிடைத்தமை எனது பாக்கியமாகக் கருதுகிறேன்.

வானொலி நிலையத்தில் ஒரு நாள் அவர் என்னைப் பார்த்து ''உங்கள் பிறப்பு எப்போது என்று கேட்டார்?'', ''1955 ஆம் ஆண்டு'' என்றேன். அப்போது ''உங்கள் பால்குடி வயது எனது வானொலி பிரவேச ஆரம்பம்'' என்றார். நான் பூரித்துப் போனேன். இது 1976ஆம் ஆண்டு அவர் என்னை சந்தித்த முதல் நாள் சிலாகித்துக் கூறிய வார்த்தைகள். அன்றிலிருந்து வானொலியில் எப்படியும் என்னை நிரந்தரமாகச் சேர்ந்து கொள்ளுமாறு உற்சாகப்படுத்திக் கொண்டே இருந்தார்.

அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் அவருடைய துஆப்போலவே வானொலி நிலையத்தில் நிரந்தர உத்தியோகத்தராக சுமார் 35 வருடங்கள் பணிபுரிந்தேன்.

மௌலவி எச். ஸலாஹுதீன் (பாரி) 1938 பெப்ரவரி மாதம் 25ஆம் நாள் கல்ஹின்னை ஹாமித்லெப்பை தம்பதியினரின் மகனாகப் பிறந்தார். அதே கல்ஹின்னையில் அல் - மனார் பாடசாலையிலும் ஜாமிஆதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரியிலும் ஆரம்பக் கல்விகளையும் மார்க்கக் கல்வியையும் கற்றார். தமிழ்நாடு காயல்பட்டினம் ஸாஹிபா அரபுக் கல்லூரியிலும் பின்னர் தென்னிலங்கை வெலிகாமம் பாரி அரபுக் கல்லூரியிலும் 1956ஆம் ஆண்டு ஆலிமாகத் தேர்ச்சி பெற்று வெளியேறினார்.

1958ஆம் ஆண்டு தமிழ், ஆங்கிலம், அரபு, சிங்களம் போன்ற மொழிகளில் தேதினார். 1959 ஆம் ஆண்டு அரபு ஆசிரியர் நியமனம் பெற்றார். 32ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பணியில் பிரகாசித்தார். கண்டி ஹனபி ஜும்ஆப்பள்ளி பிரதம இமாமாகவும் பிரதம ட்ரஸ்டியாகவும் கடமை பார்த்தார்.

உலக சமாதான தஃவா பணியாளர். அமைதிப் பிரசாரகர். நடமாடும் மார்க்கப் பிரசாரகர் என்றெல்லாம் சுமார் 32 நாடுகளில் நற்பணி புரிந்துள்ளார்.

1983இல் விக்டோரியா அணைத் திறப்பு விழாவில் இஸ்லாமிய மத போதகராகக் கலந்து கொண்டார். தென்கிழக்காசிய மற்றும் மேற்கு நாடுகள் வரை 40க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு போதகராகப் பயணித்துள்ளார்.

1962களில் அவர் தொடங்கிய சிபா பதிப்பகம் மூலம் நான்கு மொழிகளிலும் சுமார் 250க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். 11.9 மில்லியன் சிறு நூல்கள் இலவசப் பிரதிகளாக இதன் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. சிங்கப்பூர், மலேசியா, இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம், மத்திய கிழக்கு நாடுகள் உட்பட அன்னாரின் நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்தனை நூல்களையும் தொகுத்து சிறு நூல்களின் தொகுப்பாக பெருநூல் புத்தகத்தையும் வெளியிட்டார். 1704 பக்கங்கள் கொண்ட தமிழ் தொகுப்புகளின் தொகுப்பையும் 1072 பக்கங்கள் கொண்ட ஆங்கிலம் (Big Book) நூலும் சிங்கள மொழியில் ஆயிரம் பக்கம் கொண்ட 'மஹபொத' எனும் பெருநூலையும் வெளியிட்டு சாதனைபடைத்தவர்.

எப்போதும் இலங்கை வானொலியின் முன்னாள் தலைவர் ஹட்சன் சமரசிங்க சிங்கள மொழியிலான 'மஹபொத' நூலை தன் மேசையில் வைத்திருப்பார். தேவை வரும் போதெல்லாம் பயன்படுத்துவார்.

ஒலி - ஒளிபரப்புத் துறையிலும் சன்மார்க்கப் பணியாளராக மௌலவி ஸலாஹுதீன் தன் பங்களிப்பைச் செய்தார். சுமார் 42 (Audio) நாடாக்களை வெளியிட்டுள்ளார். சிங்கப்பூர், மலேசியா, இந்தியா இங்கெல்லாம் இவரது மார்க்கப் பணிகள் இதன் மூலம் வியாபித்தன.

இலங்கை வானொலியில் 1957முதல் தன் பணியை தொடங்கிய அன்னார், வபாத்தாகுவதற்கு 2013ஆம் ஆண்டு வரை தனது சமய சன்மார்க்கப் பங்களிப்புக்களைச் செய்தார். உரைகளாகவும், திருக்குர்ஆன் விளக்கங்களாகவும், குத்பாப் பிரசங்கமாகவும், நற்சிந்தனைகளாகவும், மணிமொழிகளாகவும் அன்னார் தனது பங்களிப்புக்களைச் செய்தார். அவரது சமகாலத்தவர்களான மர்ஹூம்கள் மணிமொழி மௌலானா, எம். ஜே. கலீலுர்ரஹ்மான் (இந்தியா), மஸ்ஊத் ஆலிம், எம். ஐ. அப்துஸ்ஸமது ஆலிம், எம். ஜே.எம். நிஸாம் மௌலவி, ஏ. ஆர்.எம். நூஹுல் ஹக் முதலியோர்களுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தார்.

வானொலி போலவே ஏனைய இலத்திரனியல் ஊடகங்களிலும் உரிய பங்களிப்புக்களைச் செய்தார். தொலைக்காட்சியிலும் பத்திரிகையிலும் அவரது பங்களிப்புகள் அளப்பரியன. இந்தியாவின் All India Radio, ராஜ் டீவி, சிங்கப்பூர் ரேடியோ, மலேசியா ஆர்.டீ.எம். ரேடியோ, டீவி, கனேடிய வானொலி மற்றும் லண்டன், பாரிஸ், நியூயோர்க் போன்ற நாடுகளிலெல்லாம் ஊடகங்கள் மூலம் சுதந்திர உலக இஸ்லாமிய தஃவா பணியாளராக மிளிர்ந்தார். இவரால் குத்பாப் பேருரைகள் 30க்கு மேற்பட்ட நாடுகளில் நிகழ்த்தப்பட்டன.

கண்டி ஜின்னா மண்டபத்தின் தலைவராகவும் ஆலோசகராகவும் பணிபுரிந்தவர். கண்டி அல் - இம்ரான் சர்வதேசப் பாடசாலை, தெஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையம், தென் அமெரிக்க அஞ்ஜுமான் இயக்கம் உட்பட பல தஃவா அமைப்புகளின் ஆலோசகராக அரும் பணியாற்றினார். அகில இலங்கை விவாகப் பதிவாளர் சங்கத் தலைவராக பல ஆண்டுகள் பணி புரிந்தார்.

கண்டி போக்குவரத்துச் சபை, கண்டி பெரிய ஆஸ்பத்திரி முதலிய நிறுவனங்களின் நிர்வாக அங்கத்தவராக இருந்தார். கண்டி மாவட்ட அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் தலைவர், வக்பு சபை அங்கத்தவர், இலங்கை ரூபவாஹினி சுயாதீன தொலைக்காட்சி, இலங்கை வானொலி போன்றவற்றிலும் இஸ்லாமிய நிகழ்ச்சிகளுக்கான ஆலோசகராக அரும்பணியாற்றினார்.

பல விருதுகள், பட்டங்கள், பாராட்டுக்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் அதிகம் கிடைக்கப் பெற்ற ஓர் ஆலிம் பெருந்தகை என்றால் அது மிகையாகாது.

அகில இலங்கை சமாதான நீதவான் உட்பட தேசமான்ய, கலாபூஷணம், தேசகீர்த்தி, தாஜுல் உலமா, தீன் நெறிச்சுடர் (இந்தியா), கண்டி மௌலானா (தமிழ் நாடு), நடமாடும் இஸ்லாமிய உலகத் தூதுவர் (சிங்கப்பூர்), நடமாடும் இஸ்லாத்தின் பல்கலைக்கழகம்(மலேசியா) இப்படி சிறப்புப் பட்டங்கள் பல பெற்றவர்.

தனது ஆயுளில் சுமார் 50க்கும் மேற்பட்ட ஹஜ் கடமைகளை நிறைவேற்றிய பாக்கியம் பெற்றவர். 74க்கு மேற்பட்ட உம்ராக்களைச் செய்தவர்.

ஓர் ஆலிம் என்ற வகையில் மாத்திரமல்லாது சமூகப்பற்றாளர் என்ற வகையிலும் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர் என்ற வகையிலும் மௌலவி எச். ஸலாஹுதீன் (பாரி) சிறப்புப் பெறுகிறார்.

அரச பொது வைபவங்களில் சன் மார்க்கம் சார்ந்த அதிதியாகக் கலந்து கொண்டு தனித்துவம் காத்தவர். தனது பேச்சாற்றலாலும் குரல் வளத்தாலும் மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயான்களைச் செய்தவர். பகிரங்க சொற்பொழிவுகளை நிகழ்த்தியவர், மீலாத் மேடைகளிலும், கருத்தரங்குகளிலும், மாநாடுகளிலும், பொதுமேடைகளிலும் தப்லீக் பணியிலும் அதன் இஜ்திமாக்களிலும் போதகராகப் பங்களிப்புச் செய்தவர்.

தனது சொந்த ஊரான கல்ஹின்னையில் 'தாருத் தக்வா' மகளிர் அரபுக் கல்லூரி வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். அதன் பட்டமளிப்பு விழாவிலும் கலந்து சரித்திரம் படைத்தவர்.

எவரோடும் எப்போதும் அன்பொழுகப் பழகுவார். இரக்கம், கருணை, தயாளம், தாராள மனம் ஸலாஹுதீன் மௌலவிக்கு உரித்தான உயர்பண்புகளாகும்.

1992ஆம் ஆண்டு ஹஜ்ஜின் போது அரபா மைதானத்தில் அவர் இலங்கை ஹஜ் யாத்திரிகைகளை வைத்து நிகழ்த்திய பயானும் துஆவும் இலங்கை வானொலிக்காக எடுத்து வந்து என்னால் ஒலிபரப்புச் செய்யக் கிடைத்தமை நான் செய்த பாக்கியமாகும்.

1994ஆம் ஆண்டு இந்தியாவின் தமிழ் நாடு ஜயம்பேட்டையில் மௌலவி எச். ஸலாஹுதீன் (பாரி) தலைமையில் தொடங்கப்பட்ட உலகத் திருக்குர்ஆன் மாநாட்டிலும் அன்னார் செய்த பணிகளை என்னால் மறக்கவே முடியாது. முஸ்லிம் சேவைக்காக திருக்குர்ஆன் மாநாட்டு நிகழ்வுகளை ஒலிப்பதிவு செய்து, இலங்கை மக்களுக்கு ஒலிபரப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். ஜயம்பேட்டை திருக்குர்ஆன் மாநாட்டு ஸ்தாபகர் கொடைவள்ளல் பீ. ஏ. ரஹீம் ஹாஜியாரை 'முஹிப்புல் உலமா' எனும் பட்டம் வழங்கி கௌரவித்தார்.

தனது 74 ஆவது வயதில் 2013 ஜூலை 24 ஆம் திகதி ரமழான் 15 இல் வபாத்தாகி 16ஆம் நாள் முற்பகல் ஜனாஸா நல்லடக்கத்திற்காக ஜாவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலில் தொழுகைக்காக வைக்கப்பட்ட போது, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் எம். ஐ.எம். ரிஸ்வி (முப்தி)நிகழ்த்திய நினைவுரையை நினைத்துப் பார்க்கிறேன். அந்த வார்த்தைகள் அப்போது முஸ்லிம் சேவை ஊடாக முழுநாடும் கேட்கக் கூடியதாக அஞ்சல் செய்யப்பட்டது.

''இன்று ஓர் ஆலிம் மட்டுமல்ல, முழுநாட்டு முஸ்லிம்களுக்கும் சமூக சன்மார்க்கத் துறைகளிலெல்லாம் வழிகாட்டிய ஒரு மாமனிதர் மறைந்திருக்கிறார். எங்களைப் போன்ற ஆலிம்களுக்கு முன்னுதாரணம் (Roll Model) மிக்க மகத்தான ஆலிமை இழந்திருக்கிறோம். இவர் விட்டுச் சென்ற பணிகளை இங்குள்ள ஆலிம்களும் மற்றையோரும் குடும்பத்தினரும் தொடர வேண்டும்'' என்றும் கேட்டுக் கொள்கிறேன் என அ.இ.ஜ.உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் எம். ஐ.எம். ரிஸ்வி (முப்தி) தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

தன் அருமைத் தகப்பனாரின் ஜனாஸாத் தொழுகையை மிக்க துயருடன் தொடர்ந்தார் சிரேஷ்ட புதல்வர் முஸ்லிம் ஸலாஹுதீன். அதனையும் சேர்த்து மௌலவி ஹுஸைன் பரீத், உட்பட இன்னும் பல உலமாக்களது கருத்துரைகளையும் வானொலியில் நேர்முகமாக அஞ்சல் செய்த பசுமை நினைவுகளையும் ஸலாஹுதீன் மௌலவிக்காகச் செய்த பெரும்கைங்கரியமாகவும் பாக்கியமாகவும் கருதுகிறேன்.

இத்தகைய சிறப்புக்கள் பலமிக்க ஓர் ஆலிமை என் சிறிய சிந்தைக்கெட்டிய வாறு சித்தரித்துள்ளேன்.

அல்லாஹ் அன்னாரது பிழைகளைப் பொறுத்து மேலான ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவனபதியை கிடைக்கச் செய்வானாக!

ஸலாஹுதீன் மௌலவி மறைந்து நான்காவது வருடத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது

# முஸ்லிம்களின் மாற்று அரசியற் தெரிவாக ஜே.வி.பி. ?



- எம்.எஸ். முஹம்மது இக்ரிமா

நமது சமூகம் காலா காலமாக, மாறி மாறி பச்சை, நீலக் கட்சிகளை சிம்மாசன மேற்றி சலுகைகளுக்காக உரிமைகளையும் இழந்தே வந்துள்ளது. பலபேர் அமைச்சர்களாகவும் எம்.பி.க்களாகவும் பாராளுமன்றத்தை அலங்கரித்துள்ளார்கள். ஆனாலும் இரண்டு பெரும்பான்மைக்கட்சிகளும் ஏதோ ஒரு வகையில் இரண்டாந்தர சமூகமாகவும், மாற்றாந்தாய் சமூகமாகவுமே எம்மை நடாத்தி வந்துள்ளதை இலங்கை வரலாற்றை படிக்கும் எவரும் புரிந்துகொள்வர்.

இதற்கான அடிப்படைக் காரணம் இந்த குறிப்பிட்ட இரு கட்சிகளும் நம்பும் தாரக மந்திரம் ''பெரும்பான்மை வாத ஜனநாயக'' (Majoritarian democracy) ஆட்சி முறையாகும். அதாவது பெரும்பான்மை வாக்குகள் எங்கிருந்து கிடைக்கின்றதோ அவர்களே அவர்களுக்கு சரியாகத் தோன்றும். அதனைச் சுற்றியே அவர்களது சிந்தனையுமிருக்கும், இவர்களை திருப்திப்படுத்துவதாகவே அவர்களது அரசியல் நகர்வுகள், ஆட்சிமுறைகள் அமையும். அரச இயந்திரத்தின் மேலிருந்து கீழ் மட்டம் வரை அவர்களது நலன் ஓம்புவதாகவே அமையும். அங்கு சிறுபான்மை மக்களது அபிலாஷைகள் இன்றிற்றும் பார்க்கப்படுவதற்கான தேவை எழ மாட்டாது. இது ஜனநாயக ஆட்சி முறைத் தத்துவத்தின் (the political concept of democracy) பிரதான குறைபாடுகளுள் ஒன்றாகும்.

இதனடிப்படையிலேயே இப்போதும் எமது சமூகம், அநாதரவாக விடப்பட்டுள்ளது. சட்டியிலிருந்து அடுப்பில் வீழ்ந்துவிட்டோம் என்று உணர்ந்த பின்னும் நாம் மேற்கூறிய யதார்த்தத்தை மறந்து அல்லது புரிந்துகொள்ளாமல் மீண்டும் மஹிந்தவை கொண்டுவருவது பற்றி அல்லது இந்த ஆட்சியை மஹிந்த ஆட்சியோடு ஒப்பிட்டு, சென்ற ஆட்சியில் நியாயம் காணவே முனைகிறோம். அதாவது நாம் எப்போதும் பச்சையை விட நீலம் எமக்கு அநியாயம் செய்வதில் பரவாயில்லை என்றோ அல்லது அதன் மறுதலையாகவோதான் சிந்தித்து பழக்கப்பட்டுப்போனோம். எமது சமூகத்தில் புதிய உரிமைக் கோஷங்களோடும் இஸ்லாமிய வேடங்களோடும் வந்த, வரத்துடிக்கும் அரசியல் சித்தாந்திகள்கூட இந்த அழுகிய குட்டைக்குள் நின்றுகொண்டுதான் சிந்தனையை சுழற்றுகின்றார்கள். இதற்கு புதிய அரசியல் பேசும் NFGG கூட விதிவிலக்காக எனக்குத் தோன்றவில்லை

ஆனாலும் எம்மில் அநேகர் பேசுகிறோம் எழுதுகிறோம் ''சிறந்த, நேர்மையான அரசியல் தலைவர்கள் உம் கையிலேயே இருக்கிறார்கள் ...'', ''அநுரகுமார திஸாநாயக்காதான் மிகச் சிறந்த தலைவர்......'', ''.... அவர்களது கொள்கை இஸ்லாத்திற்கு மிக அண்மித்துள்ளது ...'' என்றெல்லாம்; வெறுமனே புழுகித்தள்ளுகிறோம். ஆனால் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் இவை அத்தனையையும் மறந்து 'வேதாளம் மீண்டும் முருங்கை மீதேறிக்கொண்டது' எனும் கணக்கில் வழமைபோல பச்சை, மற்றும் நீல முகாம்களில் தஞ்சமடைந்துவிடுகிறோம்.

சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்து இவ்வளவு காலமும் நாம் இந்த தவறைத்தான் செய்துவருகிறோம். எமது தலைவர்கள் இவ்விரு பிரதான கட்சிகளின் ஏஜண்டுகளாக பிரிந்து நின்று அவர்கள் மாறி மாறி சொல்லிக் கொடுக்கும் இனவாதத்தை எம்மத்தியில் ஆக்ரோஷமான அரசியல் மேடைப்பேச்சுகளால் விதைத்து விடுகிறார்கள். இதனை மூலதனமாக இட்டு எமது வாக்குகளால் ஒரு கூட்டம் பச்சையை சிம்மாசனத்தில் ஏற்றி எம்மை விற்று விடுகின்றது. இன்னொரு கூட்டமோ எம்மை நீலத்திடம் அடகுவைத்து அடி வாங்கித் தருகிறது. இது நாம் எம்மீது எழுதிக்கொண்ட அரசியல் விதியா? இதனை மாற்ற முடியாதா? வெல்லும் பக்கம் மாறி மாறி சாய்வதைவிட வென்றாலும் தோற்றாலும் இலட்சியத்திற்காக உழைத்து புதியதொரு அரசியல் கலாசாரத்திற்கு ஏன் நாம் வித்திட முடியாது?

நாம் ஜே.வி.பி, அதன் தலைவர்கள் பற்றி எழுதுவதும் சிலாகிப்பதும் உளப்பூர்வமானதாகவிருந்தால் ஏன் நாம் எமக்காகப் பேசும், இலங்கை குடிமக்கள் அத்தனைபேரையும் ஒரே அந்தஸ்தில் வைத்து நோக்கும் அந்தக் கட்சியை சிம்மாசனமேற்றிப் பார்க்கக்கூடாது? அவ்வாறான ஒரு தலைவரை கிரீடமணிந்து ஒரு சந்தர்ப்பத்தை வழங்கக்கூடாது? ஏன் நாம் அந்த கட்சியை வளர்த்துவிடுவதை மையப்படுத்தி எமது புதிய அரசியல் முயற்சிகளை முடுக்கிவிடக்கூடாது? ஒரு கட்சி வளர்ந்து அரசோச்சும்போது மட்டும் சென்று சலுகைகள் பெறுவதற்காக சேர்ந்துகொள்ளும் எமது வரலாற்றை மாற்றி, ஒரு கட்சியை வளர்த்து புதிய அரசியல் கலாசாரத்தை இந்த நாட்டில் உருவாக்கிய பெருமையின் பங்காளிகளாக ஏன் நாம் மாறக்கூடாது? இப்போது எம்மீது ஏவிவிடப்பட்டுள்ள அடக்குமுறைகளுக்கான ஒரு மாற்று தீர்வாக ஏதேனும் இப் பரிந்துரையை ஏன் நாம் சிந்திக்கக் கூடாது?

## உலக வலம்

### மீனுக்காக போராட்டம்

அமெரிக்காவின் சியாட்டிலில் கடல் உணவுகள் மாநாடு நடந்தது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கடல் உணவு தயாரிப்பு நிறுவனங்கள் மாநாட்டில் பங்கேற்றன. மாநாடு நடக்கும் இடத்தை யொட்டி, பீட்டா அமைப்பு சார்பில் நூதன போராட்டம் நடத்தப்பட்டது. விக்டோரியா லிமோவ் என்ற பெண், மீனின் செதில்கள் போன்ற மெல்லிய ஆடையை அணிந்த படி, தனது முதுகில் இரும்பு கொக்கியால் குத்திக் கொண்டார். அத்துடன் சுமார் ஒரு மணி நேரம் அந்தரத்தில் தொங்க விடப்பட்டார். தூண்டிலில் மாட்டும் மீனின் அவஸ்தையை உணர்த்த இப்படி ஒரு போராட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

### இந்த படை போதுமா?

கொலம்பியாவின் கல்வியில் சீர்திருத்தம் மேற்கொள்ள வலியுறுத்தியும், சம்பளத்தை உயர்த்தித் தரக் கோரியும், நாடு முழுவதும் ஆசிரியர்கள் மாபெரும் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். முக்கிய நகரங்களில் எங்கு பார்த்தாலும் பேரணி, போராட்டம் என ஆசிரியர்கள் தீவிரமாக களமிறங்கி உள்ளனர்.

தலைநகர் போகோடாவில் சுமார் 60,000 ஆசிரியர்கள் நடத்திய பேரணியில் நகரமே திக்குமுக்காடிப் போயுள்ளது. சுமார் 1 மாதமாக ஆசிரியர்கள் போராட்டம் தொடர்வதால், பாடசாலைகள் செயற்படாமல் முடங்கிக் கிடக்கின்றன. 9 இலட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆசிரியர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாமல் அரசும் திணறி வருகிறது.

### 6 கிலோ எடையில் பிறந்த அழகு குழந்தை



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை சேர்ந்த கிறிஸ்ஸி கார்பிட் கர்ப்பமாக இருந்தார். அவரது வயிறு வழக்கத்திற்கு மாறாக மிக பெரிதாக இருந்தது. இதனால் இரட்டை குழந்தை பிறக்கும் என எதிர்பார்த்தார் கார்பிட். சுக பிரசவத்திற்கு வழியில்லை என்பதால் அறுவை சிகிச்சை மூலம் குழந்தை வெளியில் எடுக்க மருத்துவர்கள் முடிவு செய்தனர். அதன்படி, அறுவைசிகிச்சை செய்து குழந்தையை வெளியில் எடுத்த மருத்துவர்களுக்கு ஒரே அதிர்ச்சி.

காரணம், பிறந்த குழந்தையின் எடை 6 கிலோ. இது, 2 குழந்தைகளின் எடைக்கு சமமானது. அதிக எடை இருந்தும் குழந்தைக்கு எந்த உடல் பிரச்சினையும் இல்லை. கார்பிட் - லெரி தம்பதிக்கு பிறந்துள்ள 5வது குழந்தை இது. கொழு கொழுவென குழந்தை பிறந்ததில் கார்பிட்டுக்கு ஏக மகிழ்ச்சிதான். ஆனால் ஒரேயொரு குறையாம். குழந்தைக்காக வாங்கி வைத்திருந்த துணிகள் எதையும் போட முடியாது. இனி 1 வயதுக்கான குழந்தையின் துணிகளை புதிதாக வாங்கினால்தான் சரியாக இருக்கும் என கூறியிருக்கிறார்.

### பரிதவிக்கும் அகதிகள்

உள்நாட்டு போர், தீவிரவாதம், வறுமை, பசி, பட்டினி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சொந்த நாட்டை விட்டு புகலிடம் தேடி அலையும் அகதிகள் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. ஐரோப்பாவில் தஞ்சமடைவதற்காக சிறு படகுகளில் உயிரை பணயம் வைத்து அகதிகள் வருகின்றனர்.

இந்தாண்டில் சுமார் 60,000 அகதிகள் ஐரோப்பாவில் தஞ்சமடைய கிரீஸுக்கு வந்திருப்பதாக சர்வதேச குடியேற்ற கழகம் தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைவு என்பது ஆறுதலான விடயம்.

# ஈரானைத் தொடர்ந்து சவூதியை தாக்குவோம்

ஈரானைத் தொடர்ந்து சவூதி அரேபியாவில் தாக்குதல் நடத்தப்போவதாக ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது.

ஈரான் பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமையன்று தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். கொமேனி நினைவிடத்திலும் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல்களில் சுமார் 17 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. அத்துடன், ஈரானில் உள்ள ஷியா பிரிவினர் மீது மேலும் தாக்குதல்கள் நடத்தப்படும் என மிரட்டியுள்ளனர். இதன்மூலம் ஈரானில் முதல் முறையாக ஐ.எஸ். பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதேபோன்று சவூதியிலும் தாக்குதல் நடத்தப்படும் என ஐ.எஸ். அமைப்பு மிரட்டல் விடுத்திருக்கிறது. சமீபத்தில் வெளியாகியுள்ள ஒரு வீடியோவில், முகத்தை மறைத்தபடி பேசும் 5 தீவிரவாதிகள், ஈரானில் உள்ள ஷியா பிரிவினருக்கும், சவூதி அரசுக்கும் மிரட்டல் விடுத்துள்ளனர். 'ஈரானில் முதல் முறையாக தாக்குதல் நடத்தப்படும்.




ஈரானைத் தொடர்ந்து சவூதியில் தாக்குதல் நடத்துவோம்' என கூறியுள்ளனர்.

சர்வதேச தீவிரவாத அமைப்புகளின் தகவல்களைத் தேடும் அமைப்பான சைட் புலனாய்வுக்குழு இந்த தகவலை வெளியிட்டிருக்கிறது. மேலும், இந்த வீடியோ ஈரான் தாக்குதலுக்கு முன்னதாக பதிவு செய்யப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

சவூதி உள்ளிட்ட 7 நாடுகள் கட்டாருடனான தூதரக உறவை முறித்துக்கொண்டதால் மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. இந்த சூழ்நிலையில் சவூதியில் தாக்குதல் நடத்தப்போவதாக ஐ.எஸ். அமைப்பு கூறியிருப்பதால் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

# லிபியா கடற்பகுதியில் 900 அகதிகள் மீட்பு



இத்தாலிக்கு புகலிடம் தேடி அகதிகளாகச் சென்ற 900 பேரை இத்தாலிய கடற்படையினர் லிபியா கடற்பகுதியிலிருந்து மீட்டுள்ளனர்.

இதுகுறித்து இத்தாலிய கடற்படை அதிகாரிகள் தெரிவித்ததாவது:-

மத்தியதரைக் கடல் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை தனித்தனியே மேற்கொள்ளப்பட்ட எட்டு மீட்பு நடவடிக்கைகளின்போது அகதிகளாகச் சென்று நடுக்கடலில் தத்தளித்த 800 பேரை கடலோர காவல் படையினர் பத்திரமாக மீட்டுள்ளனர்.

இரண்டு ரப்பர் படகுகள் உள்ளிட்ட எட்டு படகுகளில் அகதிகளாகச் சென்ற மேலும், 130 பேர் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளின்போது மீட்கப்பட்டனர் என்று அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## உலகச் செய்திகள்

# தீவிரவாதத்துக்கு கட்டார் உதவுகிறது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை

## துருக்கி ஜனாதிபதி அர்தூகான் தெரிவிப்பு



தீவிரவாதத்துக்கு கட்டார் உதவுகிறது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று துருக்கி ஜனாதிபதி அர்தூகான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அர்தூகான் தெரிவிக்கையில்:-

"தீவிரவாதத்துக்கு கட்டார் உதவுவதாக இதுவரை நான் அறிந்ததில்லை. சவூதி மற்றும் அதன் கூட்டு நாடுகள் கட்டார் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கு எந்த ஆதாரமும் இல்லை'' என்றார்

வளைகுடா நாடான கட்டார் இஸ்லாமியக் குழுக்களுக்கு ஆதரவளித்து தீவிரவாதத்தை வளர்ப்பதாகக் கூறி தங்கள் இராஜாங்க உறவுகளைத் துண்டித்துக் கொள்வதாக சவூதி உள்ளிட்ட ஏழு நாடுகள் அறிவித்துள்ளன.

ஆனால் சவூதி மற்றும் அரபு நாடுகளின் இந்த முடிவை துருக்கி ஜனாதிபதி ஆரம்பம் முதலே விமர்சித்து வந்ததுடன் கட்டாருடனான துருக்கியின் உறவு தொடரும் என்று அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்டார் யாத்திரிகர்களுக்கு மக்காவினுள் பிரவேசிக்க அனுமதி மறுப்பு

மக்காவின் உம்ராவை நிறைவேற்றச் சென்ற கட்டார் நாட்டின் யாத்திரிகர்களுக்கு புனித மக்காவில் பிரவேசிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கட்டார் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இது வழிப்பாட்டு சுதந்திரத்தை மீறும் செயல் என கட்டார் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்தது.



# போயஸ் கார்டன் இல்லம் எனக்கும் தீபாவுக்குமே சொந்தம்



(திருச்சி சாஹுல் ஹமீது)

போயஸ் கார்டன் இல்லம் எனக்கும், என்னுடைய சகோதரி தீபாவுக்குமே சொந்தமானது என தீபக் பேட்டியளித்துள்ளார்.

சென்னை போயஸ் கார்டனில் ஜெயலலிதாவின் இல்லத்திற்குள் செல்ல ஜெ.தீபாவிற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. போயஸ் கார்டன் இல்லத்திற்கு வெளியே தீபா ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். செய்தியாளர்களுக்கு செய்தி சேகரிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால் செய்தியாளர்கள் தரப்பிலும் போராட்டம் நடத்தப்பட்டது. ஆங்கிலப் பத்திரிகை செய்தியாளர் தாக்கப்பட்டுள்ளார், கேமரா, மைக் போன்ற உபகரணங்கள் சேதப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்நிலையில் தீபக் பேசுகையில், போயஸ் தோட்ட இல்லம் எனக்கும், என் சகோதரிக்கும் மட்டுமே சொந்தமானது. போயஸ் தோட்ட இல்லத்திற்கு வேறு யாரும் உரிமை கொண்டாட முடியாது. போயஸ் கார்டனில் ஜெயலலிதாவின் படத்திற்கு தீபா மரியாதை செலுத்தினார். சகோதரி தீபாவை போயஸ் இல்லத்திற்கு நான்தான் அழைத்தேன். தீபாவை யாரும் தடுக்கவில்லை என்றார்.

தினகரன் ஆதரவாளர் புகழேந்தி பேசுகையில், போயஸ் தோட்ட இல்லத்திற்கு தீபா எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்றார். தினகரன் ஆதரவாளர்கள் உள்ளே செல்லவிடாமல் தடுப்பதாக கூறுவது தவறான தகவல் என்றார்.

# தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதை கட்டார் நிறுத்த வேண்டும்


## டிரம்ப் வலியுறுத்து

தீவிரவாத இயக்கங்களுக்கு மறைமுகமாக கட்டார் உதவுவதாக கூறி, அந்நாட்டுடனான தூதரக உறவை 7 நாடுகள் முறித்துள்ள நிலையில், தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதை கட்டார் நிறுத்திக்கொள்ள வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு மறைமுகமாக நிதி உதவி செய்வதாக குற்றம்சாட்டி கட்டாருடனான தூதரக உறவை சவூதி, பஹ்ரைன், எகிப்து, யெமன், எமிரேட்ஸ், லிபியா மற்றும் லிபியா ஆகிய நாடுகள் துண்டித்தன.

இதனால் மேற்கண்ட நாடுகளுக்கிடையே விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. தூதர்கள் திரும்ப பெறப்பட்டனர். மேலும் மசகு எண்ணெய் விலை உயரும் அபாயம் நிலவுகிறது. கட்டாரின் உணவு பற்றாக்குறை ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. எனவே இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர சர்வதேச நாடுகள் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளன. குறிப்பாக கட்டார் மீது தூதரக தடை விதித்த ஐந்து அரபு நாடுகள் இடையே சமரசம் ஏற்படுத்த குவைத்தும், துருக்கியும் ஈடுபட்டுள்ளன.

துருக்கி அரசானது கட்டாருக்கு தேவையான உணவுப்பொருட்கள் மற்றும் இராணுவ உதவிகள் வழங்குவதாக அறிவித்துள்ளது. இந்நிலையில், வெள்ளை மாளிகைக்கு இத்தாலி ஜனாதிபதி லாயுஸ் ஜோஹான்னிஸ் வருகை தந்துள்ளார். அவருடன் பேச்சு நடத்திய பின் ஜனாதிபதி டிரம்ப் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, கட்டார் விவகாரம் தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர்.



அதற்கு பதிலளித்த டிரம்ப், கட்டார் தவறுதலாக மிக அதிகளவிலான நிதியை தீவிரவாதத்திற்கு அளிக்கிறது. இதனை கட்டுப்படுத்த பல்வேறு கூட்டங்களில் பேசப்பட்டது. கட்டார் தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதை நிறுத்தவேண்டும். வெறுப்புணர்வை விதைப்பதை நிறுத்த வேண்டும் என பேசினார்.

மேலும், தீவிரவாதத்திற்கு எதிராக அனைத்து நாடுகளும் ஒன்றிணைய நான் அழைப்பு விடுக்கிறேன். சகிப்புத்தன்மையை கொல்பவர்களை தடுக்க அழைப்பு விடுக்கிறேன். மனிதர்களே மனிதர்களை கொல்லும் கொடூர பயங்கரவாதத்திற்கு எதிராக அனைவரும் ஒன்று கூட அழைப்பு விடுக்கிறேன் எனவும் தெரிவித்தார்.

கட்டார் மீது தடை விதித்துள்ள சவூதிக்கும் அதன் மன்னர் சல்மானுக்கும் தான் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் தனது பேச்சில் டிரம்ப் தெரிவித்தார்.

11

2017 ஜூன் 12

ஹிஜ்ரி 1438 ரமழான் 17

நவமணி மற்றும் ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனம் ஐந்தாவது தடவையாக இணைந்து நடாத்தும் மாபெரும் பரிசுப்போட்டி

ரமழான் முபாறக் பரிசு மழை

நவமணி

**போட்டி - 01**

(திங்கள் – வெள்ளி)

1ஆம் பரிசு : உம்ரா பொதி
2ஆம் பரிசு : மடிக் கணனி
3ஆம் பரிசு : கணனி
22 ஆறுதல் பரிசுகள்

**போட்டி - 02**

(வெள்ளிக்கிழமை)

கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களுக்கு பெறுமதியான பரிசில், நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கப்படும்

**போட்டி நிபந்தனைகள்**

- தினமும் 5 கேள்விகள்
- 30 நாள் கேள்விகளில் 25 நாட்களுக்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது. (5 நாட்களுக்கு விடையளிக்காது விடலாம்)
- வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படும் தலைப்புக்கு (போட்டி 02) 200 சொற்களில் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.
- போட்டி 02 இல் பங்குபற்றுவது விருப்பத்துக்குரியது
- போட்டி 01 மற்றும் 02 இற்கான விடைகளை ஒட்டுமொத்தமாக ஜுலை 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். தனியாக அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- போட்டிகளின் முடிவுத்திகதி - ஜுலை 15, 2017

1. ஸஹர் செய்வதன் சிறப்பு குறித்து சொல்லும் ஹதீஸ் ஒன்றைத் தருக?
2. அல் - குர்ஆனின் 'அல்ஹம்துலில்லாஹ்' என ஆரம்பிக்கும் சூராக்கள் எவை?
3. ஹஜ்ஜுக்கு மட்டும் இஹ்ராம் அணிதல் எவ்வாறு அழைக்கப்படும்?
4. கவாரிஜ்கள் வழிகெட காரணமாய் அமைந்தது எது?
5. ஆபிரிக்கக் கண்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகக் கொண்ட 5 நாடுகளைத் தருக?

நவமணி போட்டி - 11 12.06.2017 - திங்கட்கிழமை நவமணி

பெயர் :....................................

முகவரி :....................................

தொலைபேசி :....................................

தே.அ.அ. இல. :....................................

கையொப்பம் :....................................

Freelanka Media Ltd, 156, Hospital Road, Kalubowila, Dehiwala

மேலதிக விபரங்களுக்கு
எம்.எஸ்.எம். சாஜஹான் - 0778751032,
வாரித் - 0772604964, அஷ்ஷெய்க் ரிஷாத் 077 2415415

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி வடமாகாண அளுநர் ரெஜினோல்ட் குரேயின் அலுவலகத்தில் வைத்து காணாமல் போனவர்களின் உறவினர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போதும் அதற்கு பின்னரும் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டும் வெள்ளை வேன்களில் கடத்தப்பட்டும் காணாமல் போயுள்ள தமது உறவுகளை விடுவிக்குமாறு கோரி வடமராட்சி, கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் 100 நாட்களை தாண்டியும் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் வடக்கு கிழக்கு காணாமல் போனவர்களின் உறவினர்கள் இரு தடவைகள் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடியதுடன் தமது உறவுகள் தொடர்பில் அரசாங்கம் உரிய பதிலை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தனர். இந்நிலையில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதியை கடந்த மாத நடுப்பகுதியில் சந்தித்து காணாமல் போனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தார்.

அதேவேளை, கிளிநொச்சியில் கடந்த வாரம் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஜனாதிபதி தமக்கு உரிய பதிலை வழங்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தனர். இவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதி இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து காணாமல் போனவர்களின் உறவினர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

## எரிக்கப்பட்ட...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தூக்கி பிடிக்கின்ற போதும் அவர்களை இன்றைய ஆட்சியாளர்கள் யாருமே சிறிதும் கணக்கில் கொள்ளவில்லை. எமது ஆட்சிக் காலத்தில் இப்படியான ஒரு நிலை இருக்கவில்லை. எமது ஆட்சி காலத்தில்இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது முஸ்லிம்களுக்கு சார்பாக யாராவது ஒருவர் குரல் கொடுப்பார். அப்படிமுஸ்லிம்களிடத்தில்நல்ல பெயர் வாங்கியவர்களில் ஒருவர் தான் தற்போது பிரபலமான அமைச்சராகவுள்ள ராஜித சேனாரத்னவாகும்.இருந்த போதிலும் இன்றைய முஸ்லிம் அரசியல் வாதிகள் அவர்களுடன் தான் ஒட்டி உறவாடிக்கொண்டிருக்கின்றனர்.

முஸ்லிம் வர்த்தக நிலையங்களை தீயூட்டுபவர்களின் நோக்கம் முஸ்லிம்களின் வர்த்தகத்தை முடக்குவதாகும். இவ்வாறு பற்ற வைக்கப்படும் ஒவ்வொரு கடைகளையும் முன்னர் இருந்தவாறு மீள சீர் செய்து வழங்கும் போது எரியூட்டுபவர்களின் எண்ணம் தவிடு பொடியாகிவிடும். வேண்டுமென்றே இனவாதிகள் பற்ற வைக்கும் கடைகளை மீள சீர் செய்வதை யாருமே எதிர்க்க மாட்டார்கள். இனவாதிகள்வேறு வழி ஓய்ந்து விடுவார்கள். அல்லது மக்களால் ஓய்வெடுக்கச் செய்யப்படுவார்கள். நாங்கள் இக் கடைகளுக்கான இழப்பீடுகளை தருகின்றோம் என்ற பொய் வாக்குறுதியையாவது இவ்வாட்சியாளர்கள் யாராவது தந்துள்ளார்களா? மாறாக பினான்ஸ் பணத்தை பெறுவதற்கு முஸ்லிம்கள் தங்கள் கடைகளை தாங்களே பற்ற வைக்கின்றார்கள் என்ற மனதை உருக்கும் வார்த்தைகளை அந்த மக்களுக்கு பரிசாக வழங்குவதை அவதானிக்க முடிகிறது. முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களை எரியூட்டி முஸ்லிம்களின் வர்த்தகத்தை முடக்கும் திட்டம் இன்றைய ஆட்சியாளர்களால் தீட்டப்பட்டிருப்பின் இழப்பீடுகள் வழங்கப்படுமா என்பதே முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டிய பகுதியாகும்.

எமது ஆட்சி காலத்தில் அளுத்கமை கலவரம் இடம்பெற்று முடிந்த ஓரிரு மாதங்களுக்குள் அந்த மக்கள் இழந்த சொத்துக்கள் அனைத்தையும் மதிப்பீடு செய்து புனரமைத்து கொடுத்திருந்தோம். இருந்தாலும் அன்று அந்த மக்களின் உள்ளங்களில் இதன் பின்னால் நாங்கள் தான் உள்ளோம் என்ற அந்த மனோ நிலையையேமாற்ற முடியாது போனது. ஏனைய இழப்பீடுகள் தொடர்பான மதிப்பீடுகளை செய்து கொண்டிருக்கும் போது எங்கள் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த இழப்பீடுகளை நாம் அன்றேமதிப்பீடு செய்து வைத்திருந்த போதும் அவைகள் இவ்வரசால் இன்னும் வழங்கப்படவில்லை.

இப்படியான அரசிடமிருந்து கடைகள் பற்ற வைக்கப்படும் போதான இழப்பீடுகளை எதிர்பார்க்க முடியாது. தற்போது முஸ்லிம்களின் புனித மாதங்களில் ஒன்றான ரமழான் மாதத்தில் அந்த மக்களை சதா அச்சுறுத்திய வண்ணம் இக் கடை எரிப்புக்கள் அமைந்துள்ளன.

இவைகள் உடனடியாக கட்டுப்படுத்தப்பட்டு முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். கடைகளை பற்ற வைக்கும் நபர்கள் சிக்குகின்ற போதும் இதன் பின்னால் உள்ள சக்திகள் இன்னும் வெளிப்படாமல் மறைத்து பாதுக்காப்பதன் பின்னால் இவ்வாட்சியின் முக்கியஸ்தர்கள் இருக்காமல் வேறு எவராகவும் இருக்க முடியாது.

# கட்டார் நெருக்கடி குறித்து அமைப்புகளுடன் பேச்சு

## தூதுவர் லியனகே ஏற்பாடு

கட்டார் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை உக்கிரமடைந்தால், இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கட்டாரிலுள்ள இலங்கைக்கான தூதுவர் ஏ.எஸ்.பீ. லியனகே தெரிவித்துள்ளார்.

இதற்காக வேண்டி இலங்கையர்களின் 22 அமைப்புக்களுக்கு அழைப்புவிடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில் சகல தரப்பினருடனும் ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது கட்டாரிலுள்ள இலங்கையர்களின் தொழில்கள் தொடர்பில் எந்தவித எச்சரிக்கைகளும் இல்லையெனவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

## நுகேகொடையில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைப்பின் முக்கியஸ்தர் பேராசிரியர் தம்பர அமில தேரர் தெரிவித்தார். நேற்று புரவெசி பலய, தேசிய சூரா கவுன்ஸில் உட்பட முஸ்லிம் பிரதிநிதிகள் பொலிஸ் மா அதிபரைச் சந்தித்து நாட்டில் முஸ்லிம்களுக்கு நடைபெற்றுவரும் அநீதிகளைத் தெளிவுபடுத்தியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கைதுசெய்யப்பட்டுள்ள 32 வயதுடைய ககன் குமார 2014ஆம் ஆண்டுகளில் பொதுபல சேனா அமைப்புடன் தொடர்பிருந்துள்ளதோடு, மேற்படி தொடர்புகளை ஆராய்ந்து ஊர்ஜிதப்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். ககன் குமாரவை 72 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றது. தானே கடைகளுக்கு தீ மூட்டியதை அவர் ஒத்துக் கொண்டுள்ளார்.

## தற்போதைய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பொது பல சேனா அலுவலகத்துக்கு வரும் அனைவரும் அமைப்பின் உறுப்பினர்களோ அமைப்புடன் சம்பந்தப்பட்டவர்களோ இடையாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் தற்போது தொடர் தாக்குதல்களுக்கு உட்படுத்தப்படுகின்றமைக்கு பொதுபல சேனாவினரே காரணம் என்று குற்றம் சுமத்தப்படுகின்றமைக்கு மறுப்புத் தெரிவிக்கும்வகையில் நேற்றைய தினம் முகப்புத்தகத்தின் ஊடாக கருத்து தெரிவித்தபோதே டிலாந்த வித்தானகே மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, ஞானசார தேரரை குருநாகலில் வைத்து கைது செய்ய முற்பட்டமை, முஸ்லிம் அடிப்படைவாதிகளின் செயற்பாடுகள் தொடர்பில் நாம் எமது எதிர்ப்பினை தெரிவித்துக் கொள்கிறோம்.

எனினும், நாட்டின் நிலவும் பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வினை முன்வைக்க வேண்டும் என்பது தான் எமது கொள்கையாக இருக்கின்றது. ஆனால், சில முஸ்லிம் அரசியல்வாதிகள், அடிப்படைவாதிகள், ஏனைய சில அரசியல்வாதிகள், ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரின் தூண்டுதலில் தற்போது இடம்பெற்றுவரும் செயற்பாடுகளுக்கு ஞானசார தேரர் மற்றும் பொது பல சேனாவினர் தான் காரணம் என்று முத்திரைக் குத்தப்படுகின்றது. இதனை நாம் முழுமையாக மறுக்கிறோம்.

கடைகளுக்குத் தீ வைத்தார் என்ற குற்றச்சாட்டின் தற்போது கைது செய்யப்பட்டுள்ள நுகேகொடை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரும் பொதுபல சேனாவின் உறுப்பினர் என்றும் கூறப்படுகின்றது. இது பொய்யாகும்.

எமது அலுவலகத்துக்கு வருகைத் தருவோர் அனைவரும் எமது உறுப்பினர் என எவ்வாறு கூறுவது? அஸாத் ஸாலியின் சகோதரியும் ஒருமுறை உதவிக்கோரி வந்தார். அதேபோல, பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் பேச்சு நடத்த அமைச்சர் பைஸர் முஸ்தபாவும் எமது அலுவலகத்துக்கு வந்தார். அப்படியானால் இவர்களும் எமது உறுப்பினர்களா? எமது அலுவலகத்துக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். அத்தோடு, நாம் நடத்திய கூட்டங்களுக்கு இதுவரை 4 இலட்சத்துக்கும் அதிகமானோரும் வருகைத் தந்துள்ளனர். இவர்கள் அனைவரையும் எமது உறுப்பினர்கள் என்று கூறமுடியுமா?

அந்தவகையில், ஞானசார தேரரையும் பொதுபல சேனாவையும் வேண்டுமென்ற இழிவுக்குட்படுத்தும் செயற்பாடுகள் தான் தற்போது மேற்கொள்ளபடுகின்றன. உண்மையில், தற்போது நடைபெறும் சம்பவங்களுக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இவ்வாறான பிரச்சினைகளை ஏற்படுத்த எமக்கு பலமும் அதிகாரமும் தற்போது காணப்பட்டாலும் நாம் அதனை ஒருபோதும் மேற்கொள்ள மாட்டோம் என்பதையும் கூறிக்கொள்ள வேண்டும். மேலும், நாம் சிங்கள-பௌத்தர்களின் உரிமைக்காகவே அன்றி எந்தவொரு இனத்தையும் அழிக்கும் நோக்கில் போராடவில்லை என்பதையும் அனைவரும் உணர்ந்துக் கொள்ள வேண்டும் என்றுக் குறிப்பிட்டார்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவினால் கோட்டாபயவுக்கு அழைப்பு

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இருந்த பழைய இரும்புகள் ராணுவத்தால் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 15 ஆம் திகதி பாரிய மோசடிகள் மற்றும் ஊழல் தொடர்பாக விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக கோட்டாபய ராஜபக்ஷ கருத்து தெரிவிக்கையில்,

குறித்த சீமெந்து தொழிற்சாலை பயங்கரவாதிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டவுடன் அங்கிருந்த பழைய இரும்புகளை ராணுவத்தின் தேவைக்காக பயன்படுத்த தாமே உத்தரவிட்டதாக குறிப்பிட்டார். எனவே அந்தவிடயம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக தாம் அழைக்கப்பட்டுள்ளதாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். இதற்கு முன்னர் முன்னாள் இராணுவத் தளபதி தயா ரட்நாயக்கவும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார்.

## ஞானசாரர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வழக்கு இன்று மேல் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

சுகவீனம் காரணமாக கடந்த இரு தவணைகளிலும் ஞானசார தேரர் ஆஜராகியிருக்கவில்லை.

இன்று ஞானசார தேரர் ஆஜராகாவிடின் இவருக்கு பிடி விறாந்து பிறப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஞானசார...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஏற்படுத்த முற்படுவோர் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக பாரபட்சம் பாராது சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட பேச்சாளர்,

நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் இன, மத ரீதியிலான குரோத செயற்பாடுகள் தொடர்பில் நாம் விசாரணைகளை ஆரம்பித்துவிட்டோம். இதனுடன் தொடர்புடையோர் எவராக இருப்பினும் அவரை கைது செய்வதே பொலிஸாரின் பிரதான பொறுப்பாகும்.

அந்தவகையில், நுகேகொடை உள்ளிட்ட சில பகுதிகளில் இயங்கிவரும் 4 கடைகளுக்குத் தீ வைத்த பிரதான சந்தேக நபரை தற்போது நாம் கைது செய்துள்ளோம்.

சிற்றுண்டிச் சாலை நடத்திவரும் 32 வயதுடைய குறித்த சந்தேக நபர், வைத்தியர் ஒருவரின் மகன் என்றும் தெரியவந்துள்ளது.

அத்தோடு, இவரிடம் நடத்தப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளின்போது, 2014 ஆம் ஆண்டு முதல் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருடனும், அவ்வமைப்புடன் தொடர்புடைய ஏனைய சில அமைப்பின் பிரதானிகளுடனும் நெருங்கிய தொடர்புடையவர் என்றும் 2014 ஆம் ஆண்டு முதல் நாட்டில் இடம்பெற்ற சில குற்றச் செயல்களுக்கு இவர் சம்பந்தப்பட்டுள்ளார் என்றும் எமக்கு அறியக்கிடைத்துள்ளது.

இவர் மட்டுமன்றி, திருகோணமலை பள்ளிவாசல் தாக்குதலுடன் தொடர்புடைய தமிழ் இளைஞர் ஒருவரும், பேஸ்புக்கில் புத்தபெருமானை இழிவு படுத்தும் வகையில் பதிவிட்ட முஸ்லிம் இளைஞர் ஒருவரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் உத்தரவுக்கமைய நாட்டில் இன, மத துவேசத்தை தூண்டும்வகையில் செயற்படுவோரை பாரபட்சம் பாராது கைது செய்யும் நடவடிக்கைகளும் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றார்.

அதேநேரம், ஞானசார தேரரை தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மறைந்துள்ள இடத்தை இன்னும் தங்களால் கண்டுப்பிடித்துக் கொள்ள முடியாதுள்ளது என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சுக்களின் பொறுப்புகள் தொடர்பாக வர்த்தமானி அறிவிப்பு

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை சீர்திருத்தத்திற்கு அமைய அமைச்சுக்களுக்கான விடயப் பரப்புக்கள் அதிவிசேட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளன.

நிதி, ஊடகம், வெளிவிவகாரம், காணி, நாடாளுமன்ற சீரமைப்பு, அரசாங்க தகவல் உள்ளிட்ட துறை சார்ந்த அமைச்சுக்களின் விடயங்கள் அடங்கிய 2022/34 இலக்க அரசின் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, இதுவரை காலமும் நிதி அமைச்சின் கீழ் இருந்த அபிவிருத்தி லொத்தர் மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகியன வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.இந்த விடயங்களுக்கு மேலதிகமாக வெளிநாடுகளில் உள்ள தூதரக குழுக்கள், லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள், தேசிய கடல்சார் செயற்குழுச் செயலகம் என்பனவும் வெளிவிவகார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

மங்கள சமரவீர அமைச்சராகப் பதவியேற்றுள்ள நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் 33 நிறுவனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.இலங்கை மத்திய வங்கி அல்லது அரச வங்கிகள் அந்த அமைச்சின் கீழ் உள்வாங்கப்படாமை குறிப்பிடத்தக்கது.இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகியன அந்த அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.திறைசேரி, அரச நிதித் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம் என்பனவும் நிதி அமைச்சின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளன.

தேசிய கொள்கைத் திட்டத்திற்கு அமைய, அரச வரி மற்றும் நிதி வருமானம் என்பவற்றுக்கான திட்டங்களை வகுத்தல் மற்றும் தொடராய்வு என்பன நிதி அமைச்சுக்கு உரியவை என்ற போதிலும், தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரிக்கும் விடயம் பிரதமரின் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக வருமானம் சேகரித்தல், செலவு பற்றிய தொடராய்வு, வாழ்வாதார அபிவிருத்தியை இலக்காகக்கொண்ட தேசிய கொள்கைகளைத் தயாரித்தல் ஆகிய விடயப் பரப்புக்களும் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளன.இதற்கு முன்னதாக இந்த விடயங்கள் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடம் இருந்தன. கந்தளாய் சீனி நிறுவனம் தொடர்ந்தும் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சுக்கு சொந்தமான நிறுவனமாக நீடிக்கும் என அதிவிசேட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரச அச்சகத் திணைக்களம், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட அச்சகக் கூட்டுத்தாபனம் ஆகியன வெகுசன ஊடக அமைச்சிடமிருந்து நீக்கப்பட்டு, ரஞ்சித் மத்துமபண்டார அமைச்சராகப் பதவி வகிக்கும் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவின் சமூக வலுவூட்டல் நலன்புரி அமைச்சின் கீழ் கண்டி மரபுரிமை பாதுகாப்பு மற்றும் விருத்தி என்ற விடயம் கொண்டுவரப்பட்டுள்ளது.தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சிடம் சப்ரகமுவ மாகாணத்திலுள் விசேட கருத்திட்டங்களைத் திட்டமிடலும் செயற்படுத்தலும் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த அமைச்சுக்குப் பொறுப்பாக அமைச்சர் W.D.J.செனவிரத்ன செயற்படுகின்றார்.

## துருக்கி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கப்பல்களில் 350 தொன் உணவுப் பொருட்களை அனுப்பிவைக்கவுள்ளதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

சவூதி மற்றும் அதன் நேச நாடுகள் கட்டாரைத் தனிமைப்படுத்தியதைத் தொடர்ந்து கட்டாரில் உணவுத் தட்டுப்பாடொன்று ஏற்பட்டதோடு, அடுத்த நாளே கட்டார் அதனை சீர்செய்திருந்தது. மேலும், கட்டாரில் 12 மாதங்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் இருப்பதாக அந்நாட்டு வணிக அமைச்சு தெரிவித்திருந்தது.

## வீதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மீறும் சாரதிகளை கைது செய்யவும், நீதிமன்ற நடவடிக்கையை மேற்கொள்ளவும், விஷேட சோதனை நடவடிக்கையை அமுல்படுத்தவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

அதற்கமைய பொலிஸ் மோட்டார் சைக்கிள் குழு, பொலிஸ் நடமாடும் சேவை, பொலிஸ் சீ.சீ.டீ.வி கமரா மற்றும் மேலதிக பொலிஸ் அதிகாரிகள் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.இவர்கள் ஊடாக இந்த சட்டத்தை செயற்படுத்துவதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விசேடமாக காலி வீதி, ஸ்ரீ ஜயவர்தனபுர பிரதான வீதி மற்றும் வாகனங்கள் கொழும்பிற்குள் நுழையும் பிரதான வீதிகளில் இந்த சட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஞானசார தேரர் ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அதாவது, அவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்காக தற்போது 4 விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. எனினும், இதுவரை அவர் எங்குள்ளார் என்பது தொடர்பில் கண்டுபிடிக்கப்படவில்லை.

எவராக இருப்பினும் நாம் நடுநிலைமையாக செயற்பட்டு சட்டத்தை நிலைநாட்டுவோம். மேலும், அவர் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லாதவகையில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

விமானநிலையங்கள் உள்ளிட்டவற்றுக்கு நாம் இதுவிடயம் குறித்து அறிவித்தும் உள்ளோம். எனவே, அவர், சட்டபூர்வமாக தப்பிச் செல்ல வாய்ப்பில்லை என்றார்.

இதன்போது, அப்படியானால் சட்டவிரோதமாக அவர் நாட்டை விட்டு வெளியேறியிருப்பாரா? என்று கேள்வியொன்று எழுப்பப்பட்டமைக்கு,

நீதிமன்றினால் பயணத்தடை விதிக்கப்பட்ட எவராக இருப்பினும் சட்டரீதியாக நாட்டை விட்டு வெளியேறிச் செல்லவே முடியாது. எனினும், சட்டவிரோதமாக செல்லலாம் என்று பதிலளித்தார்.

## கொழும்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

49 இலக்க பஸ் மீது கலேவெல பிரதேசத்துக்கு உட்பட்ட தலகிரிய எனும் இடத்தில் வைத்து நள்ளிரவு 1.10 மணியளவில் இனந்தெரியாத நபரினால் கல் வீசப்பட்டது இதன் போது பஸ் முன் கண்ணாடி உடைக்கப்பட்டது

பஸ்ஸிலிருந்த எவருக்கும் எந்த பதிப்பும் ஏற்படவில்லை இவ்வாறு நாடளாவியரீதியில் 7 பஸ் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது

## விசாரணை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தோங்கப்போவதில்லை என்று அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் 378ஆவது சதொச கிளையைத் திறந்து வைத்த பின்னர். இடம்பெற்ற கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றினார்.

அவர் கூறியதாவது, தமிழர்களும் முஸ்லிம்களும் பிளவுகளையும் பிரிவுகளையும் உருவாக்கிக்கொண்டு தமக்குள் பிரச்சினைப்பட்டுக்கொண்டு இருக்கக்கூடாது. கடந்த கால வரலாறுகள் நமக்கு படிப்பினையாக இருக்க வேண்டும். கொக்கட்டிச்சோலை விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண தலைமையகமாக விளங்கியதென்று இங்கு கூறினார்கள். யுத்தம் நமது மக்களின் வாழ்வைச் சீரழித்தது. பொருளாதாரத்தை நாசமாக்கியது. இனங்களுக்கிடையிலான நல்லுறவைச் சீருலைத்தது. நமது தாய்மார்கள் தமது பிள்ளைகளையும் கணவனையும் பறிகொடுத்துவிட்டு அடுத்தவரிடம் கையேந்தும் நிலை இன்று உருவாகியுள்ளது. ஊனமுற்றோர் எண்ணிக்கை நமது சமுதாயத்தில் மலிந்து காணப்படுகின்றது. காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டு பிடித்துத் தாருங்கள் என்று உறவுகள் வீதிகளில் தவம் கிடக்கின்றனர். எனவே இழந்த நிம்மதியை மீண்டும் பெறுவதற்காக நாம் பணியாற்றவேண்டியிருக்கின்றது.

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் முட்டுக்கட்டைகள் தடங்கலுக்கு மத்தியிலுமே கொக்கட்டிச்சோலையில் சதொச கிளையை நிறுவியுள்ளோம். யுத்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேச மக்களின் நன்மை கருதியே நாம் இந்தப்பணியை முன்னெடுத்தோம்.

சதொச நிறுவனம் தற்போது வீறு நடைபோட்டு வெற்றிப் பாதையில் இயங்கி வருகின்றது. சதொசவின் மூலம் எதிர்காலத்தில் அரச அதிகாரிகளுக்கு கடன் வழங்க திட்டமிட்டுள்ளோம். அதே போன்று பண்டிகைக் காலங்களில் வாடிக்கையாளர்களுக்கு விசேட பரிசுத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

சீனியின் விலையை வர்த்தகர்கள் எழுந்தமானமாக அதிகரிக்க முடியாது. 12 அத்தியாவசியப் பொருட்களுக்கு கைத்தொழில் வர்த்தக அமைச்சர் என்ற எனது அமைச்சு அதிகாரத்தைப் பயன்படுத்தி வர்த்தமானி பிரகடனம் மூலம் விலையை நிர்ணயித்துள்ளோம். கண்டபடி, மனம் போன போக்கில் வர்த்தகர்கள் எழுந்தமானமாக செயற்பட முடியாது. அவ்வாறு செயற்படுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வெளிநாட்டில் சீனியின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் இறக்குமதித் தீர்வை 10 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டமைக்காக வர்த்தகர்கள் உள்நாட்டிலும் சீனியின் விலையை தாங்கள் விரும்பியவாறு அதிகரிக்கின்றனர். கொள்வனவு விலையில் எந்தப் பாதிப்பும் ஏற்படாத நிலையில் வர்த்தகர்களின் இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.

அடுத்த செவ்வாய்க் கிழமை இது தொடர்பாக வர்த்தகர்களை எனது அமைச்சுக்கு அழைத்து பேச்சு நடத்தவுள்ளேன். எவருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லாது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அமைச்சர் கூறினார். இந்த நிகழ்வில் பிரதியமைச்சர் அமீர் அலி, முன்னாள் பிரதியமைச்சர் கணேசமூர்த்தி மற்றும் ஊர்ப்பிரமுகர்கள் எனப் பலரும் உரையாற்றினர்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்



## தரங்கவின் தடை; மஹேல அதிருப்தி

தென்னாபிரிக்க அணிக்கெதிரான போட்டியில் தலைமை தாங்கிய இலங்கை கிரிக்கெட் அணியின் உபுல் தரங்கவிற்கு இரண்டு போட்டிகளில் தடை விதிக்கப்பட்டமைக்கு, அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன அதிருப்தி வெளியிட்டுள்ளார். இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது, இது மாதிரியான தண்டனைகள் எங்கள் நாட்டுக்கு மட்டுமல்ல, ஏனைய அணிகளுக்கும் பொருந்தும் என குறிப்பிட்டுள்ளார்.

நியூசிலாந்து அணி பந்துவீச தாமதமாகியமைக்காக அவ்வணியின் தலைவர் கேன் வில்லியம்சனுக்கு தடைவிதிக்கப்படவில்லை. மாறாக வில்லியம்சனுக்கு போட்டி சம்பளத்தின் 40 சதவீத தொகை தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளது. இந்த பின்னணியிலேயே மஹேல ஜயவர்தன இந்தக் கருத்தை வெளிவிட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் அணித்தலைவராக செயற்பட்ட உபுல் தரங்க, பந்துவீச்சில் 39 நிமிடங்களை கூடுதலாக எடுத்துக்கொண்டதால் அவருக்கு இரு போட்டிகளில் விளையாட தடைவிதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும், உபுல் தரங்கவிற்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கு, பயிற்சியாளரே பொறுப்பேற்க வேண்டுமென இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால கூறியிருந்தார். இவரது இழப்பு அணிக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் இதுகுறித்து இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால கூறுகையில்,உபுல் தரங்கவிற்கு விதிக்கப்பட்டுள்ள இந்த தடைக்கான முழுப்பொறுப்பையும் பயிற்சியாளர் கிரஹம் போர்ட் தான் ஏற்கவேண்டும். இந்தப்போட்டியில் பயிற்சியாளர் கிரஹம் போர்டின் வழிநடத்தல் குறித்து நான் திருப்தி கொள்ளமாட்டேன்.

அதேவேளை, இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெறுவுள்ள போட்டிகளில் தரங்கவிற்கு விளையாட முடியாததால் இலங்கை அணிக்கு அது மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தலையை பதம் பார்த்த பந்து: தீவிர கண்காணிப்பில் திசர



இலங்கை அணியின் சகலதுறை வீரர் திசர பெரேரா நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பயிற்சியின்போது உபாதைக்கு உள்ளாகியுள்ளார். கார்டிப்பில் இடம்பெற்ற பயிற்சியின் போது திசர பெரேராவின் தலையில் பந்து தாக்கியுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் அணியுடன் இன்று தீர்மானமிக்க போட்டி இடம்பெறவுள்ள நிலையில், அவர் இந்த உபாதைக்கு உள்ளாகியுள்ளார். எனினும் பந்து தலையில் தாக்கியதால் திசர பெரேராவுக்கு பாரதூரமான உபாதை ஏற்படவில்லை எனவும் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உரிய சிகிச்சை வழங்கப்பட்டதாகவும் கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.எனினும், இன்றைய போட்டியில் திசர பெரேரா பங்கேற்பதில் சந்தேகம் நிலவுவதாக கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ள நிலையில், மற்றுமொரு சகலதுறை வீரர் ஒருவர் தொடர்பில் பரிசீலனை இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இருப்பினும் இன்று நடைபெறவுள்ள பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் அவர் இடம்பெறுவாரா இல்லையா என்பது குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை. இப்போட்டியில் திசர பெரேரா விளையாடாத நிலை ஏற்படின், அணிக்கு சிக்குகே பிரசன்ன உள்வாங்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னதாக இலங்கை அணியின் இடக்கை துடுப்பாட்டக்காரரான குசல் பெரேரா தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்ற கிண்ணத் தொடரிலிருந்து உபாதை காரணமாக வெளியேறியுள்ளார். இந்நிலையில், குசல் பெரேராவுக்குப் பதிலாக தனஞ்சயா டி சில்வாவை அணியில் இணைத்துக்கொள்ள இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன், இதற்கான அனுமதியை ஐ.சி.சியின் தொழில்நுட்ப குழு வழங்கியுள்ளது .

கடந்த வியாழக்கிழமை இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் இலங்கை ஈட்டிய அபார வெற்றிக்கு குசலின் பங்களிப்பும் காரணமாக அமைந்தது .அவர் குறித்த போட்டியில் 47ஓட்டங்கள் எடுத்த நிலையில் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக தனது ஆட்டத்தை இடைநடுவில் நிறுத்திக் கொண்டமை இங்கே குறிப்பிடத்தக்கது. முன்னதாக சாமர கபுகெதரவும் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகி இருந்தார் . காயம் காரணமாக இத் தொடரிலிருந்து நான்கு கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் இது வரையில் இத் தொடரிலிருந்து விலகி உள்ளமை மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.



## சம்பியன் கிண்ணப் போட்டி: இலங்கைக்கு வாழ்வா? சாவா?

### பாகிஸ்தானுடன் இன்று பலப்பரீட்சை



பீ.எப்.எம் நிஷாட்

ஐசிசி சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் கார்டிப் மைதானத்தில் இன்று நடைபெறும் பி பிரிவின் கடைசி லீக் போட்டியில் பாகிஸ்தான் அணியை எதிர்த்து இலங்கை அணி களமிறங்கவுள்ளது. இலங்கை அணி தனது முதல் போட்டியில் 96 ஓட்டங்களால் தென்னாபிரிக்காவிடம் தோல்வியைத் தழுவினாலும், பிரபல இந்திய அணியுடனான போட்டியில் 7 விக்கெட்டுக்களால் இலங்கை அணி அபார வெற்றி பெற்று அரையிறுதிக்கான வாய்ப்பை பெற்றுக்கொண்டது.அதேபோல பாகிஸ்தான் அணி 124 ஓட்டங்களால் இந்தியாவிடம் தோல்வியைத் தழுவினாலும், பிரபல தென்னாபிரிக்க அணியை டக்வர்த் லூவிஸ் முறைப்படி 19 ஓட்டங்களால் வெற்றிகொண்டு அரையிறுதிக்கான வாய்ப்பை உறுதி செய்துகொண்டது. எனவே இத் தொடரின் அரையிறுதிச் சுற்றுக்கு தகுதிபெற வேண்டுமானால் பி பிரிவின் கடைசி லீக் போட்டியாக அமையவுள்ள இப்போட்டியில் இவ்விரு அணிகளில் ஒன்று வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கவுள்ளது.

தென்னாபிரிக்காவிடம் முதல் போட்டியில் தோற்றபோதிலும், கடந்த 18 மாதங்களாக சர்வதேச அளவில் ஒருநாள் போட்டிகளில் சோபிக்காத இளம் வீரர்களைக் கொண்ட இலங்கை அணிக்கு அனுபவமிக்க வீரர்களைக் கொண்ட இந்தியாவை மிக எளிதில் வெற்றி பெற முடியாது எனவும், இலங்கையுடனான போட்டியை ஒரு பயிற்சிப் போட்டியாகக் கருதுவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.ஆனாலும் குசல் மெண்டிஸ், தனுஷ்க குணதிலக, அணித்தலைவர் அஞ்சலோ மெத்யூஸ் மற்றும் அசேல குணரத்னவின் அபார ஆட்டத்தால் இலங்கை அணி இறுதியில் வெற்றியைப் பதிவுசெய்து இந்தியாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தது.அத்துடன், இந்திய அணி, இலங்கை அணிக்கெதிராக இங்கிலாந்து மண்ணில் சுமார் 38 ஆண்டுகளுக்கு பின் இலங்கை அணியிடம் தோல்வியை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இவ்விரு அணிகளுக்குமிடையில் இதுவரை 147 ஒருநாள் போட்டிகள் நடைபெற்றுள்ளதுடன், இதில் 84 போட்டிகளில் பாகிஸ்தான் அணியும், 54 போட்டிகளில் இலங்கையும் வெற்றி பெற்றுள்ளது. அத்துடன், இதுவரை நடைபெற்ற 7 சம்பியன் கிண்ணப் போட்டிகளில் இறுதியாக 2006ஆம் ஆண்டு நடைபெற்றிருந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் குழு நிலை ஆட்டமொன்றில் இலங்கையை எதிர்கொண்டிருந்த பாகிஸ்தான் அணியானது 4 விக்கெட்டுகளால் அப்போட்டியில் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியைப் பொறுத்தவரை அதன் மிகப்பெரிய பலமாக பந்துவீச்சு உள்ளது.நட்சத்திர வீரரான லசித் மாலிங்கவின் அனுபவம் நிச்சயம் இன்றைய போட்டியில் இலங்கை சாதகமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இதுவரை எந்தவொரு போட்டியிலும் விளையாடாத லக்ஷான் சந்தகென் இன்றைய போட்டியில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.எனினும், இந்தியாவுடனான போட்டியில் உபாதைக்குள்ளான குசல் ஜனித்துக்குப் பதிலாக யாரை களமிறக்குவது தொடர்பில் இதுவரை அறிவிக்கவில்லை.எனினும், இந்தியாவுடனான போட்டியில் இலங்கை அணியின் இளம் வீரர்கள் வெளிப்படுத்திய திறமைகளை இன்றைய போட்டியிலும் வெளிப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒருநாள் தரவரிசையில் ஆறாம் இடத்திற்கு மீண்டும் முன்னேறியிருக்கும் இலங்கை அணியானது, 2016ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து 29 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியிருப்பதுடன், அதில் 9 போட்டிகளில் மாத்திரமே வெற்றி பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை சம்பியன் கிண்ணத்தினை வெற்றி பெறாத அணிகளில் ஒன்றாகக் காணப்படும் பாகிஸ்தான் அணியின் அண்மைய ஆட்டத்தினை பார்க்கும் போது, இந்திய அணியிடம் படுதோல்வியை சந்தித்தாலும், அதனைத் தொடர்ந்து, தென்னாபிரிக்க அணியுடனான போட்டியில் மழை குறுக்கிட்டதன் காரணமாக, 19 ஓட்டங்களால் டக்வர்த் லூவிஸ் முறையில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்ற காரணத்தினால், சம்பியன் கிண்ணத் தொடரில் அரையிறுதிப் போட்டிக்கான வாய்ப்பினை அதன் மூலம் தக்க வைத்துக்கொள்கின்றது. பாகிஸ்தான் அணிக்கும் இலங்கை அணியுடனான போட்டி அரையிறுதி வாய்ப்பினை தீர்மானிப்பதால் மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. 2016ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து இன்று வரை 21 ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருக்கும் பாகிஸ்தான் அணியானது அதில் 9 போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கின்றது.

இந்தப் போட்டியில் கட்டாயம் வெற்றிபெற வேண்டிய நிலையில் இலங்கை அணியானது சம்பியன்ஸ் கிண்ணத்தில் தமக்கு வாழ்வா? அல்லது சாவா? என்கிற நிலையில் களமிறங்குகின்றது.

## வெளியேறியது ஆஸி.; அரையிறுதியில் வங்கம்



சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து, உலகச் சம்பியனான அவுஸ்திரேலிய அணி வெளியேற்றப்பட்டுள்ளது. இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்தே, அவ்வணி வெளியேறியது.பேர்மிங்காமில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 277 ஓட்டங்களைப் பெற்றது. 278 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 3 விக்கெட்டுகளை இழந்து 35 ஓட்டங்களுடன் தடுமாறியது. ஆனால், அணித்தலைவர் ஒய்ன் மோர்கன், சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தால் டக்வேர்த் லூயிஸ் முறையில்,40 ஓட்டங்களால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.இந்தப் போட்டியின் முடிவைத் தொடர்ந்து, இக்குழுவிலிருந்து பங்களாதேஷ் அணி, வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் பிரபல நியூசிலாந்து அணியை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. இங்கிலாந்து அணி, ஏற்கெனவே அரையிறுதிக்குத் தகுதி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.2000ஆம் ஆண்டுக்குப் பிறகு சம்பியன் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்ற பங்களாதேஷ் முதற்தடவையாக ஐ.சி.சியின் நடத்தும் தொடரின் அரையிறுதிக்குத் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

## ரஷித்கானின் அபார பந்துவீச்சு: மேற்கிந்தியாவுக்குத் தோல்வி



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து 3 போட்டி கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகின்றது. இவ்விரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை செயின்ட் லூசியா மைதானத்தில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் 50 ஓவரில் 6 விக்கெட்டினை இழந்து 212 ஓட்டங்களை எடுத்தது. அவ்வணி சார்பாக ஜாவித் அமடி 81 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். 213 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து திணறியது.சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கான் பந்துவீச்சு சிறப்பானதாகவும் துடுப்பாட்ட வீரர்களை நிலைகுலையவும் வைத்தது.மேற்கிந்திய அணி 44.4 ஓவரில் 149 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கட்டுக்களையும் இழந்தது.ரஷித் கான் 8.4 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட் வீழ்த்தி இந்நிலையில்,அவ்வணி 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

## முரளிதரனுக்கு ஐ.சி.சி விருது




சர்வதேச கிரிக்கட் பேரவையினால் கிரிக்கட் விளையாட்டு வீரர்களுக்காக வழங்கப்படும் அதிகூடிய உயர்விருதான HALL OF FAME விருது இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனுக்கு வழங்கப்பட்டது. சம்பியன் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டித்தொடரின் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்திய இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான போட்டியின் போது முன்னாள் சுழற்பந்து ஜாம்பவானான முரளிதரனுக்கு இவ்விருது வழங்கப்பட்டது. இதன்மூலம் இவ் விருதினை பெற்ற முதலாவது இலங்கை வீரர் என்ற சாதனையையும் முரளி படைத்தார். டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 800 விக்கெட்டுக்களை கைப்பற்றிய உலகின் முதலாவது பந்துவீச்சாளர் முரளிதரன் ஆவார்.

## கொழும்பு ஸாஹிராவின் 94ஆம் ஆண்டு பழைய மாணவர் இப்தார்







( தொகுப்பு: ஏ.எஸ்.எம்.ஜாவித், எம்.எஸ்.எம்.ஸாகிர் )

மருதானை ஸாஹிராக் கல்லூரியின் 94ஆம் ஆண்டு பழைய மாணவர்களில் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு சங்கத்தின் தலைவர் எஸ்.எம். நிபாஸ் மௌலானா தலைமையில் மாளிகாவத்தை செரன்டிப் மண்டபத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரியின் அதிபர் றிஸ்வி மரைக்கார், பேராசிரியர் எம்.ரி.ஏ.புர்கான், பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், கல்லூரியின் ஆளுநர் சபையின் தலைவர் பௌசுல் ஹமீத் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களும் சங்கத்தின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

நாட்டில் அனர்த்தங்கள் வரும் போது 94ஆம் ஆண்டு அங்கத்தவர்கள் தனது பூரண பங்களிப்பை வழங்கத் தயங்குவதில்லை. கொழும்பு ஸாஹிராவின் முன்னேற்றத்திற்காகவே அதிகமான உதவிகளைச் செய்து, அர்ப்பணிப்புடன் செயற்படும் இவர்கள், பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும் அதிக அக்கறை கொண்டு உதவி வருவதுடன் இப்பாடசாலையில் கற்றதன் மூலம் இவர்கள் அனைவரும் நல்ல நிலையில் காணப்படுவதோடு, இவர்களின் ஒன்று கூடல்கள் அனைத்தும் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு அமைவதான நடவடிக்கையாகவே இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது விஷேட உரையையும், துஆப் பிரார்த்தனையையும் கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் எம்.என்.எம். இஜ்லான் மௌலவியும் நன்றியுரையைசங்கத்தின் தலைவர் எஸ்.எம்.நிபாஸ் மௌலானாவும் வழங்கினர். நிகழ்வுகளை முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளர் எம்.இஸட். அஹ்மத் முனவ்வர் தொகுத்து வழங்கினார்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 12TH JUNE 2017